# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 15 செவ்வாய்க்கிழமை (01.12.2009)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 005


# பதின்மூன்றாவது சட்டத் திருத்தத்துக்கு

# ஜாதிக விமுக்தி பெரமுன ஒத்துழைக்கும்

## தலதா மாளிகையில் சரத் நம்பிக்கை தெரிவிப்பு

கண்டி, டிசெம்பர்1

அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் முயற்சிகளை ஜே.வி.பியினர் ஆரம்பத்தில் எதிர்த்து வந்தனர். ஆனால் இன்று நாட்டின் நலன் கருதியும், யுத்த பீதி நீங்கிவிட்டமையாலும் அவர்களும் இவ்விடயத்துக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளனர்.

- இவ்வாறு எதிர்க்கட்சிகளின் சார்பில் பொது வேட்பாளராக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா நேற்றுக் கண்டியில் வைத்துத் தெரிவித்தார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச் சுடர்

**உள்ளே**

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான விஞ்ஞானம் II பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்கள்.

**நாளை**

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான கர்நாடக சங்கீதம் I,II, பரதநாட்டியம் I,II பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள்.

## இடம்பெயர்ந்த வாக்காளர்களின் நிலை: ஆராய்வதற்கு 7 உயரதிகாரிகள் கொண்ட குழு

கொழும்பு, டிசெ.1

இடம்பெயர்ந்த வாக்காளர்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது வாக்களிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது பற்றி ஆராயத் தேர்தல்கள் செயலகத்தால் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இக்குழுவில் ஏழு சிரேஷ்ட அதிகாரிகள் இடம்பெறுகின்றனர் எனத் தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டது.

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து நிவாரணக் கிராமங்களில் தங்கியிருப்பவர்களின் வாக்குரிமையைப் பாதுகாக்கவும் இக்குழு

(20ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியின் அலுவலகம் அ'புரத்தில் தாக்கப்பட்டது

கொழும்பு, டிசெ.1

அநுராதபுரம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஜே.வி.பியின் மாவட்ட அலுவலகம் இனந்தெரியாத சிலரினால் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் தாக்கப்பட்டுள்ளதாக ஜே.வி.பியின் வட மத்திய மாகாண சபை உறுப்பினர் அநுர திஸாநாயக்க தெரிவித்தார். (சி)

## ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணம் நேற்று முதல் ஏற்பு

கொழும்பு, டிசெ. 1

எதிர்வரும் ஜனவரி 26ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் அதற்கான தமது கட்டுப்பணத்தைச் செலுத்துவதற்கான காலம் நேற்றுடன் ஆரம்பமானது.

பணம் செலுத்த விரும்பும் வேட்பாளர்களிடமிருந்து கட்டுப்பணத்தை ஏற்பதற்கான ஆயத்தங்களை தேர்தல் திணைக்களம் செய்திருந்தது.

எனினும், நேற்று எவரும் கட்டுப்பணம்

(20ஆம் பக்கம் பார்க்க)

## பிரான்ஸிலிருந்து கோழி இறக்குமதி நிறுத்தம்; பன்றிக் காய்ச்சல் அச்சமே காரணம்

கொழும்பு, டிசெ.1

பிரான்ஸிலிருந்து உயிருள்ள கோழிகளை இறக்குமதி செய்வதை இலங்கை அரசு தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது.

பறவைக் காய்ச்சல் அச்சம் காரணமாகவே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

பிரான்ஸில் பறவைக் காய்ச்சல் வேகமாகப் பரவி வருகின்றது என்று உலக விலங்குகள் சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளதையடுத்தே இத்தீர்மானம்

(20ஆம் பக்கம் பார்க்க)

## வேட்பு மனுத் தாக்கல் செய்த பின்னரே அரசின் கொள்கைப் பிரகடனம் வெளிவரும்

### ஊடகத்துறை அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, டிசெ.1

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான கொள்கைப் பிரகடனம் வேட்பு மனுத்தாக்கல் செய்த பின்னரே வெளியிடப்படும் என ஊடகத்துறை அமைச்சர் லஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்சந்திப்பொன்றில் கலந்துகொண்டு

(20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். ஊடகங்களுக்காக குரல் எழுப்புகிறது ஜே.வி.பி.

கொழும்பு, டிசெ.1

தமிழ் ஊடகங்கள் மீது பிரயோகிக்கப்படும் அழுத்தங்கள் நிறுத்தப்படவேண்டும் என ஜே.வி.பி. கோரிக்கை விடுத்துள்ளது.

குறிப்பாக யாழ்ப்பாண நகரில் இயங்கி வரும் ஊடகங்கள் மீது அதிக அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன என்று ஜே.வி.பி. சுட்டிக்காட்டியுள்ளது.

'உதயன்' உட்பட்ட பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கு அச்சுறுத்தல் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி அகதிகளுக்கு ஆஸி. தொடர்ந்தும் உதவும்

கொழும்பு, டிசெ.1

வவுனியா முகாம்களிலுள்ள வன்னி அகதிகளின் மீள் குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு தொடர்ந்தும் உதவி செய்வதற்கு ஆஸ்திரேலியா முன்வந்துள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## புலி உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் இந்தியா ஊடாகத் தப்ப முயற்சியாம்

கொழும்பு, டிசெ.1

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அழிவை அடுத்து இந்தியா ஊடாக வெளிநாட்டுக்குச் சட்ட விரோதமான முறையில் வெளியேற முயலும் இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக இந்தியச் செய்தி நிறுவனங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக

(20ஆம் பக்கம் பார்க்க)

## பன்றிக்காய்ச்சல் மரணம் ஒன்பதாக அதிகரிப்பு

கொழும்பு, டிசெ.1

பன்றிக்காய்ச்சல் தொற்றுக்கு இலக்காகி உயிரிழந்தவர்களின் எண் ணிக்கை ஒன்பதாக அதிகரித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

(20ஆம் பக்கம் பார்க்க)


உலக எயிட்ஸ் தினம் - World AIDS Day 2009

HIV/ AIDS தொடர்பில் உலகளாவிய வசதிகளை ஏற்படுத்துதலும், மனித உரிமைகளை மதித்தலும்

"Universal Access and Human Rights"

இணையத் தளங்களில் HIV/ AIDS தொடர்பான மேலதிக தகவல்களை அறிந்து கொள்ள,
www.aidscontrol.gov.lk
www.unaids.org
www.who.org
www.avert.org
இவை தவிர தேடல் பொறிகளூடாக (Search engines)தேவையான சொற்றொடர்களைப் பாவித்து உரிய இணையத்தளங்களூடாக தகவல்களைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

உலக எயிட்ஸ் தினம் 2009

ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி உலகம் பூராகவும் எயிட்ஸ் தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது. இதன் மூலமாக எயிட்ஸ் தொடர்பில் உலகின் கவனம் ஈர்க்கப்படுவதுடன் மக்கள் மத்தியில் சாதகமான மனநிலை மாற்றமும் தூண்டப்படுகிறது. உலக எயிட்ஸ் தினத்தின் இந்த வருடத்தின் தொனிப்பொருள் HIV/ AIDS தொடர்பில் பாதுகாப்புப்பெறுதல்,பரிசோதனைகளை செய்து கொள்ளுதல்,சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ளுதல் என்பன உலகமெங்கும் அனைவருக்கும் இலகுவில் கிடைக்கச் செய்தல் மற்றும் HIV/ AIDS தாக்கத்துக்குட்பட்டோரை சமூகத்தில் புறக்கணிக்காது அவர்களுடைய மனித உரிமைகளைபாதுகாத்தலும், அவர்களது பராமரிப்பு மற்றும் கவனிப்பை உறுதி செய்வதை ஊக்குவிக்கும் வகையில் Universal access and Human Rightd என்பதாக அமைந்துந்துள்ளது.

"HIVயிலிருந்து எம்மைப் பாதுகாத்திடுவோம்."

நிதியுதவி

ஆக்கம்: சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்.

அனுசரணை TRRO LIMITED


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இறுதி நாள்

அன்னை புத்தகசாலை அனுசரணையில்

காயத்திரி பப்ளிக்கேஷன் நிறுவன புத்தாண்டு

நிறைவையொட்டி

**மாபெரும்**
**புத்தகக் கண்காட்சியும்**
**மலிவு விற்பனையும்**

இடம் : யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

காலம் : காலை 8.00 - மாலை 4.00

(சி/562844)

காயத்திரி பப்ளிகேஷன் - 071-8357821


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



2009ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் உயிரியல் பிரிவில் (3A) சித்திகளைப் பெற்று அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்ற கொழும்பு சைவமங்கையர் கழக வித்தியாலய மாணவி

**செல்வி மைதிலி சிவபாதசுந்தரம்**

அவர்களை பாராட்டுவதில் பெரும் மகிழ்வடைகின்றோம். இவர் தொடர்ந்தும் கல்வித்துறையில் மேலும் பல சாதனைகள் புரிய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

வாழ்துவோர்:
அப்பம்மா, மாமாமார், மாமிமார்
சித்தப்பாமார், சித்திமார்,
பெரியப்பாமார், பெரியம்மாமார்,
மச்சான்மார், மச்சாள்மார்,
அண்ணாமார், அக்காமார்.

நாகபூசனி அம்மன்வீதி,
கோண்டாவில். (92674)

# காணவில்லை



நவாலி வடக்கு, மானிப்பாய் புலவர் குடியிருப்பைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான

**இராசரத்தினம் தயேந்திரன் (சசி)**

ஆகிய எனது கணவரை 19.11.2009ஆம் திகதியிலிருந்து காணவில்லை. அவரின் தே.அ.அ.இல. 800814995 V. தகவல் தெரிந்தவர்கள்/கண்டவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறியத்தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொ.பே.: 0779595780

தகவல் :
மனைவி - கிரிசாந்தி

(92660)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 07.07.1948

உதிர்வு 31.10.2009

சித்தவைத்தியர் அமரர்

**நாகன் கோதண்டபாணி (முருகையா)**

எமது தந்தையார் உயிர்பிரிந்தவேளை எமக்கு உந்து சக்தியாகவும், பக்கபலமாகவும் நின்ற உயர்ந்த உள்ளங்களுக்கும், மற்றும் துயரில் பங்கெடுத்தவர்களுக்கும், யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறை மாணவர்களுக்கும், ஏனைய அனைவருக்கும் நாம் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளோம்.

அதேவேளை இன்று(01.12.2009) செவ்வாய்க்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் படி உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

தும்பளை தெற்கு,
பருத்தித்துறை. (சி/562849)

பிள்ளைகள்.

# கண்ணீர் அஞ்சலி



எமது முன்னாள் மாவட்ட அரச அதிபராகவும் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் அரச அதிபராகவும் கடமையாற்றி இறைவனடி எய்திய

**கந்தையா பொன்னம்பலம்**

அவர்களின் பிரிவால் கலங்கி நிற்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிக்கழகம்
மாவட்டச்செயலகம்,
யாழ்ப்பாணம்.

(92683)

அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலக
உத்தியோகத்தர்கள்.

# புத்தாக்கப் போட்டிக்கு தெரிவாகியோருக்கு அவசர கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.1

மொறட்டுவ பல்கலைக்கழகத்தினால் யாழ். மத்திய கல்லூரியில் கடந்த 21 ஆம் திகதி நடத்தப்பட்ட புத்தாக்கப் போட்டியிலிருந்து தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகிய புத்தாக்குநர்களுக்கான அவசரக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ். பல்கலைக்கழக பௌதிகவியல் துறைப்பிரிவில் நடைபெறவுள்ளது.

மாணவர்கள் தங்கள் பெற்றோர் அல்லது தேசிய அடையாள அட்டை அல்லது அடையாளத்தை உறுதிசெய்யும் பொறுப்பாசிரியருடன் கலந்துகொள்ளுமாறு இப்போட்டிக்கான பொறுப்பாளர் கலாநிதி நா.சிவயோகன் கேட்டுக்கொண்டுள்ளார். (ஒ-1)

# யாழ்.இந்து மாணவரின் அனுமதி அட்டைகள்

யாழ்ப்பாணம்.டிசெ.1

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள யாழ்.இந்துக் கல்லூரி மாணவர்கள் நாளை புதன்கிழமை காலை 8மணிக்கு கல்லூரியில் தமக்குரிய அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அதிபர் அறிவித்துள்ளார். (ஒ)

# பிரதேச செயலக ரீதியாக சுகாதாரப் பணிமனைகள்

யாழ்ப்பாணம்.டிசெ.1

யாழ். மாவட்டத்தில் பிரதேச செயலக ரீதியாக சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள் ஆரம்பிக்கப்பட்டு இன்று தொடக்கம் இயங்கவுள்ளன.

இதன் அடிப்படையில் கரவெட்டி, நல்லூர், உடுவில், சண்டிலிப்பாய் ஆகிய பகுதிகளில் புதிய சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலகங்கள் இயங்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

யாழ்மாவட்டத்தில் இதுவரை பருத்தித்துறை, தெல்லிப்பழை, ஊர்காவற்றுறை, மானிப்பாய், சாவகச்சேரி, யாழ்ப்பாணம், கோப்பாய் ஆகிய 7 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகள் மட்டும் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

# தீவகத்தில் புகையிலைச் செய்கை

தீவுப்பகுதியில் புகையிலைச் செய்கை மேற்கொள்ளும் பணி மும்முரமாக நடைபெற்று வருகின்றது.

மண்டைதீவு மற்றும் புங்குடுதீவு பகுதிகளில் அதிகளவில் புகையிலை நாற்றுக்கள் நடும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த புகையிலை செய்கைக்கான விவசாயிகள் வடமராட்சி சென்று புகை யிலை நாற்றுக்களைக் கொள்வனவு செய்து வருகின்றனர். (1-224)

## திருத்தி வாசிக்கவும்

*28.11.2009 பக்கம் 16 இல் பிரசுரமான விளம்பரத்தில் தவறாக பிரசுரிக்கப்பட்ட பகுதி மீளவும் திருத்திப் பிரசுரிக்கப்படுகிறது.*

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு ''மனித உரிமைகள் இல்லம்'' நடத்தும் கைப்பணி ஆக்கப் போட்டி - 2009

போட்டிப் பிரிவு:
பிரிவு 1 : O/L மாணவர்கள்
போட்டிப் பிரிவு:
பிரிவு 2 : A/L மாணவர்கள்


## பொருளியற் கல்லூரி யாழ்ப்பாணம்

**A/L DAY CLASS**

நாளை ஆரம்பம் 8 A.M

குறிப்பு : இணுவில் பொருளியற் கல்லூரியில் 04.12.2009 வெள்ளி 7.30 A.M அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.


## தவறிவிட்டது

மானிப்பாய்க்கும் உடுவில் டச்சு வீதிக்கும் இடையில் சாவிக் கோர்வை ஒன்று 30.11.2009 அன்று தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கிறீன் மெமோறியல் வைத்தியசாலையில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி/562846)

## தவறிவிட்டது

கணேசபுரம், கிளிநொச்சி எனும் முகவரியுடைய சாந்தலிங்கம் அனுசூயா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (806952320 V) அடங்கிய சிறு கைப்பை சுந்தர்மடத்துக்கும் ஆரியகுளத்திற்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. இதைக் கண்டெடுத்தவர்கள் தபால் பெட்டிச்சந்தியில் உள்ள அருள்மணி பல்பொருள் வாணிபத்தில் ஒப்படைத்துதவவும். (92678)

# கண்ணீர் அஞ்சலி



சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் ஐக்கிய இராச்சியத்தை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற பொறியியலாளர்

**இரத்தினம் சர்வானந்தர்**

அவர்கள் அகாலமரணம் அடைந்ததையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சித்த மருத்துவ அலகு,
யாழ் பல்கலைக்கழகம்,
கைதடி. (92680)

துறைத்தலைவர், விரிவுரையாளர்கள்,
போதனை சாரா ஊழியர்கள்,
மாணவர்கள்.

# கண்ணீர் அஞ்சலி

**அமரர் பிலிப்ஸ் சேவியர் இராஜேந்திரா**

*(உட்கட்டமைப்பு அமைச்சு செயலாளரின் தந்தையார்)*

எந்திரி.ஏ.ஈ.எஸ்.இராஜேந்திரா செயலாளர், உட்கட்டமைப்பு அமைச்சு அவர்களின் பாசமிகு தந்தையார் அமரர். பிலிப்ஸ் சேவியர் இராஜேந்திரா அவர்கள் 29.11.2009 அன்று காலமானதையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பிரதம பொறியியலாளரும், நிறைவேற்றுப் பொறியியலாளர்களும், சக உத்தியோகத்தர்களும்.
வீதி அபிவிருத்தித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்/பருத்தித்துறை.

(சி/562843)

# மரண அறிவித்தல்கள்

## பஞ்சரத்தினம் ஜனார்த்தன்

(ஆசிரியர் யாழ்/இளையதம்பி இ.வி)



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பஞ்சரத்தினம் ஜனார்த்தன் (ஜனா) நேற்று (30.11.2009) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பஞ்சரத்தினம் - பங்கயராணி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும், சுதார்த்தன் (France), Dr.லலித்தாமணி (பல் மருத்துவர், பருத்தித்துறை அரசினர் வைத் தியசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராசா (ஓய்வு பெற்ற இ.மி.சபை ஊழியர்), இராஜரட்ணா (ஜேர்மனி), யோகராணி, நேசராணி, சரோஜினி ஆகி யோரின் அன்பு மருமகனும், நகுலராணி, மகாதேவன் (ஜேர்மனி), சதானந்தன் (கனடா) ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 14, கதிரவேலு ஒழுங்கை,
அரியாலை. (92682)

தகவல்:
மு.பஞ்சரத்தினம்
(தந்தை)

## வைத்தியஜோதி திருமதி நீற்றா இன்னாசித்தம்பி



சில்லாலை, இன்னாசித்தம்பி வைத்திய நிலைய வைத்திய ஜோதி திருமதி நீற்றா இன்னாசித்தம்பி நேற்று (30.11.2009) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார், அமரர் வைத்திய சிரோன்மணி எமில் இன்னாசித்தம்பியின் அன்பு மனைவியும், அமரர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி, ஸ்ரீமகள் (U.S.A), ஜெயந்தன், ரவிந்தன் (Canada) ஆகியோரின் அருமைத்தாயாரும், ஜொவித்தா, கலாநிதி ஜோர்ஜ் பிள்ளைநாயகம் (U.S.A), பிறீனி ஆகியோரின் அன்பு மாமியாரும், துஷாரா, தனுஷ்ரன், தனுஷா, தமாரா, பிரியாந்தன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (02.12.2009) புதன்கிழமை அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு சில்லாலை, கதிரைமாதா தேவாலயத்தில் திருப்பலியும் இறுதிச்சடங்குகளும் நிறைவேற்றப்பட்டு, சில்லாலை சேமக்காலையில் இன்னாசித்தம்பி நினைவுச் சிற்றாலயத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சில்லாலை,
பண்டத்தரிப்பு. (92690)

தகவல் :
ஜெயந்தன் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அணி சேரவும் அச்சம் பகைத்துக் கொள்ளவும் பயம்

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமது நிலைப்பாடு என்ன, கொள்கை - கோட்பாடுகள் எவை என்பனவற்றை யெல்லாம் நேற்றுமுன்தினம் தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் விவரித்துவிட்டார் எதிர்க்கட்சிகளின் சார்பில் பொதுவேட்பாளராக் களமிறங்கும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா.

மறுதரப்பில் களத்தில் நிற்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் போக்குகள், நிலைப்பாடுகள், திட்டங்கள் எவை என்பது தமிழர் தரப்புக்கு ஏற்கனவே தெரிந்தவைதான். தமது பழைய 'மஹிந்த சிந்தனை' திட்டத்தைத்தான் இம்முறையும் அவர் தூக்கிப்பிடிப்பார் - தூக்கிப்பிடிக்கின்றார் - என்பது வெளிப்படையானது.

இவற்றை வைத்துக்கொண்டுதான் சாதக, பாதக நிலைகளைக் கணக்கிட்டு ஒரு முடிவை எடுக்கவேண்டும் என்ற கட்டாயத்தில் உள்ளனர் தமிழர்கள்.

தமிழர் தரப்பு என்ன செய்ய வேண்டும் என்ற கேள்வி தமிழர்கள் மத்தியில் என்றால், அவர்களை எப்படி - எத் திசையில் - வழிப்படுத்துவது என்ற வினா தமிழ்த் தலைவர்கள் மத்தியில். இவ்விடயத்தில் தமிழ்த் தலைமைகள் நன்கு குழம்பிப் போய்த்தான் இருக்கின்றன. என்ன செய்யப் போகின்றீர்கள் என்று யாராவது கேட்டால், என்ன செய்வது என்று தெரியாமல் முழுசும் அத்தலைவர்கள். ''ஆராய்கிறோம். இன்னும் முடிவில்லை. உரிய காலம் வரும்போது சரியான திட் டத்தை அறிவிப்போம்.'' - என்றுமட்டும் சொல்லிச் சமாளித்து வருகின்றார்கள்.

ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரிக்கும்படி சொன்னால் ஜனாதிபதி மஹிந்தருடன் முண்டவேண்டிவரும். மஹிந்தரை ஆதரிக்கச் சொன்னால் நீதி, நியாயத்துடனேயே முரண்பட வேண்டிவரும். 'ஏறச்சொன்னால் எருதுக்குக் கோபம். இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம்!' - என்ற மாதிரிக்கதை போகின்றது. அதனால் இரண்டு பக்கமும் வழிகாட்ட முடியாமல் தவிக்கிறார்கள் முக்கிய தமிழ்த் தலைவர்கள்.

ஒட்டுமொத்தமாக நடுநிலையாவது வகித்துத் தப்பிப் பிழைக்கலாம் என்றால், அதற்கும் தமிழர் தரப்பில் உள்ள கருத்துருவாக்கிகள் விடுகின்றார்கள் இல்லை. எப்படியாயினும் ஒரு தீர்மானத்தை எடுத்து, முடிவு ஒன்றுக்கு வர வற்புறுத்துகின்றார்கள் உள்நாட்டிலும், புலம் பெயர்ந்த நாடுகளிலும் உள்ள கருத்துருவாக்கிகள்.

இந்த இழுபறி நிலையிலிருந்து எப்படியும் சமயோசிதமாகத் தப்பிப் பிழைப்பதற்காக, மூன்றாவது பொது வேட்பாளராகத் தமிழர் ஒருவரைக் களமிறக்கினால் என்ன என்ற யோசனை தமிழ்த் தலைவர்களிடம் உள்ளதாகக் கூறப்படுகின்றது.

தமிழர்கள் சார்பில் ஒருவரைப் பொது வேட்பாளராக இறக்கினால் அவருக்கு வாக்களிக்கும்படி தமிழர்களைக் கோருவதுடன் தமது பிரச்சினை முடிந்துவிடும். அதை யாரும் குறை சொல்ல முடியாது. அதற்காக ஜனாதிபதி மஹிந்தர் தரப்போ, எதிரணி தரப்போ கோபிக்கப் போவ தில்லை. எனவே தங்கள் தலை தப்பிவிடும் என்று கணக்குப் போடுகிறார்கள் போலும் தமிழ்த் தலைவர்கள்.

தத்தமது தலைகளைத் தப்ப வைப்பதை விடுத்து, தமிழர்களின் மீட்சி பற்றியே சிந்தித்து முடிவு எடுக்கவேண்டிய வரலாற்றுப் பொறுப்பில் தமிழ்த் தலைவர்கள் உள்ளனர் என்பதை அவர்களுக்கு நினைவூட்டுவது நமது கடமை.

1982 இல் ஜனாதிபதித் தேர்தலில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவா, ஹெக்டர் கொப்பேகடுவவா என்று வந்தபோது 'அவர் என்ன பெரியப்பன், இவர் என்ன சிற்றப்பனா?' என்று கேள்வி கேட்டு, இருபுறமும் ஆதரவு தெரிவிக்காமல் 'மதில் மேல் பூனை' நிலையை எடுத்துத் தப்பிக் கொண்டது தமிழர் விடுதலைக் கூட்டணி.

அதுபோல 2005 ஜனாதிபதித் தேர்தலின்போது 'இது சிங்களம் தனது தலைமையைத் தெரிவு செய்யும் தேர்தல். இதற்கும் எமக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை' என்று விடுதலைப் புலிகள் கூறிய கருத்தின்படி நடந்து இன்றைய நிலையில் தவிக்கிறது தமிழினம்.

இனிமேலும் இப்படி இரண்டும் கெட்டான் நிலையை எடுத்துத் தமிழர்கள் வாங்கிக்கட்ட முடியாது.

இன்றைய நிலையில் இந்த ஆட்சி தொடர அனுமதிப்பதா, இல்லையா? அனுமதிக்கக் கூடாதாயின் அதை மாற்றும் விடயத்தில் வெற்றிகரமாகப் பங்களிக்கக்கூடிய வலிமை தமிழர் தரப்புக்கு உண்டா? உண்டெனின் அதை எப்படி செயன் முறைப் படுத்துவது? இல்லை எனின் மாற்று வழிமுறை என்ன? - இவை பற்றிய கேள்விகளுக்குப் பதில் கண்டு, அவற்றின் அடிப்படையில்தான் சரியான தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும்.

வடக்கு, கிழக்குத் தமிழர்களைத் தமது பாரம்பரியத் தாயகம் குறித்துக் கூடக் கேள்வி எழுப்ப முடியாத நிலைமைக்குக் கொண்டு சென்ற இந்த ஆட்சியாளர்களுடன் அணி சேர்ந்தால் தமிழ் மக்கள் தங்களை நிராகரித்து விடுவார்களோ - தமது வாக்கு வங்கி சிதறி விடுமோ - என்ற கவலை பல தமிழ்த் தலைவர்களுக்கு.

வாக்கு வங்கிக்குப் பயந்துகொண்டு ஆட்சித் தரப் புடன் 'அணி சேராக் கொள்கையை' கடைப்பிடிக்கும் பல தமிழ்த் தலைவர்கள் தமது மக்களின் நலனுக்காக ஆட்சித் தரப்புடன் பகைத்துக் கொள்ளவேண்டியிருந்தாலும், அதற்கும் கூட அஞ்சுகின்றார்கள்.

இரண்டுக்கும் நடுவில் காய் நகர்த்தும் எத்தனமே களத்தில் நடப்பதாகத் தென்படுகின்றது.

காலம் கனியும் வரை காய் நகர்த்துவதைத் தாமதிப்பது வேறு. ஆற, அமர சிந்தித்து, விடயங்களைச் சீர்தூக்கிப் பார்த்து, காரியமாற்ற முயல்வது வேறு. கடைசிவரை சந்தர்ப்பத்துக்குக் காத்திருந்து, பொறுத்த சமயத்துக்குப் பார்த்திருந்து சாணக்கியமாகச் செயற்படுவது வேறு.

ஆனால், இவற்றையெல்லாம் விட்டுவிட்டு, அரசியலில் திடமான முடிவெடுக்கும் திராணி இல்லாமல் - சந்தர்ப்பத்தைச் சமாளித்துத் தப்பிக் கொள்வதற்காக - காலத்தை இழுத்தடித்து, பிரச்சினைக்கு முகம் கொடுக்காமல், நாசூக்காக விலகிக்கொள்ள எத்தனிப்பது வேறு.

இன்றைய வரலாற்றுக் கால கட்டத்தில் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் தமிழ்த் தலைமைகள் எடுக்கப் போகும் முடிவுகள் காலங்காலமாக விமர்சிக்கப்படும் விவகாரங்களாக அமையக்கூடியவை. - இது அவர்களின் கருத்துக்கும், கவனத்துக்கும் சமர்ப்பணம்.

# செலான் வங்கியில் வைப்பிலிடுவோருக்கு ஒரு சதவீத அதிகரித்த வட்டி வழங்கப்படும்

## நிறைவேற்றுப் பணிப்பாளர் நடராஜா தகவல்

யாழ்ப்பாணம்,டிசெ.1

யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டுள்ள செலான் வங்கியின் புதிய கிளைகளில் பணத்தை வைப்பிடும் வாடிக்கையாளர்களுக்கு ஒரு சத வீதம் அதிகரித்த வட்டி டிசெம்பர் 31 ஆம் திகதி வரை வழங்கப்படவுள்ளது. இதனை வாடிக்கையாளர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

-இவ்வாறு நெல்லியடியில் செலான் வங்கியின் புதிய கிளைத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய செலான் வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆர்.நடராஜா தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தனியார் வங்கித் துறையில் செலான் வங்கியின் உருவாக்கமும், உள் நுழைவு காத்திரமான ஒரு பாதிப்பை உண்டுபண்ணியது. அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டு மக்கள் நலனை மட்டுமே முதன்மையாகக் கொண்டு செயற்பட்டதால் மக்களின் இதயத்தைப் புரிந்துகொள்ளும் வங்கியாகச் செலான் வங்கி பரிணமித்தது. இதனால் 2002 ஆம் ஆண்டு வரை உன்னத நிலையை அடைந்திருந்தது.

அக்காலத்தில் தனியார் வங்கிகளில் இரண்டாவது இடத்தை செலான் வங்கி பிடித்திருந்தது. எனினும் காலப் போக்கில் சில குறைபாடுகளால் எமது வங்கி பின் தங்கியது.

எனினும் மத்திய வங்கி ஆளுநரின் தீர்க்கதரிசனமான முடிவாலும், புதிய பணிப்பாளர் சபையின் சீரிய வழிப் படுத்தலாலும் மீண்டும் எழுச்சி பெற்று முன்னைய நிலை நோக்கி செலான் வங்கி நகரத் தொடங்கி உள்ளது. இதனால்தான் இப்போது புதிய கிளைகளை நிறுவ முடிந்திருக்கிறது.

இப்போது திறக்கப்படும் கிளைகளில் வைப்பிடும் வாடிக்கையாளர்களுக்காக எமது வங்கித் தலைவர் ஈஸ்ட்மன் நாரங்கொட வட்டி வீதத்தை டிசெம்பர் 31 ஆம் திகதி வரை ஒரு சத வீதத்தால் அதிகரித்திருக்கிறார். இதனால் வழமையாக சாதாரண வட்டி வீதத்தை விடவும் அதிகரித்த வட்டியை வாடிக்கையாளர்கள் பெற்றுக் கொள்ள முடியும். எனவே புதிய கணக்குகளை ஆரம்பித்து இதனை சரியானபடி மக்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் - என்றார் .(ஒ-4)

# 400 குடும்பங்கள் அடுத்தவாரம் வவுனியாவில் மீள்குடியேற்றம்

வவுனியா,டிசெ.1

நிவாரண கிராமங்களில் உள்ள மேலும் 400 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அடுத்தவாரம் வவுனியா வடக்குப் பிரதேசங்களில் மீள்குடியமர்த்தப்படவுள்ளரென வவுனியா மாவட்ட அரசஅதிபர் திருமதி பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

புளியங்குளம் வடக்கு மற்றும் தெற்கு, மன்னக்குளம், கனகராயன் குளம் வடக்கு மற்றும் தெற்கு உள்ளிட்ட எட்டுப் பிரதேச செயலாளர் பிரிவுகளில் இவர்கள் மீள்குடியமர்த்தப்படுவர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வவுனியா வடக்கில் இன்னும் 20 பிரதேச செயல்ாளர் பிரிவுகளில் மக்கள் மீள்குடியர்த்தப்படவுள்ளனர். இங்கு எட்டுப் பிரதேச செயலாளர் பிரிவுகளில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு மீள்குடியேற்றத்துக்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இங்கு அரச அலுவலகங்கள் மீள் இயங்கத் தொடங்கியுள்ளதுடன் கனகராயன் மகாவித்தியாலயம், புளியங்குளம் வித்தியாலயம் ஆகிய இரண்டும் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் மீளத் திறக்கப்படுமென்றும் அரச அதிபர் குறிப்பிட்டுள்ளார். (50)

# எயிட்ஸ் தின சுவரொட்டி போட்டியில் வெற்றி பெற்றோர்

யாழ்ப்பாணம்.டிசெ.1

சர்வதேச எயிட்ஸ் தினத்தை ஒட்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் நடத்தப்பட்ட சுவரொட்டிப் போட்டியில் வெற்றி பெற்றோரின் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அவர்களின் விவரம் வருமாறு:-

பாடசாலை மாணவருக்குரிய போட்டி

முதலாம் இடம் - ஐஸ்வர்யா நாகலிங்கம் (யாழ். இந்து மகளிர்), இரண்டாம் இடம்- வித்தியா ரட்ணேஸ்வரன் (யாழ். இந்து மகளிர்), மூன்றாம் இடம்- ரவிதாஸ் ராஜாராம் (தேவரையாளி இந்துக் கல்லூரி),

ஆறுதல் பரிசுகள்

தாரணி ஜானகிராமன் (யாழ். இந்து மகளிர்), திவ்வியா ஜெயராஜா (யாழ். இந்து மகளிர்), வடிவேலு சரவணபவன் (சாவகச்சேரி இந்து), யசோதா பாலச்சந்திரன் (இணுவில் இந்து), குணரட்ணம் சத்தியதாசன் (யாழ்.சன்மார்க்க ம.வி.),

திறந்தபோட்டி

முதலாம் இடம்- நாகரத்தினம் ராஜன் (சங்கத்தானை, சாவகச்சேரி), இரண்டாம் இடம்-சவுந்திஸ் தர்மதாஸ்(உடுவில்), மூன்றாம் இடம் - செபலிங்கம் ஜெகன்(ஆனந்தக் குமாரசாமி விடுதி, யாழ். பல்கலைக் கழகம்)

ஆறுதல் பரிசுகள்

அருளப்பு அன்ரன் கிறேசியன் (சுன்னாகம்), தவராசா கபேசன்(இணுவில்), சிவநாதம் சத்தியசங்கர்(ஆனந்தக் குமாரசாமி விடுதி,யாழ்.பல்கலைக்கழகம்), சண்முகம் நிருபராஜ் - (ஆனந்தக்குமாரசாமி விடுதி, யாழ். பல்கலைக்கழகம்), துஜீலா துரைரட்ணம் (உரும்பிராய்),

வெற்றியாளர்களுக்கான பரிசுகள் இன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் எய்ட்ஸ் தின விழாவில் வைத்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (50)

# உலக எயிட்ஸ் தின விழா யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்

யாழ்ப்பாணம், டிசெ.01

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனம் ஆகியன இணைந்து நடத்தும் உலக எயிட்ஸ் தினவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாகாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் கலந்துகொள்வார். விசேட விருந்தினராக உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசகர் டாக்டர் என்.சிவராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக யுனிசெவ் அமைப்பின் யாழ். வலயப் பொறுப்பதிகாரி டாக்டர் டவானி அராக்கி, நிக்கொட் அமைப்பின் பிரதித் திட்டப் பணிப்பாளர் ஆர்.சிவரூபன், அகதிகளுக்கான ஐ.நா நிறுவனத்தின் யாழ்.அலுவலகப் பொறுப்பதிகாரி மரியா திரேசியாஜரா ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இந்த விழாவில் 'யாழ்ப்பாணத்தில் எயிட்ஸ் நோயின் நிலை' என்னும் தலைப்பில் யாழ்.போதனா வைத்திய சாலை வைத்திய நிபுணர் டாக்டர் சி.கணேசலிங்கம் உரையாற்றுவார்.

எயிட்ஸ் நோய் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகளும், உலக எயிட்ஸ் தினத்தையொட்டி நடத்தப்பட்ட சுவரொட்டிப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பும் இந்த விழாவில் இடம்பெறும். (50-224)

# உடுவில் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்தோருக்குக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,டிசெ.1

வவுனியா நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டு உடுவில் பிரதேச செயலர் பிரிவில் தங்கி உள்ளவர்களுக்கு அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனம் 20 ஆயிரம் ரூபா பணக்கொடுப்பனவையும் உலர் உணவு அல்லாத பொருள்களையும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு வழங்கவுள்ளது.

20 ஆயிரம் ரூபா பணக்கொடுப்பனவு வழங்கப்பட உள்ளவர்களின் பெயர்ப் பட்டியல்கள் ஏற்கனவே கிராம அலுவலர்களிடம் வழங்கப்பட்டுள்ளமையால் அதனைப் பார்வையிட்டு அதில் பெயர் உள்ளவர்கள் உரிய கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை, ஏற்கனவே 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவைப் பெற்று, உலர்உணவு அல்லாத பொருள்கள் பெறாதவர்களையும் இன்று காலை 8.30 மணிக்கு பிரதேச செயலகத்துக்கு சமுகம் தந்து உரிய பொருள்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (50-68)

# இலட்சார்ச்சனை

யாழ்பாணம்,டிசெ.1

இருபாலை கற்பகப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் விநாயகர் விரதத்தை ஒட்டிய இலட்சார்ச்சனை நாளை மறுதினம் வியாழக்கிழமை ஆரம்பமாகிறது. எதிர்வரும் 22 ஆம் திகதி வரை இலட்சார்ச்சனை நடைபெறும்.

தினமும் பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகி இலட்சார்ச்சனை நடைபெறும். (ஒ-1)

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை | 16 02.12.2009 |
| | புதன்கிழமை |
| திதி: | பூரணை |
| | பி.ப.02.12 வரை |
| நட்சத்திரம்: | ரோகிணி |
| | பி.இ.02.48 வரை |
| சுபநேரம்: | 04.45-06.25 வரை |
| ராகுகாலம்: | 12.15-01.45 வரை |

# தென்பகுதியிலிருந்து தரைப்பாதை வழியாக யாழ்ப்பாணத்துக்கு மரக்கறி வகைகள்

யாழ்ப்பாணம், டிசெ.1

யாழ்ப்பாணத்துக்குத் தென்பகுதியிலிருந்து மரக்கறி வகைகள் ஏ-9 தரைப்பாதையூடாக எடுத்து வரப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.குடாநாட்டுச் சந்தைகளில் மரக்கறி வகைகளின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன.

இதனையடுத்து தென்னிலங்கையிலிருந்து தரைப்பாதையூடாக யாழ்ப்பாணத்துக்கு மரக்கறிகள் எடுத்து வரப்படுகின்றன.

தம்புள்ள பகுதியிலிருந்து மரக் கறிகள் ஓரளவு வந்து சேர்வதால் அவற்றின் விலை குடாநாட்டுச் சந்தைகளில் சற்றுக் குறைவடைந்துள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

கத்தரிக்காய், பச்சைமிளகாய், பயிற்றங்காய் போன்றவையே அதிகளவில் எடுத்து வரப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீலன் அலுமினியம் பிற்றிங்-படமாடம் திறப்பு விழா

மீண்டும் யாழ்.மண்ணில்
மிகப் பொலிவுடன் குதூகல
ஆரம்பம்: 01.12.2009

செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் வரும் சுபவேளையில்
காலத்தால் அழியாத கற்பனைக்கு எட்டாத
எமது புதுக்கடை சீலன் அலுமினிய பிற்றிங், படமாடம்
மற்றும் இங்கு கண்ணாடி அலுமினிய வார் என்பன மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

டோகா, டுபாயில் 10 வருட அனுபவம் உள்ளவரால்
உங்கள் ஓடர் தரமாகவும் உறுதியாகவும் நியாயமான
விலையில் செய்து தரப்படும்.

இல. 54, கே.கே.எஸ். வீதி,
கொக்குவில் சந்தி, யாழ்ப்பாணம்.
T.P: 0778050918 (9562845)

உரிமையாளர் :
இ.தவசீலன்.



# PATRICIAN INSTIUTES

பற்றிசியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

தொழில்நுட்பப் பயிற்சி நெறிகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

FIDE ET LABORE

ஆரம்பம்: 07.12.2009

## 1.COMPUTER COURSES

| | |
|---|---|
| a. Advanced in Computer programming | Duration 8 months |
| b. Diploma in Micro Soft Office | Duration 4 months |
| c. Diploma in Type Setting | Duration 3 months |
| d. Diploma in Computericed Accounting | Duration 4 months |
| e. Diploma in Desk Top Publishing | Duration 4 months |
| f. Diploma in Access Including S.Q.L | Duration 3 months |
| g. Diplama in Web Multimedia | Duration 4 months |
| h. Diploma in Software Engineering | Duration 6 months |
| i. Diploma in Micro Media | Duration 4 months |
| j. Diploma in Vedio Editing | Duration 4 months |
| k. Internet & E-mail | Duration 1 months |
| l. Professional Diploma in Graphic Design | Duration 6 months |
| m. Computer Hardware Technology | Duration 4 months |
| n. General Information Technology (GIT) | Duration 4 months |
| o. Information&Communication Technology (GIT) | Duration 4 months |
| p. Children kids | Duration 4 months |

## 2.CERTIFICATE COURSES

I. MS WORD-2007 XP
II. MS EXCEL-2007XP
III. MS ACCESS-2007XP
IV. MS POWER PINT-2007XP
V. VISUAL BASIC
VI. JAVA
VII. JAVA SCRIPT
VIII. MYOB
IX. ADOBE PHOTO SHOP
X. PAGE MAKER
XI. FLASH
XII. QUICK BOOK
XIII. SIMPLY ACCOUNTING
XIV. PRINT SHOP DELUXE
XV. COREL DRAW

DURATION 3 MONTH EACH

3.SHORT HAND AND TYPING (ENGLISH) Duration 6 months
சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும்(ஆங்கிலம்)
கணனி மூலமும் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும்.

4.SHORT HAND AND TYPING (TAMIL) Duration 6 months
சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும்(தமிழ்)
கணனி மூலமும் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும்.

5.GENERAL MOTOR MECHANISM (Petrol & Diesel வாகனங்கள்)
மோட்டார் வாகனம் திருத்தல் Duration 6 months

6.GENERAL ELECTRICIAN(Wiring & Winding) Duration 6 months
ஜெனரல் எலக்ரிஷன் (மின்சார இணைப்பு,மோட்டார் றிவைண்டிங்)

7.RADIO & T.V.REPAIRING Duration 8 months
வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி திருத்தல்

8.LATHE MACHINE OPERATION Duration 3 months
கடைச்சல் இயந்திரப் பயிற்சி (on the job training வழங்கல்)

9.ARC WELDING Duration 3 months
மின் ஒட்டுநர் பயிற்சி (on the job training வழங்கல்)

10.CARPENTRY (with use of machinery) Duration 6 months
மரவேலை (on the job training வழங்கல்)

11.REFRIGERATION AND AIR CONDITIONING Duration 6 months
குளிர்சாதனப் பெட்டி திருத்தல்

Note :
1. பயிற்சிக் கட்டணங்களை தவணை முறையில் செலுத்தலாம்.
2. வன்செயலால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் போதிய ஆதாரம்காட்டி பங்குக் குருவானவரின் (Parish Priest)சிபார்சின் பெயரில் பயிற்சி கட்டணத்தில் சலுகையைப் பெற்றுக் கொள்ளலாம்.
3. இந்த நிறுவனத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படும்.
4. பயிற்சிநெறிகள் சம்பந்தமான சகல விவரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு

REGISTRAR
PATRICIAN INSTITUTE,
61(59), ST.PATRICK'S
ROAD,
JAFFNA.

Tel.No :021 222 6148
Fax No :6148
E - mail :spitec@sltnet.lk

(சி/562837)



# லைடன் புடைவை நிலையம்

இல.410, ஆஸ்பத்திரி வீதி (பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

அதிரடி விலைக்கழிவு 01.12.2009 - 31.12.2009

எமது அன்பிற்கினிய வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு

ஆடவர், பெண்களுக்கான அனைத்து துணி வகைகளுக்கும் கழிவுண்டு. ரெடிமேட் ஆடைகளுக்கு அதிகூடிய கழிவு உண்டு.

(சி/582757)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை அதிபர்
திருமதி கமலாசனி
யோகநாதன்
(Special Trd Social Study
SLTS - I, SLPS - 2:1
அவர்கள் அதிபர் தரம் 2:1 இற்கு
பதவி உயர்வு பெற்றமையை
பாராட்டி வாழ்த்துவதுடன் அவர்
பணி மேலும் உயரவும்
வாழ்க்கையில் வளம்பெறவும்
மனமார வாழ்த்துகின்றோம்.

உப அதிபர், ஆசிரியர்கள்
மாணவர்கள்
யா/ கெற்பேலி அரசினர் தமிழ்கலவன்
பாடசாலை, மிருசுவில்.

(92670)



# VACANCIES FOR TECHNICAL OFFICER CUM COMMUNITY MOBILIZER

UN - HABITAT invites applications for the post of Technical Officer cum Community Mobilizer on Contract basis.

1. Number of Posts: 2 (Two)
2. Place of work: Jaffna District
3. Qualifications :
The Technical Officer cum Community Mobilizer will be a person with G.C.E. (O/L) with a teachnical background with at least, five years experience or National Certificate of Technology (NCT) or equivalent qualification with minimum of two years of experience in Housing, Infrastructure or other development activities in Pulic Sector, non - governmental organizations or International agencies. Local knowledge of areas assigned, fluency in the Tamil language and experience in working with communities will be an added advantage.
4. Closing Date : 10.12.2009

Please apply with Bio - Data and copies of certificate and contact Telephone nos. Email addresses etc.to the following address:

District Manager
UN - HABITAT,
No.84, Temple Road.
Jaffna.
Telephone No.s:0212228137, 0213216419
Email address parameswaran@unhabitat.lk

District Manager
UN - HABITAT.

(சி/562833)


## தேசிய வாசிப்பு மாத பரிசில் நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.01

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத் தேசிய வாசிப்பு மாத பரிசில் நாள் நிகழ்வுகள் எதிர்வரும் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பொது நூலக மண்டபத்தில் பிரதேசசபைச் செயலாளர் வே. சிவராஜசிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமாரும், சிறப்பு விருந்தினர்களாக ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட உதவி அமைப்பாளர் து. அலெக்ஸ்ஸாண்டர் (சாள்ஸ்) சாவகச்சேரி பிரிவு விவசாயப் போதனாசிரியர் க.விஜயகுமார் ஆகியோர் கலந்து கொள்வர். (ஒ-207)

## உதவிப் பணம் பெறுவோர் கவனத்திற்கு

யாழ்ப்பாணம், டிசெ.01

தென்மராட்சி பிரதேச பொது சன மாதாந்த உதவிப் பணம் பெறுவோர், நோய்களால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கான டிசெம்பர் மாதக் கொடுப்பனவுகள் நாளை புதன்கிழமை தொடக்கம் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் வழங்கப் படவுள்ளன.

இந்தக் கொடுப்பனவுகளை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் செ. ஸ்ரீனிவாசன் அறிவித்துள்ளார். (ஒ-207)


# கண்ணீர் அஞ்சலி



அமரர் பஞ்சரத்தினம் ஜனார்த்தன்
(ஆசிரியர், யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்)
எமது ஆசிரிய நண்பன்
ப. ஜனார்த்தன் அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதோடுஅவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பலாலி ஆசிரியர் கலாசாலை
வர்த்தகப்பிரிவு ஆசிரிய மாணவர்கள்2000/2001

(92688)



## விற்பனைக்கு

Computer கடைக்குரிய Glass fitting (நீளம் 10 அடி, உயரம் 8 அடி) மற்றும் கணனி உதிரிப்பாகங்கள், P4 கணனிகள் ஆகியன விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு - 0774521445

(92689)

## கடை வாடகைக்கு

பருத்தித்துறை பஸ் நிலையத்தில்



# கண்ணீர் அஞ்சலி



யாழ். இளையதம்பி இந்து வித்தியாலய வணிக
ஆசிரியரும் எமது ஊரின் வளர்ச்சிக்காகப்
பாடுபடுபவர்களில் ஒருவருமான
அமரர் பஞ்சரத்தினம் ஜனார்த்தன்
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடுஅவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
அரியாலையூர் நண்பர்கள்.

(92687)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக வங்கி வீடமைப்புத் திட்டத்தில்

# மூன்றாம் கட்டப் பயனாளிகளுக்கு வழங்குவதற்கு 155 மில்லியன் ரூபா நிதியுதவி கிடைத்தது

யாழ்ப்பாணம்,டிசெ.1

உலக வங்கி வீடமைப்புத் திட்டத்தின் வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நிர் மாணத்திட்டத்தின்கீழ் மூன்றாம் கட்டப் பயனாளிகளுக்கான கொடுப்பனவுகள் வழங்குவதற்கு 155 மில்லியன் ரூபா நிதி கிடைத்துள்ளது.

இத் திட்டத்தில் வேலைகள் யாவும் பூர்த்தியடைந்த பய்னாளிகளுக்கான கொடுப்பனவுகள் இந்த நிதியிலிருந்து வழங்கப்படவுள்ளதாக உலக வங்கி வீட மைப்புத் திட்டத்தின் யாழ்.மாவட்டத் திட் டப் பணிப்பாளர் வி.சாம்பசிவம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரி வித்தவை வருமாறு:-

வடக்கு - கிழக்கு வீடமைப்புத் திட் டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்ட பய னாளிகளில் வீடமைக்கும் பணிகளைப் பூர்த்தி செய்த பயனாளிகளுக்கே இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

நான்காம் கட்டப் பயனாளிகளுக்கான முதலாம் கட்டக் கொடுப்பனவுகளை வழங்கு வதற்கு 64 மில்லியன் ரூபா நிதி கிடைத் துள்ளது.

இதில் ஆயிரத்து 907 பேருக்கான கொடுப் பனவுகள் அடுத்தவார முற்பகுதியில் வழங் கப்படும் என்றார். (50-9)

## ஆசிரிய உதவியாளர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ.1

ஆசிரிய உதவியாளர்களாக நியமனம் பெற்ற தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பாகச் சமூக சேவைகள் அமைச்சிடம் கலந்தாலோசிக்கப்பட உள் ளது.

சம்பந்தப்பட்டவர்கள் தங்களது நிய மனக் கடிதத்தின் மூலப்பிரதியுடன் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு புதிய உயர்கல்லூரி நிறுவன வளாகத் திற்குச் சமுகம் தருமாறு ஆசிரிய உதவி யாளர் சங்கத் தலைவர் சி.சிவகாந்தன் தெரிவித்துள்ளார். (ஏ-15)

## பிரசித்திபெற்ற இடங்களுக்கு கணக்காய்வாளர் நாயகம் விஜயம்



யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள கணக் காய்வாளர் நாயகம் யாழ்.குடாநாட்டில் உள்ள வர லாற்றுப் பிரசித்திபெற்ற இடங்களுக்குத் தமது குழுவினருடன் சென்று பார்வையிட்டுள்ளார்.

சண்டிலிப்பாய்ப் பிரதேசத்தில் உள்ள மாதகல் பகுதியில் சங்கமித்திரை வந்திறங்கிய இடம், கந்தரோடை புதை பொருள் ஆராய்ச்சி மையம், வடமராட்சி வல்லிபுரக் கோயில் உட்படப் பல்வேறு இடங்களுக்கு விஜயம் மேற்கொண்டு பார்வையிட்டுள்ளார். கணக்காய்வாளர் நாயகத்துடன் சுமார் 30 பேர் கொண்ட குழுவும் இந்த இடங்களைப் பார்வையிட்டுச் சென்றுள்ளது. (50-68)

## புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.1

தென்மராட்சி கல்வி வலயத்தில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள், கற்பித்த ஆசிரியர்கள் ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் நடத்தப்பட்டது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் 75 மாணவர் களும் ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர். யாழ். மத்திய கல்லூரி முன்னாள் அதிபர் க.இராசதுரை நினைவாக நினைவுக் கேடயங்கள் வழங்கப்பட்டன.

கழகத் தலைவர் லயன் ப.செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழக 306பி1 மாவட்ட முதலாவது உதவி ஆளு நர் லயன் எஸ்.ஜெயவத்சலன் கலந்துகொண்டார். நிகழ்வின் அனுசரணையாளர் க.நடராசா, தென்மராட்சி கல்வி வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் கோ.வரதராசமூர்த்தி உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ஏ-207)

## மாலை நேர மீன் சந்தையால் ஆனைக்கோட்டையில் சூழல் பாதிப்பு

நவாலி, டிசெ.1

ஆனைக்கோட்டைப் பகுதியில் வீதி யில் இயங்கிவரும் மாலை நேர மீன் சந்தை யினால் போக்குவரத்துக்குப் பெரும் இடை யூறு ஏற்பட்டு வருவதுடன், சுற்றுச் சூழ லும் பாதிப்படைகின்றது.

நீண்டகாலமாக கரைப்பிரான் பகுதி வீதியில் இயங்கி வந்த இந்தச் சந்தை மக் களின் எதிர்ப்பினால் மானிப்பாய்ப் பிரதேச சபையினர் பொலிஸாரின் உதவியுடன் அண்மையில் அகற்றி இருந்தனர்.

அதைத் தொடர்ந்து மீன் வியாபாரிகள் ஆனைக்கோட்டைப் பகுதியில் வீதியோ ரங்களிலும் வளவுகளிலும் வியாபாரம் செய்து வருகின்றனர்.

இதனால் போக்குவரத்துச் செய்வதில் பல இடையூறுகள் ஏற்படுகின்றன. மேலும் இங்கு வெட்டப்படும் மீன்கழிவுகளையும் பழுதடைந்த மீன்களையும் குடியிருப் பில்லாத வெறும் காணிகளிலும் வெள் ளம் ஓடும் வாய்க்கால்களிலும் அவர்கள் கொட்டிவிட்டுச் செல்கின்றனர். அவை துர்நாற்றம் வீசுவதுடன் சுகாதாரத்திற்கும் பங்கம் ஏற்பட்டுள்ளது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் ஏதாவது ஓர் இடத்தைத் தெரிவு செய்து நிரந்தரமா கச் சந்தையை ஏற்படுத்திக் கொடுத்தால் இந்தப் பாதிப்புகளைக் கட்டுப்படுத்த முடியும் என்று பொதுமக்கள் கருத்துத் தெரி விக்கின்றனர். (ஏ-100)

## காக்கைதீவு மீன் சந்தையை மீள இயங்க வைக்க ஏற்பாடு

நவாலி,டிசெ.1

கல்லுண்டாய் காக்கைதீவு மீன் சந்தையை மீளவும் செயற்படவைப்பதற்கான நடவ டிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நாட்டுச் சூழ்நிலை காரணமாக இச் சந்தையைப் பாவிக்க முடியாத நிலைமை இருந்து வந்தது. அதனால் கடலுணவு களை மீனவர்களும், வியாபாரிகளும் கல் லுண்டாய் பிரதான வீதியோரங்களிலும் மற்றும் உள்வீதிகளிலும் விற்பனை செய்து வருகின்றனர். இதன் காரணமாக வாக னங்கள், பாதசாரிகள் செல்வதில் தடங் கல்கள் ஏற்படுகின்றன.

இது பற்றி அடிக்கடி முறைப்பாடுகள் மானிப்பாய்ப் பிரதேசசபைக்குக் கிடைக் கப் பெற்று வருகின்றன. இதனைக் கருத் திற் கொண்டு இதை செயற்படவைத்து, வரி வசூலிப்பது மூலம் சபைக்கு வருவாய் கிடைக்கும். அத்துடன் போக்குவரத்துக் கான தடைகளையும் இலகுவாக்க முடியும். இதனைக் கருத்திற் கொண்டு பிரதேச சபை யின் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் சந் தையை மீண்டும் இயங்க வைக்க நட வடிக்கை எடுத்துள்ளார். (ஏ-100)

## உலக எயிட்ஸ் தின விழா யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்

யாழ்ப்பாணம், டிசெ.01


அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், பிராந் திய சுகாதார சேவைகள் திணைக்களம், அகதிகளுக்கான ஐ.நா நிறுவனம் ஆகியன இணைந்து நடத்தும் உலக எயிட்ஸ் தினவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடை பெற வுள்ளது.

மாகாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் டாக்டர் ஏ.கேதீஸ்வரன் தலைமை யில் நடை பெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் என்.சண்முக லிங்கன் கலந்துகொள்வார். விசேட விருந்தினராக உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசகர் டாக்டர் என்.சிவராஜாவும், சிறப்பு விருந் தினர்களாக யுனிசெவ் அமைப்பின் யாழ். வலயப் பொறுப்பதிகாரி டாக்டர் டவானி அராக்கி, நிக்கொட் அமைப்பின் பிரதித் திட் டப் பணிப்பாளர் ஆர்.சிவரூபன், அகதிகளுக் கான ஐ.நா நிறுவனத்தின் யாழ்.அலுவல கப் பொறுப்பதிகாரி மரியா திரேசியாஜரா ஆகி யோரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இந்த விழாவில் யாழ்ப்பாணத்தில் எயிட்ஸ் நோயின் நிலை என்னும் தலைப்பில் யாழ். போதனா வைத் தியசாலை வைத்திய நிபு ணர் டாக்டர் சி.கணேசலிங்கம் உரையாற்றுவார்.

எயிட்ஸ் நோய் தொடர்பான விழிப்பு ணர்வு நிகழ்விற்கு உலக எயிட்ஸ் தினத்தை யொட்டி நடத்தப்பட்ட சுவரொட்டிப் போட் டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிச ளிப்பும் இந்த விழாவில் நடைபெறும். (50-224)







மலேசிய நாட்டைச் சேர்ந்த றோட்டறிக்கழக அங்கத்தவர்களும், கொழும்பு மேற்கு றோட்டறிக்கழக அங்கத்தவர்களும் அண்மையில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கு விஜயம் செய்துள்ளனர்.

அவர்கள் மாலையிட்டு வரவேற்கப்படுவதை முதற் படத்திலும், கல்லூரிக்கான [illegible] மலேசிய றோட்டறிக் கழகத் தலைவர் எஸ்.சந்திரசேகரன், கொழும்பு மேற்கு றோட்டறிக்கழகத் தலைவர் எஸ்.நிஸங்க ஆகியோர் பாடசாலை அதிபர் இ.இராசசேகரத்திடம் வழங்குவதை இரண்டாவது படத்திலும், கொழும்பு மேற்கு றோட்டறிக் கழக உறுப்பினர் ஜெரோம் இராஜேந்திரன் உரையாற்றுவதையும் இறுதிப் படத்திலும் காணலாம். (50-2[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்வரன் ரான்ஸ்போட் சேர்வீஸ்

## ஏ-9 பாதையூடாக போக்குவரத்துச் சேவை




- குளிரூட்டிய பொருள்கள் எம்மிடம் ஒப்படைக்கப்பட்டு 24 மணி நேரத்தில் உரிய இடத்தில் கையளிக்கப்படும்.
  (சொசேஜ் வகைகள், பழ வகைகள், ஐஸ்கிறீம் மற்றும் சொக்லேட் வகைகள், இறைச்சி வகைகள் - வாரத்தில் இரு தடவைகள் இச் சேவை நடைபெறும்)
- முற்றிலும் காப்புறுதி செய்யப்பட்ட பாதுகாப்பான போக்குவரத்துச் சேவை.
- எவருமே எதிர்பார்த்திராத மிகக் குறைந்த கட்டணங்கள்.
- அரச, தனியார் நிறுவனங்களின் நம்பிக்கையை வென்ற ஒரே நிறுவனம்
- எமது நிறுவனத்திற்கு முகவர்கள் எவரும் இல்லை.
- பொருள்கள் ஒப்படைத்து 3 நாள்களில் கிடைக்கும்
- இருதசாப்த காலமாக மிகச் சிறந்த போக்குவரத்துச் சேவையை வழங்கும் நிறுவனம்

★ தலைநகரிலும் யாழ்ப்பாணத்திலும் அலுவலகங்களைக் கொண்டு, புதிய லொறிகளுடன் செயற்படும் நூற்றுக்கு நூறு வீதம் உத்தரவாதம் அளிக்கக் கூடிய நிறுவனம்

இன்றே நாடுங்கள்; உங்கள் சேவையை உறுதிப்படுத்துங்கள்

| ஈஸ்வரன் ரான்ஸ்போட் சேர்வீஸ் | ஈஸ்வரன் ரான்ஸ்போட் சேர்வீஸ் |
|---|---|
| 201 B, டாம் வீதி, கொழும்பு - 12. | 69,115, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். |
| T.P.: 0112433889, 0112435247, 0777674119 | T.P.: 021 222 2813, 021 222 4317 |

# யாழ்ப்பாண முகாமையாளர் கழகம் நடத்தும் கருத்தரங்கு நாளை மறுதினம்

யாழ்ப்பாணம் டிச.1

யாழ்ப்பாணம் முகாமையாளர்கள் கழகம் நடத்தும் 36ஆவது கருத்தரங்கு நாளை மறுதினம் வியாழக்கிழமை நல்லூர் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அன்றையதினம் மாலை 3 மணிக்கு ஆரம்பமாகவிருக்கும் இந்நிகழ்வில் மனித வளங்கள் மற்றும் பாதுகாப்பு பரிவர்த்தனை ஆணையகத்தின் பணிப்பாளர் சி.கானைல் உரை நிகழ்த்துவார். ஆளணி முகாமைத்துவ கல்வி நிறுவனம் சார்பாக அறிமுகம் என்ற தலைப்பில் கருத்துரை இடம்பெறும். (ப)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/அளவெட்டி தெற்கு
அ.மி.த.க.பாடசாலையில் 2009ஆம் ஆண்டு
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி
150 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த
எமது பாடசாலை மாணவன்

**ஸ்ரீ உதயமோகன் அட்சயன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன்
பல்கலைகளையும் கற்றுப் பல்லாண்டு காலம்
வாழ வாழ்த்துகின்றேன்.

வாழ்த்துவோர்: ஸ்ரீ.சியாமளா (ஆசிரியர்).

(சி/562831)

## The Royal College of Jaffna

சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப்பயில மற்றும் இலக்கணம் ஆங்கில மூலம் By ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி 426 (302), K.K.S.வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 077 6751649 (92669)

## பாலன் மில்

தேங்காய் எண்ணெய்
நல்லெண்ணெய் } ஆலை

கொப்பறா, எள், இலுப்பைப் பருப்பு (விதை கோது உடைத்ததும்) சூரியகாந்திவிதை போன்றவற்றை 3 கிலோ முதல் 3000 கிலோவரை தனித்தனி இயந்திரத்தில் அரைத்து எண்ணெயாக உடன் ஊற்றித் தரப்படும். நாடவேண்டிய ஒரே இடம் பாலன் மில், மாவடிச்சந்தி, வட்டுக் கோட்டை.

## தவறிவிட்டது

உடுவில் கிழக்கு, கற்பகப் பிள்ளையார் கோயிலடி எனும் முகவரியுடைய தில்லைநாதன் சாந்தராஜ் என்பவருடைய தே.அ.அட்டை (900310020 V) வசாவிளானுக்கும் சுன்னாகத்துக்கும் இடையில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியுடன் அல்லது பின்வரும் தொ.பேயுடன் தொடர்பு கொள்ளவும். தொ.பே.: 0779849922 (92663)

## மில் சேவைகள்

தேங்காய் எண்ணெய், ஈர அரிசிமா, அரிசிமா, கோப்பி, உழுந்து உடைத்தல், கடலைமா ஆக்குதல் போன்ற சேவைகளை உடனுக்குடன் பெறலாம்.

தொடர்பு: No.26, சீனிவாசகம் வீதி, யாழ்ப்பாணம்.
(கொம்பியூட்டர் சென்ரர் முன்பாக) (92683)

## காணிவிற்பனைக்கு

அராலி தெற்கு, இறைசாளம்பை (முதலியார் வளவு) வீடும் கிணறும் பரப்பு நிலை இலாச்சம் ஏழேமுக்கால் (7 3/4 பரப்பு) கலட்டித் தோட்டம் ஒழுங்கையில் மகாவித்தியாலயம், தபாற்கந்தோர் ஆகியவற்றிற்கு அண்மையாக. விரும்புவோர் உடனடியாக கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.வ.பரமானந்தம் சட்டத்தரணியும் நொத்தாரிசுவும் துர்க்காபுரம், K.K.S. வீதி, தெல்லிப்பழை.தொ.பே. இல.: - 021 373 5649 (92871)

25 ஆவது ஆண்டில் தடம் பதிக்கும்....

## உதயன்

வடமராட்சி மாணவர்களுக்காக உதயன் நிறுவனம் நடத்தும் மாபெரும் புதிர்ப் போட்டி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் வாசகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மேலும் ஒரு வார காலம் நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

இன்று சனிக்கிழமையுடன் முடிவடைய இருந்த இந்தப் போட்டி எதிர்வரும் *டிசெம்பர் மாதம் 6ஆம் திகதி* வரை நீடிக்கப்பட்டுள்ளது. எனவே உங்கள் விடைத்தாள்களைப் பாடசாலைகள் மற்றும் உதயன் முகவர் நிலையங்களில் அமைக்கப் பட்டுள்ள விசேட பெட்டிகளில் சேர்ப்பித்து உங்கள் வெற்றி வாய்ப்பை உறுதி செய்யுங்கள்.

## உங்களுக்கு ஆர்வம் உண்டா?



வடமராட்சியில் பிரதேச செய்தியாளர்கள் பின்வரும் இடங்களில் தேவை

- பருத்தித்துறை
- உடுப்பிட்டி
- வல்வெட்டித்துறை
- அல்வாய்
- தொண்டைமானாறு
- துன்னாலை
- தும்பளை
- இடத்தனை

உதயனின் பிரதேச செய்தியாளர்களாகப் பணிபுரிய அரிய சந்தர்ப்பம்

உங்களிடம் பின்வரும் தகுதிகள் இருப்பதாகக் கருதினால் உங்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பங்களை நெல்லியடியில் உள்ள உதயன் உப பணிமனையில் 07.12.2009 இற்கு முன்னர் ஒப்படைக்கவும்.

- 21 வயதுக்கு மேற்பட்டவர்கள்
- நாட்டு நடப்புக்களைக் கண்டறிவதில் நாட்டம் உள்ளவர்கள்
- ஜி.சி.ஈ.உயர்தரத்தில் சித்தியடைந்திருப்பது விரும்பத்தக்கது
- தமிழ் மொழியில் சரளமாக எழுதும் ஆற்றல் தேவை

## இரண்டாம் ஆண்டு நினைவு நாள்



### தம்பிராஜா துபாஜினி

பிறப்பு
17.09.1989

இறப்பு
01.12.2007

ஆண்டிரண்டு ஆனாலும்
ஆறிடுமோ எம் நெஞ்சம்
அன்பாலும் பண்பாலும்
அனைவரையும் கவர்ந்து விட்டு
அவனியில் எமை விட்டுச்
சென்றதேனோ?
அழியா நினைவுகளாய் என்றும் - நீ
எம் நெஞ்சமதில் வாழ்ந்திடுவாய்.

இல.259, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பே.:0773101540

குடும்பத்தினர். (92666)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப்பெற்று பாடசாலைச் சமூகத்திற்குப் பெருமை தேடிய மாணவச் செல்வங்கள்

அண்மையில் வெளியாகிய புலமைப் பரிசில் பரீட்சையில் அந்தந்தப் பாடசாலை மட்டத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று பாடசாலைச் சமூகத்திற்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் தமது சொந்த ஊருக்கும் பெருமை தேடிக்கொடுத்த மாணவச் செல்வங்களின் கருத்துக்களைத் தொகுத்து 'உதயன்' வாசகர்களுக்காகத் தருகின்றோம். தொடர்ந்து படியுங்கள்.



## கனகசபை கிருசாலினி
### வவுனியா அருணாசலம் நலன்புரிநிலையம்
### புள்ளிகள் - 136

எனது அப்பா வியாபாரம் செய்பவர். வன்னியில் இடம் பெற்ற யுத்தம் காரணமாகப் பல்வேறு இடப்பெயர்வுகளைச் சந்தித்துப் பின் உயிர்பிழைத்தால் மட்டும் போதுமென்று வவுனியா அருணாசலம் நலன்புரி நிலையத்தில் தஞ்சமடைந்தோம்.

முகாமில் தறப்பாழ் கொட்டிலில் இருந்தாலும் எனக்குப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் குறையவே இல்லை. எமது குடும்ப வறுமையை எண்ணிப் படித்தேன்.

முகாமில் இருக்கும் போது அப்பா எனக்கு வினாத்தாள்கள், பயிற்சிப் புத்தகங்கள் என்பவற்றையெல்லாம் கஷ்ரத்தின் மத்தியிலும் வாங்கித்தந்து உற்சாகப்படுத்தினார்.

அத்துடன் எனது வகுப்பாசிரியர் ஸ்ரீகலா, கரோலின் நிசாந் ஆகியோரும் பாடசாலை அதிபரும் நிறைவான ஒத்துழைப்பை நல்கினார்கள். எதிர்காலத்தில் விஞ்ஞானியாக வரவேண்டும். என்பதே எனது எதிர்கால இலட்சியம். நிச்சயம் அந்த இலக்கினை அடைய தொடர்ந்தும் முயற்சிப்பேன்.



## அருள்ராசா இமல்டா
### வவுனியா அருணாசலம் நலன்புரிநிலையம்
### புள்ளிகள் - 149

எனது தந்தை வெளி நாட்டில் வசிக்கிறார். எனது தாயார் வீட்டுப் பணி செய்பவர். நான் வீட்டில் மூத்தபிள்ளை. அதனால் அம்மா என்னை ஊக்கத்தோடும் ஆர்வத்தோடும் கல்வி கற்பித்தார்.

அதிபர், ஆசிரியர்களும் எனக்கு ஊக்கத்தோடு கல்வி கற்றுக் கொடுத்தார்கள். நான் 1-2 வரை யா/ வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் கல்வி கற்றேன். பின்னர் முல்லைத்தீவு கொக்கிளாய் அ.த.க. பாடசாலையில் தரம் 2 முதல் 4 வரை கல்வி கற்றேன் . 5 ஆம் தரத்தை முல்லைத்தீவு மந்துவில் அரசரத்தினம் மகாவித்தியாலயத்தில் கற்றேன். நாட்டின் யுத்த சூழ்நிலை காரணமாக 6 மாதங்கள் கல்விகற்க முடியவில்லை.

6 மாதங்கள் அருணாசலம் நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்து 4 மாதங்கள் கல்வி கற்றேன்.

அங்கிருந்த அதிபர், எனது வகுப்பாசிரியர், ஏனைய ஆசிரியர்களும் மிகவும் அர்ப்பணிப்புடன் எனக்கு கல்வி கற்பித்தனர்.

எனது கல்விக்கு ஆசிரியர் காட்டிய ஆர்வம், அக்கறை என்னால் மறக்க முடியாது. வழிகாட்டி நூல்கள் பெற்றுத் தருவதற்காக மிகவும் கஷ்டப்பட்டதை என்னால் மறக்க முடியாது. எனது கல்விக்கு ஏணியாக இக்கட்டான சூழ்நிலையிலும் ஆர்வம் காட்டிய அதிபர், ஆசிரியர், எனது பெற்றோர் என்றும் போற்றுதற்குரியவர்கள்.

சந்திப்பு : மூர்த்தி, அனுஷ்மன்



## நந்தகுமாரன் லக்சிகா
### வவுனியா அருணாசலம் நலன்புரிநிலையம்
### புள்ளிகள் - 118

எனது அப்பா சிற்றூழியராகப் பணிபுரிகிறார். அம்மா வீட்டுப் பணி செய்பவர். எனது குடும்பம் பத்துத்தடவை இடப்பெயர்விற்கு உள்ளாகியது. இடப்பெயர்வினால் படிக்க முடியாத நிலையிலிருந்தது. இந்த இடப்பெயர்வினால் எனது அம்மா ஷெல் விழுந்ததால் காயமடைந்தார். இந்நிலையில் எப்போது ஊருக்குச் செல்வோம் எனக் காத்திருந்தோம். பின்பு பூந்தோட்டம் கல்வியியற்கல்லூரி முகாமிற்குத் தப்பிப்பிழைத்து வந்தோம். அம்மா நடக்க முடியாத காரணத்தினால் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அதனால் அப்பாவும், நானும், அண்ணாவும் கவலையுடன் இருந்தோம்.

அப்பா நான் படித்து முன்னேற வேண்டும் என்பதற்காக அங்குள்ள பாடசாலையில் சேர்த்து விட்டார். அங்கு படிப்பதற்குப் பல வசதிகளைச் செய்தார்கள். எனக்குப் பல பயிற்சிப் புத்தகங்கள், வினாத்தாள்கள் என்பனவற்றை வாங்கித் தந்தார். நான் ஆர்வத்தோடு படித்து வந்தேன். புலமைப்பரிசில் பரீட்சை நெருங்கியது. அதற்குள் செங்கண்மாரி நோயினால் பீடிக்கப்பட்டேன். அந்த நோய் மாறியது. பின்பு சிறிது நாள்களின் பின்பு 2 ஆவதுமுறையும் செங்கண்மாரி நோயினால் பீடிக்கப்பட்டேன். எனக்கு உடல்நிலை பலவீனமாக இருந்தது. நான் பரீட்சை எழுதும் ஒவ்வொரு கணமும் தலைவலி, நெஞ்சு வலி போன்றவை ஏற்பட்டன. இவைகளைப் பொருட்படுத்தாது பரீட்சையை எழுதி முடித்தேன். எனது உயர்புள்ளிக்கு பெற்றோர், சகல ஆசிரியர்களும் அதிபரும்தான் காரணம் ஆகும். அதனால் எனது பாடசாலை அதிபரான விஜயநாதன், ஆசிரியர்களான வளர்மதி, சிறிநதி, குமுதினி, திலகேசன், கயவதனா, குணநாயகி ஆகியோருக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன். எனது எதிர்கால இலட்சியம் வைத்தியராக வரவேண்டும் என்பதானும்.



## சந்திரன் கலைச்செல்வன்
### ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை
### புள்ளிகள் - 179

நான் எனது ஆரம்பக்கல்வியை ஆரம்பத்திலிருந்தே இப்பாடசாலையிலேயே பயின்றதனால் இப்பாடசாலை மீது எனக்கு அளப்பரிய பற்றிருந்தது.

எனது குடும்பத்தில் நானே செல்லப்பிள்ளை. எனது பெற்றோர்கள் எனது கல்விக்கு மிகவும் ஊக்குவிப்புத் தந்தார்கள்.

எனது பாடசாலை ஆசிரியர்கள்ஏனைய மாணவர்களையும், என்னையும் தனிப்பட்ட முறையில் கவனித்தமையானது எனது பெறுபேறு உயர்ந்தமைக்கு ஒரு காரணமாகும்.

அது மட்டுமல்லாமல் பாடசாலை மட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவனாக நான் திகழ்ந்தது, அதற்காக ஏனையோர் என்னைப் பாராட்டுகின்றமையானது எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தருகின்றது.

அதுமட்டுமல்லாமல் யாழ். மாவட்டத்தின் பிரபல தனியார் கல்வி நிறுவனத்தில் கல்வி பயின்றமையானது எனது வெற்றிக்கு மேலும் உறுதுணையாக இருந்தது.

பரீட்சை எழுதிவிட்டு வீடுவந்து மீளச் செய்து பார்க்கும் போது, நான் சித்தி அடைவேன் என நினைத்தேன். எனினும் 179 புள்ளிகளைப் பெற்றதும், அதுவும் பாடசாலை மட்டத்தில் முதலாவதாகத் திகழ்வதும் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. எனது வெற்றிக்கு உறுதுணையாக இருந்த அதிபர், ஆசிரியர்கள், நண்பர்கள் அனைவருக்கும் இந்த நேரத்தில் நன்றி கூறிக் கொள்கின்றேன்.



## அருளானந்தம் மெறின் றொசாந்தினி
### வவுனியா அருணாசலம் நலன்புரி நிலையம்
### புள்ளிகள் - 119

எனது அப்பா விவசாயம் செய்பவர். அம்மா வீட்டுப்பணி செய்பவர். நான் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் தரம்1 தொடக்கம் தரம் 4 வரை கல்விகற்றேன். வன்னியில் இடம்பெற்ற போரினால் எனது புத்தகங்களை இழந்தேன். புத்தகங்களை இழந்த நிலையிலும் துப்பாக்கிச் சூட்டிலும் ஷெல்த்தாக்குதல்கள், விமானத்தாக்குதல்கள் மத்தியிலும் எனது கல்வியைத் தொடர்ந்தேன்.

பின்னர் நான் அருணாசலம் அகதி முகாமில் எனது வகுப்பாசிரியருடைய உதவியினாலும், அதிபருடைய முயற்சியினாலும் பெற்றோருடைய ஊக்கத்தினாலும் எனது தன்னம்பிக்கையினாலும் விடாமுயற்சியுமே பரீட்சையில் சித்தியடையக் காரணமாக அமைந்தது.எனது குடும்பம் வறுமையாக இருந்தாலும் எனது பெற்றோர் எனது கல்விக்குத் தேவையான பயிற்சிப் புத்தகங்களையும் வாங்கித்தந்தார்கள்.

எனது கஷ்டங்களை நினைத்து எனது குடும்பத்தையும் பெற்றோரையும் மனதில் நிறுத்தி எனது கல்வியை ஆர்வத்துடன் தொடர்ந்தேன். எதிர்காலத்தில் ஒரு வைத்தியராக வரமுயற்சி செய்வேன். என்னை நன்றாகப் படிக்கவைத்த எனது வகுப்பாசிரியருக்கும் அதிபருக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

# ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை; மேலும் சில முடிவுகள்

யாழ்ப்பாணம்.டிச.01

கடந்த 26 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள 2009 ஆம் ஆண்டுக்குரிய ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் மேலும் சில முடிவுகளை பாடசாலை அதிபர்கள் 'உதயனுக்கு' அனுப்பிவைத்துள்ளனர். அவற்றின் விவரம் வருமாறு!

**கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி**

**கலைப்பிரிவு**

சி.கீதா-2ஏசி, ச.திலீப்குமார்-ஏ2பி, சி.தனுசியா-ஏபிசி, எ.ஜெயதர்சினி- ஏபிசி, த.தனுஷா-ஏபிசி, ச.வித்யா-ஏபிசி, சி.பிரதீபா-ஏபிஎஸ், தி.துஷ்யந்தன்-3பி, சி.யசிந்தா-ஏ2சி.

**யாழ். இந்து மகளிர் கல்லூரி**

**உயிரியல் பிரிவு**

ம.வத்சலா -ஏபிசி, சி.அபிசாதனா- ஏ2சி, ம.விதுஷாயினி- 2பிசி, ம.நிலக்ஷி-பி2சி, ஸ்ரீ.பகீரதி-பி2சி, வி.தாட்சாயினி-பிசிஎஸ், த.கவிதா- 3சி, சி.ரோகினி -3சி, த.பிரதாயினி-3சி, க.தாரகா-3சி, தி.உமாப்பிரியா-3சி, செ.சோபிகா-3சி,

**கணிதப்பிரிவு**

சி.ஆரணியா-3பி,நா.சிவகாமி-பி2சி, க.தயாளி-பி2சி.

**வர்த்தகப்பிரிவு**

ஜெ.லேகா-3ஏ, ஆ.வானுஜி-3ஏ, ச.சோபிகா-3ஏ, கு.பிரசாந்தி-2ஏபி, பா.சாருகா-2ஏபி, அ.சியாமளா-2ஏபி, க.சூரியா-2ஏபி, சி.துஷானி-2ஏபி, ம.அஜந்தா-2ஏசி, க.ஜனனி-ஏபிசி, ஜெ.சஜிதா-ஏபிசி, த.வினோதினி-ஏபிசி, பா.சரண்யா-ஏபிசி, சு.கம்சிதா-ஏபிசி, அ.பிருஷாலினி-3பி, தே.சிந்துஜா-3பி, சி.சுபாஜினி-3பி, ஜெ.யாழினி-3பி.

**கலைப்பிரிவு**

சி.தனுஷா- 3ஏ, ந.டனிஷா-3ஏ, க.ஈஸ்வரஜெனனி-3ஏ, ர.இந்துஜா-3ஏ, த.பிரியதர்சினி-2ஏபி, ஜெ.சர்மிளா-2ஏபி, கு.கோபிகா-2ஏசி, ர.தனுஜா-2ஏசி, இ.புவிநிலானி-2ஏசி, ம.ஸ்ரீசாயிஜெனனி-ஏ2பி, ந.மீரா-ஏ2பி, கை.பிரதீபா-ஏ2பி, சு.ரதீபா-ஏ2பி, செ.விபுசணி-ஏ2பி, ப.பிரபாஷினி-ஏ2பி, மு.சுலோசனா- ஏ2பி, இ.அனுதா-ஏ2பி, கு.லக்ஷாயினி-ஏ2பி, யோ.சிந்துவராகி-3பி, த.நிவேதிதா- 3பி, நா.ஐஸ்வர்யா-3பி, க.மாதுஷா-3பி, ம.மயூரதி-3பி, பு.மதுரா-ஏபிசி, அ.கஜேந்தினி- ஏபிசி, ர.கம்சினி-ஏபிசி, ம.உசேந்தினி-ஏபிசி, கு.துஷாந்தினி-ஏபிசி, ச.நிஷாந்தி- ஏபிசி, ஆ.சுமங்கலி-ஏபிசி, செ.பவிதா- ஏபிசி.

**வேலணை மத்திய கல்லூரி**

**கலைப்பிரிவு**

கி.உதயராஜ்-3ஏ, க.யமுனா-3ஏ, வே.நிரோஷா-2ஏபி, கு.கவிதா-2ஏபி, வ.விஜயதர்சினி-2ஏபி, செ.மயூரி-2ஏபி, கோ.கிரிதரன்-2ஏசி, வ.அர்ச்சனா-2ஏசி, வ.கம்சா-ஏ2பி, அ.சிவலிங்கம்-ஏபிசி, பா.அனுசிகா-ஏபிசி, செ.ராதிகா-ஏபிசி, தி.விஜிகரன்-ஏபிசி, செ.அகலியா-ஏபிசி, வி.நிஷாந்தினி-3பி, கு.குஜேந்தி-3பி, ஞா.கனகசபை-3பி.

**வர்த்தகப்பிரிவு**

த.தனுஷா ஏ2சி, த.குகதாஸ்-பி2சி.

**பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்**

வ.கிருஷா-2ஏபி, த.யூலியட்சிறோமி-2ஏபி, செ.டனிசினி-ஏ2பி, சி.கவிதா-ஏ2பி, ச.மேனுகா-ஏபிசி, ப.உமா-ஏபிசி, வை.அபிராமி-ஏபிசி, ம.சர்மிளா-ஏ2சி, த.யசோதா-பி2சி, ம.புஸ்பறோசா- பிசிஎஸ்.

**பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை**

**கணிதப்பிரிவு**

கே.வினோபா-ஏபிசி, எஸ்.பிருந்தா-3சி, வி.சுமதி-சி2எஸ், எம்.மயூரி-சி2எஸ், பி.துசிதா-சி2எஸ், எஸ்.றஜிதா-சி2எஸ்.

**விஞ்ஞானப் பிரிவு**

எஸ்.அபிராமி-ஏ2பி, ரி.பவித்திரா-ஏ2பி, வி.சிவதர்சினி-[illegible] ஏபிசி, எம்.லாவண்யா-[illegible]-2பிசி, எஸ்.கார்த்தியா-2பிசி, ரி.அபிரா-பி2சி, வி.கிருஷ்ணாணந்தி-பி2சி, ஆர்.பவித்திரா- பிசிஎஸ், ஆர்.ஜெயசுதா- 3சி.

**வர்த்தகப்பிரிவு**

எஸ்.நிலானி-2ஏபி, என்.ராஜினி-ஏ2பி, எஸ்.நளினி-2பிசி, ஜி.கவிதா-2பிஎஸ்.

**கலைப்பிரிவு**

பி.விஜிதா-3ஏ, வி.நிரோஜா-3ஏ, ஜெ.நித்தியா-2ஏபி, ஜெ.நிரோஜா-2ஏபி, கே.மயூரி-2ஏபி, ஆர்.தர்மளா-2ஏபி, எஸ்.தனுசியா-2ஏபி, எம்.வித்தியா-2ஏபி, ரி.ஜனனி-2ஏபி, ஏ.சிந்துஜா-2ஏசி, கே.லோசனா-2ஏசி, ஜெ.அனுசியா-2ஏசி, ஜி.துவாரகா-2ஏசி, ரி.மேரிபிருந்தா-2ஏசி, ஆர்.நித்தியா-ஏ2பி, ஆர்.ஐசிக்கா-ஏ2பி, ஆர்.ஐஸ்வரியா-ஏ2பி, ஜி.சரிதா-ஏ2பி, ஜி.பிருந்தா-ஏ2பி, ஜெ.றூபா-ஏ2பி, ரி.தனுஜா-ஏ2பி, ரி.லாவண்யா-ஏ2பி, பி.மேரிலிப்பின் சுலக்சனா-ஏ2பி.

**யா/மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பழை**

**கணிதப்பிரிவு**

இ.முரளிதரன்-2ஏபி (மா.நி-17), இ.தனுசன்-2ஏபி (மா.நி-26), ஜெ.கௌசி[illegible] (மா.நி-91), பா.நீதுஜன்-2பிசி, சி.பிரணவன்-பி2சி, து.கஜன்-பி2சி, ஞா.பிருந்தா-3சி, செ.ஜீவனா-3சி, சி.பரிசுதன்-2சிஎஸ், சு.லிகிதரன்-சி2எஸ்.

**உயிரியல் பிரிவு**

ந.நிதர்சன்-பி2சி (மா.நி-133), க.திருமகள்-2சிஎஸ், ஞா.பிரதீப்-சி2எஸ், சி.யதுகுலன்-சி2எஸ், த.நிஷாந்தன்-சி2எஸ், க.நிரோஜன்-3எஸ், பி.அஜிலன்-3எஸ்.

**வர்த்தகப்பிரிவு**


சி.ஜெயபிரபாகர்-2ஏபி (மா.நி-52), மு.மோகனா-ஏ2பி (மா.நி-84).

**கலைப்பிரிவு**

வி.கிருயா- 3ஏ (மா.நி-22), க.விதுசா 3ஏ (மா.நி-48), இ.ருசாந்தினி- 3ஏ (மா.நி-49), ச.ஜபாகர்- 3ஏ (மா.நி-51), ந.மதுரா-3ஏ (மா.நி-93), வீ.நிசாந்தி-2ஏபி, செ.நிரோஜ்-2ஏபி, இ.கவிதா-ஏ2பி, ஜெ.சரண்யா-ஏ2பி, க.துஷ்யந்தி-ஏ2பி, ம.மயூரஸ்-ஏ2பி, கோ.திலீபன்-ஏ2பி, இ.இந்துஜா-2ஏசி, ந.சுகன்யா-ஏ2சி, க.இதயராஜ்-ஏ2சி, சி.கஜந்தினி-ஏபிசி, இ.சஞ்சிகா-ஏபிசி, ஞா.டயானாதர்சினி-ஏபிசி, ந.காயத்திரி-ஏபிசி, அ.சுமி-ஏ2சி, தி.சுமித்தா-3பி, ஜெ.பிரசன்னா-3பி, ப.பிரியதர்சினி-3பி, க.தயாளன்-3பி, இ.கயந்தன்-3பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் அண்ணா இராஜேந்திரம்
B.A. (Cey)
(ஓய்வுபெற்ற பதிவாளர், மேல்நீதிமன்றம், யாழ்ப்பாணம்)

மண்ணில் 13.09.1942
விண்ணில் 18.11.2002
திதி: சதுர்த்தசி (01.12.2009)

தாங்கள் காட்டிய வழியிலே நடந்து
தங்கள் பெருமையைப் பேணி நிற்கின்றோம்.

என்றென்றும் தங்கள் நினைவுடன்
வாழும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.

'மல்லிகை',
ஏழாலை மேற்கு,
ஏழாலை. (92632)

## நினைவஞ்சலி

மூன்றாம் ஆண்டு — நான்காம் ஆண்டு



திரு. சுப்பிரமணியம் வையாபுரி
மலர்வு:- 23.12.1926
உதிர்வு:- 04.12.2006

திருமதி. சறோஜினிதேவி வையாபுரி
மலர்வு:- 29.09.1939
உதிர்வு:- 21.08.2005

ஆண்டுகள் பலநூறு ஆனாலும் அன்னையும் தந்தையும் நீவிரே
இன்னொரு பிறவி இருக்கும் என்றாலும் உறவுகள் உறுதியில்லை.
இப்பிறவியில் எங்கள் இனிய உறவு எப்பிறவியிலும் இனிவராது
கூடிவாழ்ந்த பறவைகள் கூடுவிட்டுப் பேயினும் வாடிநிற்கும் ஓர்பறவை
வானத்தை நோக்கி வழிபார்த்திருக்கும் உங்கள் வாழ்த்தொலிக்காய்!

24, பொன்னப்பா ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுடன்
வை. சுரேஸ் (மகன்)

## விழி நீர் சொரிந்து 8ஆம் ஆண்டு நினைவுகளுடன்...

தோற்றம் 15 . 01 . 1944
மறைவு 30 . 11 . 2001



### அமரர் கந்தையா பன்னிருகரம்

(முன்னாள் உரிமையாளர், நியூ, கௌரி மிதிவண்டி வாணிப நிலையம், நெல்லியடி)

திதி: 01.12.2009

ஊர்போற்ற வாழ்ந்தீர்கள்
உறவுகள் மகிழ்ந்திட நடந்தீர்கள்
பிள்ளைகள் உயர்ந்திட உழைத்தீர்கள்
இறுதியில் கண்ணீரில் நனையவிட்டுச் சென்றீர்கள்
நீங்கள் காட்டிய பாதையில்
வாழ்ந்து உயர்ந்திட வழிகாட்டியாய்
என்றும் எங்களுடன் வாழ்ந்திடுவீர்கள்.

''சாந்திபவனம்'',
கொற்றாவத்தை,
கரவெட்டி. (92531)

உங்கள் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்.

## விற்பனைக்கு

வீட்டுப் பாவனைக்குரிய மேசைகள், கதிரைகள் உடன் விற்பனைக்கு.
தொடர்பு: 077 8737257 (92812)

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய் மெமோறியல் வீதியில் 4¼ பரப்புக் காணியில் அமைந்துள்ள புது வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0717353524 (92612)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,டிசெ.1

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நினைவு தினமும் 'நடு ஆர்ப்பமுத்த நன்மரம்' நூல் வெளியீட்டு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் ச.சிவானந்தராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவும், சிறப்பு விருந்தினராக கலாசார உத்தியோகத்தர் த.பிரதீஸ்வரனும் கலந்து கொள்வர். ஆசியுரையை கீரிமலை நகுலேஸ்வரக்குருக்கள் நிகழ்த்துவார். (50-201-112)

## பாராட்டு வைபவம்

யாழ்ப்பாணம்,டிசெ.1

நவாலி மகா வித்தியாலயத்தில் நீண்ட காலம் உடற்கல்வி ஆசிரியராகப் பணியாற்றி வவுனியா கல்வி வலயத்திற்கு இடமாற்றலாகிச் செல்லும் திருமதி வி.பேரின்பத்தை பாராட்டும் வைபவம் இன்று காலை 9 மணிக்கு இடம்பெறும்.

பாடசாலை முதல்வர் இரா.வசந்தகுமார் தலைமையில் பிரிவுபசார வைபவம் இடம்பெறும். (50-302)

## மீளக்குடியமர்ந்த மக்களுக்கு நவாலி ம.வி. அதிபர் உதவி

யாழ்ப்பாணம்,டிசெ.1

வன்னியில் இருந்து மீளக்குடியமர்ந்த 32 குடும்பங்களுக்கு நவாலி மகா வித்தியாலய அதிபர் இரா. வசந்தகுமார் உணவு, உடை போன்றவற்றை தம் சொந்த முறையில் வழங்கியுள்ளார்.

வவுனியா அகதி முகாம்களில் இருந்து மீளத் திரும்பி வந்த குடும்பங்களுக்கே இந்த உதவி வழங்கப்பட்டது.

அந்தக் குடும்பங்களின் பிள்ளைகள் நவாலி மகா வித்தியாலயத்தில் கல்வி நடவடிக்கைக்காக இணைக்கப்பட்டதும் அவர்களுக்கும் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. (50-302)

## வீடு வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பத்திற்கு யாழ்.நகருக்கு மிக அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. ஓரளவு வசதிகளுடன் இருந்தாலும் விரும்பத்தக்கது. தொடர்பு: 0718474268, 077 3608826 (92659)

## ஆலய நித்திய பூசகர் தேவை

துணவி அரசடிப் பிள்ளையார் கோயிலுக்கு நித்திய பூசகர் தேவையாகவுள்ளது. விரும்புவோர் நேரில் சந்திக்கவும். தொடர்பு கொள்வதற்கு:

ஆலயபரிபாலனசபை,
துணவி,
வட்டுக்கோட்டை. (92641)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 30 * 08 * 1924
மறைவு 01 * 11 * 2009



### Late Dr.C.Rajendram

01.11.2009 அன்று மறுமையின் வாழ்வுக்குள் சேர்ந்த Dr.C. இராஜேந்திரம் அவர்கள் மருத்துவமனையில் இருந்தபொழுது அவரைப் பராமரித்த வைத்தியர்கள், எங்களுக்கு ஆறுதல் அளித்து உதவிகள் புரிந்தவர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவரைப் பிரிந்து துயருற்று இருந்தபொழுது எமக்கு ஆறுதல் கூறிப் பல உதவிகளைச் செய்த மதகுருமார்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும், அவரது இறுதி நல்லடக்க வழிபாட்டில் நேரில் கலந்து கொண்டும் மலர் வளையங்கள் வைத்தும், தந்திகள் மூலமும் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

''பெதனி''
கோப்பாய். (சி/562775)

மனைவி திருமதி K.இராஜேந்திரம்,
பிள்ளைகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

## 12 ஆம் ஆண்டு நினைவலைகள்

பூலோகம் 07 * 07 * 1946
வைகுந்தம் 01 * 12 * 1997



### அமரர் சீனியர் இராசரத்தினம்

(நிற்சாமம், சங்கானை)

எங்கள் உணர்வுக்குள் உறைந்திருக்கும் அப்பாவே!

பன்னிரண்டு ஆண்டுகளென்ன
பலநூறு ஆண்டுகள் சென்றாலும்
நாம் எங்குதான் நின்றாலும்
உம் நினைவுகள் எம்மை விட்டகலாது.

தந்தைப் பாசமதை
சிந்தை குளிரத் தந்தவரே!
எம்மைத் தவிக்கவிட்டு
எங்கேதான் சென்றாலும்
உம் நினைவுகள் எம்மைவிட்டகலாது.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
தகவல்:
இராசரத்தினம் மோகன் (மகன்-சுவிஸ்).

நிற்சாமம்,
சங்கானை. (90858)

## நீங்காத நினைவலைகள்

3ஆம் ஆண்டு

மலர்வு 02 . 06 . 1923
உதிர்வு 03 . 12 . 2006



அமரர் பூதப்பிள்ளை காசிலிங்கம்
(முன்னாள் இ.போ.ச.சாரதி)

18ஆம் ஆண்டு

மலர்வு 02 . 09 . 1928
உதிர்வு 02 . 10 . 1991



திருமதி காசிலிங்கம் நாகம்மா

திதி: 01.12.2009

அன்புடனே அரவணைத்து கல்விதனை நன்கு புகட்டி
சிறப்புடனே பார் போற்ற எமை வளர்த்த தெய்வங்களே!
உங்களை நாம் எப்போ காண்போம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தற்காலிக முகவரி
'..............',
..........வீதி, கோண்டாவில் மேற்கு. (92474)

குடும்பத்தினர்
பலாலி தெற்கு, வயாவிளான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டைக் கடந்த பின்னும் கம்பீரத்தோடு நிற்கும் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயம்



வடமராட்சி மண்ணின் கல்விப்புலமையை- கல்விப் பெருமையை இந்த உலகம் நன்றாக அறியும். வடமராட்சி மண்ணிலே அலைமோதும் கடலோரம் அமைந்திருக்கின்றது பருத்தித்துறை என்னும் நகரம். இது நீண்ட கல்வித்துறை வரலாற்றை உடையது. கேட்பவர் மெய்சிலிர்க்க வைக்கும் பல்வேறு சாதனையாளர்களை தந்தமண். அதன் மத்தியிலே யாழ்- பருத்தித்துறை பிரதான வீதியிலே பருத்தித்துறை நகரின் மையத்திலே புலோலிப்பதியிலே ஏழுந்து நிற்கிறது பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயம். "கல்வி அழகே அழகு"எனும் உயரிய மகுடவாசகம் தாங்கி தன்னிகரற்று ஒரு நூற்றாண்டு காலமாக நிமிர்ந்து நிற்கிறது வேலாயுதம் மகாவித்தியாலயம்.

ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட சமய மறுமலர்ச்சியின் விளைவாக தமிழ் சைவப் பாரம்பரியத்தினை கட்டிக்காக்கும் நோக்குடன் புலோலியூர் கல்விமான் வைரமுத்து வேலாயுதபிள்ளை ஆடிப்பூர நன்நாளாகிய 07.08.1895 இல் தனது இல்லத்தில் ஏழைச் சைவச் சிறார்களின் கல்விக்காக ஒரு பாடசாலையை ஆரம்பித்தார். ஆரம்பத்தில் பதின்நான்கு மாணவர்களே இங்கு கல்வி கற்றனர். ஒரு மாதத்தில் அத்தொகை நூறாகி ஐந்து வருடத்தினுள் அரசின் உத்தியோகபூர்வ அங்கீகாரத்தினையும் பெற்றுக் கொண்டதுடன் "புலோலி ஆண்கள் ஆங்கிலப்பாடசாலை" என்னும் பெயருடன் வடமராட்சியின் சைவக்கல்விப் பாரம்பரியத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கியது. 15.09.1976 இல் பழைய மாணவர் சங்கமும் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் இணைந்து கல்லூரியின் ஸ்தாபகரை நன்றியுடன் நினைவு கூர்ந்து "வேலாயுதம் மகாவித்தியாலயம்"என்னும் பெயரினை மாற்றிக் கொண்டனர். இன்று இப்பாடசாலையில் ஏறக்குறைய ஐந்நூறு மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

இக்கல்லூரியின் ஆரம்பகாலத்திலே வித்தியாலயத்தின் ஸ்தாபகரே முகாமையாளராகவும், அதிபராகவும், ஆசிரியராகவும் கடமைபுரிந்ததுடன் ஆசிரியரின் வேதனத்தினையும் தானே வழங்கியுள்ளமை வை.வேலாயுதபிள்ளையின் வள்ளன் மைக்குச் சான்றாகும். இவரைத் தொடர்ந்து தந்தை வழியில் தனையனாகிய திரு.வே. அருணாசலம் தந்தையின் பணியினைத் தொடரும் தனையனாக விளங்கி அனைத்துப் பொறுப்பினையும் தாமே ஏற்று சிறப்புற பாடசாலையைச் செயற்படுத்தினார். அவரைத் தொடர்ந்து நூற்றிப்பதினைந்து வருட வரலாற்றினைக் கொண்டு விளங்கும் வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் பின்வருவோர் திறன்மிக்க அதிபர்களாக கடமையாற்றி பாடசாலையின் வளர்ச்சிக்கும் பெருமைக்கும் காரணமாக விளங்கினர்.

க.சுப்பிரமணியம், கே.சுந்தராச்சாரி, எஸ்.பசுபதிஐயர், வே.நடராசா, த.இராமநாதபிள்ளை, , எம்.ஏ.தங்கராசா, வ.தம்பிப்பிள்ளை, சே.ஏகாம் பரநாதன், கி.தேவராசா, இ.ஞானசேகரம்பிள்ளை, ஆ.ஜெகநாதன் ஆகிய அதிபர்கள் கடமையாற்றி சமூகத்தில் இப்பாடசாலைக்கு நிலையான இடத்தினைப் பெற்றுத்தந்துள்ளனர். மாணவரின் அறிவுப்பசிக்குத் தீனிபோடும் அரும்பணியாற்றிய பெருமைக்குரிய ஆசான்கள் பலரைக் கொண்டு விளங்கிய வரலாற்றுச் சான்றும் இப்பாடசாலைக்கு உண்டு. அந்த வரிசையில் சைவப் பெரியார். க.சுந்தரனார். சோமசுந்தரம்பிள்ளை, சுந்தராச்சாரி, பணிக்கர், என்.எஸ். இராஜகோபால், கோணப்பர் கணபதிப்பிள்ளை போன்ற பலர் ஆசிரியப் பணிக்காக தம்மை அர்ப்பணித்து பாடசாலையின் வளர்ச்சிக்கு அடித்தளமாக விளங்கியுள்ளனர். வேலாயுதம் மகாவித்தியாலயமானது "மனிதனை மனிதனாக்குவது கல்வி" என்ற உயரிய கருத்திற்கமைய சமூகத்திற்கு இயைபுடைய பல மேதைகளையும் மருத்துவர்களையும், பொறியியலாளர்களையும், கல்வியியலாளர்களையும் சட்டத்தரணிகளையும், வங்கியாளர்களையும், ஆசிரியர்களையும் தனது உயரிய வெளியீடாக சமூகத்திற்கு வழங்கி வருகின்றமை இக்கல்லூரியின் சிறப்புக்குச் சான்று பகர்வனவாகும்.

(வளரும்)



## குடிசைக் கைத்தொழில் மீட்சி பெறுமா

(சென்றவாரத் தொடர்ச்சி)

ஆனாலும் இத்தொழிலுக்கு காப்புறுதி, ஈட்டுத்தொகை (லோன்) சம்பந்தமான எந்த உதவிகளும் இதுவரை எந்த வங்கிகளாலுமே வழங்கப்படவில்லை. சுமார் 60 ஆண்டு காலமாக இத்தொழிலை தாம் மேற்கொண்டு வருகின்ற போதும் குறிப்பிட்ட சில உதவிகள் தவிர்ந்த அந்த உதவிகளும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களாலுமோ வழங்கப்படவில்லை எனக் கூறுகின்றனர் அம்மக்கள்.

''பிச்சை எடுத்தாராம் பெருமாள் அதைப் பிடுங்கித் தின்றாராம் அனுமான்'' என்ற பழமொழியைப் போல கொழும்பில் இருந்து குடா நாட்டிற்கு வந்து குவியும் பொருள்களால் தாம் ''பழைய குருடி கதவைத் திறவடி'' என்ற கதையாக தாம் மீண்டும் மீண்டும் நஷ்டத்தையே சந்தித்து வருவதாகத் தெரிவிக்கின்றனர். மூலப் பொருள் பற்றாக்குறை, சந்தைப் படுத்தல் பிரச்சினைகள் என இவர்கள் தினம் தினம் சவால்களையே சந்தித்து வருகின்றனர். ஆகவே மரத்தில் இருந்து விழுந்த வனை மாடேறி மிதித்தாற் போல் அல்லற்பட்டு வரும் தொழிலாளர்கள் இத் தொழிலை நம்பியே தமது நாளாந்த சீவியத்தை நடத்தி வருகின்றனர். இன்று வறுமை காரணமாக நடுத்தெருவிற்கு வர இருக்கும் இம்மக்களைக் காக்க அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வருமா? சம்பந்தப்பட்ட தரப்புகள் மனிதாபிமானத்துடன் செயற்படுவார்கள் என அனைவரும் நம்புகிறோம். நம்பிக்கை பலிக்குமா? ★




# 600 வருடங்களாக ஆன்மீகம் பரப்பும் உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயில்

(சென்றவாரத் தொடர்ச்சி)

சந்திரசேகரன் அக்குளத்தில் நித்தம் ஸ்நானம் செய்து வந்தான். நாளடைவில் இவனின் நோயும் அற்புதமாகக் குணமாகி உடம்பும் நல்லநிலைக்குத் திரும்பியது. தனது நோய் குணமாகியதற்கு இந்த ஸ்தலமே காரணம் என உணர்ந்த சந்திரசேகரன், தனது குலதெய்வமாகிய வீரபத்திரருக்கு இங்கே ஒரு கோயில் அமைக்க எண்ணி தற்போது இருக்கும் வீரபத்திரசுவாமி கோயில் இருக்கும் இடத்தில் இக்கோயிலை ஸ்தாபித்துத் தனது மூத்தமகன் குணபாலசிங்கத்தையும், கோபாலக்குருக்களையும், பரிவாரங்களையும் இவ்விடத்தில் விட்டுத் தனது பாரியார், இளையமகன் குணபாலசிங்கம் ஆகியோருடன் தனது தாய்நாடு திரும்புமுன் அக்குளத்தைப் புனரமைத்து அதற்குச் சந்திரகுளம் எனப் பெயரிட்டு இக்கோயில் குடிகொண்டிருக்கும் காணிக்குப் பண்டாரதோட்டம் என நாமம் இட்டுள்ளதை இன்றும் பண்டாரதோட்டம் என உறுதிகள் மூலம் அறியத்தக்கதாக உள்ளது.

### கோயிலின் வளர்ச்சி

சந்திரசேகரன் சந்ததியில் தோன்றிய தனக்குமரன் என்பவன் இவ்வூரில் சகல ஐஸ்வரியங்களுடன் வாழ்ந்த பிரபுலமான பிரபுக்களின் ஒருவனாகத் திகழ்ந்தான். இவனின் சந்ததியில் தோன்றிய இரண்டாவது சந்திரசேகர மாப்பாணமுதலியாரின் புத்திரன் வீரகத்தி மணியகாரனின் இரண்டாவது குமாரன் கதிர்காம உடையார் 1851இல் இக்கோயிலைப் புனரமைத்துச் சுற்றுமதில் ஆகியவற்றையும் சுண்ணாம்புச் சாந்தால் கட்டுவித்து மகாகும்பாபிஷேகம் நடைபெற்றதுடன் அவ்வாண்டு தொடக்கம் மஹோற்சவமும் தடையின்றி நடைபெற்று வருகின்றது. கதிர்காம உடையாரின் சந்ததியினர் நூற்றுக்கு மேற்பட்ட பரப்பு ஆதனங்களை இக்கோயிலுக்குத் தர்மசாசனம் செய்தனர். 1874 ஆம், 1897ஆம் ஆண்டுகளில் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. 1922இல் பாலஸ்தானம் செய்யப்பட்டுத் தொடர்ந்து 1943, 1957, 1979, 1997களில் கும்பாபிஷேகம் செய்யப்பட்டு வருகிறது.

இங்கு 1981ஆம் ஆண்டு முதல் நவராத்திரிவிழா மிகச்சிறப்பாக நடைபெற்று வருவதுடன் மாணவர்களிடையே பண்ணிசை, சமயச் சொற்பொழிவு ஆகியவற்றில் போட்டி வைத்துப் பரிசில்களும் வழங்கப்பட்டன. 1982 செப்ரெம்பர் வரை ஆதீனகர்த்தாவால் நிர்வகிக்கப்பட்ட இக்கோயில், 09.10.1986இல் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தின் ரி.ஆர் 98 தீர்ப்பின் பிரகாரம் இவ்வூர் மக்களால் மாத்திரம் நிர்வகிக்க ஏதுவாக தர்மகர்த்தா சபை அமைப்பதற்கு நீதிமன்றால் யாப்பின் நகல் பிரதியும் வழங்கப்பட்டுப் பிரகடனப்படுத்தப்பட்டது. கோயிலை ஆகம விதிகளுக்கு அமைவாகப் புதிதாக நிர்மாணிக்க எண்ணித் தென்னிந்திய பிரபல ஸ்தபதி வான்மீகநாதன் அவர்கள் 10.06.1982இல் வரவழைக்கப்பட்டு அவரின் ஆலோசனைகளைக் கேட்டறிந்ததுடன் ஸ்தபதி பெரியசாமி, ஸ்தபதி சோமசுந்தரம் ஆகியோரின் கருத்துக்கள் பெறப்பட்டது. பாலஸ்தாபனத்தைத் தொடர்ந்து திருப்பணி வேலைகள் 1989-1990இல் நடைபெற்றது. தொடர்ந்து நாட்டின் போர்ச்சூழல் காரணமாக புனருத்தான வேலைகளில் பல சோதனைகளைக் கண்டும் வீரபத்திரரின் ஆசியாலும் அருளாலும் தடைகளகன்று விசாலவிருட்சமாய் கட்டடங்கள் எழுந்து காணப்படுகின்றது.

★★★★★
★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இறுதி மாதிரி வினாத்தாள்கள் – தொகுதி I


கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

## விஞ்ஞானம் - II

34-T-II

### பகுதி A, அமைப்புக் கட்டுரை வினாக்கள் - தொடர்ச்சி.......

03. A. கடல்நீரில் இருந்து கறியுப்பைப் பெறுவதற்காக இலங்கையில் பயன் படுத்தப்படும் முறை படத்தில் காட்டப்பட்டுள்ளது.




1) மேலே தரப்பட்ட 3 வகை தேக்கங்களையும் குறிப்பிடுக.
A .............................. B ..............................
C ..............................

2) தேக்கம் A இனுள் வீழ்படிவாகும் இரு பதார்த்தங்கள் எவை?
..............................................................................

3) தேக்கம் ᴮ இல் வீழ்படிவாகும் பதார்த்தம் என்ன?
..............................................................................

4) தேக்க' C இல் இருந்து வெளியேற்றப்படும் திரவத்தின் பெயர் என்ன?
..............................................................................

5) இலங்கையில் இவ்வாறு கறியுப்பைப் பெறுவதற்கான உப்பளங்கள் அமைந்துள்ள 3 இடங்கள் தருக.
..............................................................................

6) உப்பளங்களில் இருந்து சிறந்த கறியுப்பு விளைவைப் பெறுவதற்கு தேவையான நிபந்தனைகள் 2 தருக.
..............................................................................

7) உப்பளங்கள் அமைக்கும்போது கவனிக்க வேண்டிய இரு விடயங்கள் தருக.
..............................................................................

B. 1) சீமேந்து உற்பத்தியின்போது பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் யாது?
..............................................................................


2) சீமேந்து தயாரித்தலின்போது திண்மநிலைத் தாக்கங்கள் நடைபெற்று உருவாகும் கலவையை குளிர விடும்போது பெறப்படும் பதார்த்தம் யாது?
..............................................................................

3) இவ்வாறு பெறப்படும் பதார்த்தத்தில் இருந்து பின்னர் சீமேந்து எவ்வாறு பெறப்படும்?
..............................................................................

4) வினா 2 இல் பெறப்படும் பதார்த்தத்துடன் வேறு ஒரு பதார்த்தம் சேர்க்கப்பட்டு சீமேந்து தயாரிக்கப்படுகின்றது. அப்பதார்த்தம் ஏன் சேர்க்கப்படுகின்றது?
..............................................................................

5) வெளிற்றும் தூள் தயாரிக்கத் தேவைப்படும் பதார்த்தங்கள் எவை?
..............................................................................

04. A. ஆய்வுக்கூடத்தில் வாயுவொன்றைத் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற ஆய்கருவி அமைப்புப்படம் தரப்பட்டுள்ளது.




1) ஆங்கில எழுத்துக்கள் குறிக்கும் பகுதிகளின் பெயர் தருக.
A .............................. B ..............................
C .............................. D ..............................
E ..............................

2) மேற்படி ஆய்கருவி எவ்வாயுவைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகின்றது?
..............................................................................

3) X எனும் பதார்த்தத்தின் பெயர் யாது?
..............................................................................

4) மேற்படி வாயுவைச் சேகரிக்கப் பயன்படுத்தக்கூடிய வேறொரு முறை யாது?
..............................................................................

5) மேலே குறிக்கப்பட்ட முறையால் சேகரிக்கப்படுவதற்கான காரணம் யாது?
..............................................................................

6) மேற்படி வாயுவின் பயன்பாடுகள் 3 தருக.
..............................................................................

B. 1) இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் சாறெண்ணைகள் 3 தருக.
..............................................................................

2) சாறெண்ணைகளைப் பிரித்தெடுப்பதற்கு பயன்படுத்தப்படும் சிக்கனமானதும், துரிதமானதும், எளிமையானதுமான முறை யாது?
..............................................................................

3) இறப்பர் மரத்தின் தாவரவியற் பெயர் யாது?
..............................................................................

4) இறப்பர் பாலிலுள்ள உலர் இறப்பரின் அளவை அறிய பயன்படும் உபகரணம் யாது?
..............................................................................


5) இறப்பரின் வேண்டத்தகாத இயல்பை மாற்ற யாது செய்யப்படுகிறது?
..............................................................................

### பகுதி B - கட்டுரை வினாக்கள்

* உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல் ஆகிய பிரிவுகளிலிருந்து ஒவ்வொரு வினாவைத் தெரிவுசெய்து மொத்தம் மூன்று வினாக்களுக்கு விடை அளிக்குக.

### உயிரியல்

01. A. மாணவர் குழு ஒன்று ஆய்வுகூடத்தில் மேற்படி படத்தில் காட்டியவாறு பரிசோதனை ஒன்றை அமைத்தது. இவ்வமைப்பு தொடர்பாக பின் வரும் வினாக்களுக்கு விடை தருக.




1) மேற்படி பரிசோதனை எந்நோக்கத்திற்காக அமைக்கப்பட்டது?
2) இப்பரிசோதனைக்கு எடுக்கப்படக்கூடிய தாவரங்கள் 2 தருக.
3) இங்கு நீரினுள் அப்பச்சோடா இடப்படுவதற்கு காரணம் யாது?
4) இப்பரிசோதனை அமைப்பை நன்கு சூரியஒளி படும் ஓரிடத்தில் வைத்தால் உமது அவதானம் யாது?
5) வினா 4 இல் தாவரத்தில் நடைபெறும் தொழிற்பாடு யாது? அத் தொழிற்பாட்டிற்கான சமன்பாட்டைத் தருக.
6) இங்கு வெளியேற்றப்படும் வாயு (A) என்ன? இதனை எவ்வாறு பரிசோதிப்பீர்?

B. 1) எமது உடலில் மிகக்குறுகிய நேரத்தினுள் நடைபெறுவதான சிந்திக்காமல் ஆற்றப்படும் செயற்பாடு எவ்வாறு அழைக்கப்படும்?
2) இச்செயற்பாடுகளில் இரண்டு வகை உண்டு. அவை எவை? ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு உதாரணம் தருக.
3) மேற்படி செயற்பாடு கடத்தப்படும் பாதையை வரைந்து காட்டுக.
4) மேற்படி செயற்பாட்டைப் பாதிக்கும் காரணிகள் 3 தருக.
5) இச் செயற்பாடு மனிதனுக்கு எவ்வகையில் உதவுகின்றது?

02. A. டெங்கு, மலேரியா போன்ற நோய்கள் உட்பட பல நோய்கள் பரவுவதற்கு சுற்றாடலின் துப்புரவு இன்மையே பிரதான காரணமாகும். யோகட் கோப்பைகள், தென்னஞ் சிரட்டைகள், தகரப்பேணிகள், ரயர்கள் சூழலில் இடப்படுதல், நீர் நிரம்பி வடிகால்கள் ஆகியன நோய்கள் பரவுவதற்கு ஏதுவான காரணிகளாக அமைகின்றன. டெங்கு, மலேரியா போன்ற நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு அங்கிகளுக்கிடையிலான இடைத்தொடர்புகளைப் பயன்படுத்தலாம்.
1) டெங்குநோய் தொற்றுவதற்கு ஏதுவான நோய்க் காரணியைப் பெயரிடுக.
2) சூழலில் இடப்படும் யோகட் கோப்பைகள், சிரட்டைகள், தகரப் பேணிகள் போன்ற பொருட்களினால் டெங்குநோய் பரவுவதற்கு உதவும் விதத்தை விளக்குக.
3) நுளம்புக்கும், மனிதனுக்கும் இடையே இருக்கும் இடைத்தொடர்புக்கு வழங்கும் பெயர் யாது?
4) மனிதனுடன் மேலே 03இல் குறிப்பிட்ட இடைதொடர்புடைமையைக் காட்டும் நுளம்பு தவிர்ந்த வேறு ஒரு அங்கியைப் பெயரிடுக.
5) தற்போது நாட்டில் டெங்கு நோய் வெகு தீவிரமாகப் பரவி வருகின்றது. இதனைத் தவிர்க்க அரசாங்கம் மேற்கொண்ட இரு நடவடிக்கைகள் தருக.

B. 1) பரம்பரை இயல்புகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டவர் யார்?
2) தனது ஆய்வுக்காக அவர் எதனைப் பயன்படுத்தினார்? அதனைப் பயன்படுத்தியமைக்கான 3 காரணங்கள் தருக.
3) பாரம்பரிய இயல்புகள் மாற்றமடைவதற்காக 3 காரணிகள் தருக.
4) கலப்புப் பிறப்பாக்கத்தின் அனுகூலங்கள் 2 தருக.
5) பரம்பரை இயல்பு என்றால் என்ன?

11ஆம் பக்கம் பார்க்க....

ஆசிரியர்: S.சந்திரமோகன், (அதிபர்)
/வீரமுனை ஆர்.கே.எம். தமிழ் மகா வித்தியாலயம்,
சம்மாந்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானம் II – தொடர்ச்சி....

## இரசாயனவியல்

03. மூலகங்களின் வகைமீடு தொடர்பாக மிகவும் பொருத்தமான முறையாக ஆவர்த்தன அட்டவணையைக் கருதலாம். அட்டவணையின் ஒருவகைக் கூட்டத்தின் மூலகங்களின் இயல்புகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

| மூலகம் | அணு எண் | உருகுநிலை $^0C$ | கொதிநிலை $^0C$ | நிறம் |
|---|---|---|---|---|
| புளோரின் | 9 | -220 | -188 | இளமஞ்சள் |
| குளோரின் | 17 | -101 | -34 | பசிய மஞ்சள் |
| புரோமின் | 35 | -7 | 58 | கபிலம் |
| அயடீன் | 53 | 114 | 183 | கறுப்பு |

1) மேலே தரப்பட்ட அட்டவணை மூலகங்கள் ஆவர்த்தன அட்டவணையின் எக்கூட்டத்தைச் சேர்ந்தவை?
2) குளோரின் மூலகம் அடங்கியுள்ள ஆவர்த்தனம் யாது?
3) மேலே தரப்பட்ட மூலகங்களில் சாதாரண வெப்பநிலையிலும், அமுக்கத்திலும் முறையே வாயு, திரவம், திண்மமாகக் காணப்படும் ஒவ்வொரு மூலகம் தருக.

4) குளோரின் மூலகத்தின் சமதானியின் தகவல்கள் சரியான முறையில் $35_{17}Cl$ எனக் காட்டப்பட்டுள்ளது.
   a. இம் மூலகத்தின் இலத்திரன் நிலையமைப்பைத் தருக.
   b. நியூத்திரன்களின் எண்ணிக்கை யாது?
   c. குளோரின் இனால் பெறப்படும் பயன்கள் 2 தருக.

5) குளோரின் மூலகம் காபனுடன் இடைத்தாக்கமடைந்து $CCl_4$ என்னும் சேர்வையை உருவாக்கும்.
   a. $CCl_4$ இனைப் பெயரிடுக.
   b. இச்சேர்வையிலுள்ள அணுக்களின் பிணைப்பு எவ்வகையானது?
   c. $CCl_4$இன் மூலக்கூற்றினைக் காட்ட (1), (×) அணுக்கட்டமைப்பை வரைக.


6) மேலே தரப்பட்ட அட்டவணையில் உள்ள மூலகங்கள் யாவும் ஆவர்த்தன அட்டவணையின் முதலாம் கூட்ட மூலகங்களுடன் இடைத்தாக்கம் அடையும்.
   a. ஐதரசன் தவிர்ந்த முதலாம் கூட்டத்தைச் சேர்ந்த நீர் விரும்பிய ஒரு மூலகத்தைப் பாவித்து நடைபெறும் தாக்கத்தைக் காட்ட சமப்படுத்திய சமன்பாட்டைத் தருக.
   b. நீர் காட்டிய இடைத்தாக்கத்தினால் கிடைக்கும் சேர்வைக்கும், $CCl_4$ சேர்வைக்கும் இடையிலுள்ள வேறுபாடு இரண்டு தருக.

04. A. நாளாந்தம் சீமெந்தின் தேவை அதிகரித்துச் செல்லுகின்றது. இதனை நீருடன் பரிகரிக்கும்போது இறுதி வன்மையாகும். இச்சீமெந்து போட்லண்ட் சீமெந்து எனப்படும். போட்லண்ட் கிராமத்தில் காணப்படும் உறுதியான கற்களை ஒத்த வன்மையுடைய பொருட்களை உருவாக்குவதால் இப்பெயர் பெற்றது.
   1) சீமெந்து தயாரிப்பதற்குத் தேவையான மூலப்பொருட்கள் எவை?
   2) சீமேந்து உருவாகும்போது நடைபெறும் திண்ம நிணத்தாக்கங்களில் உருவாகும் விளைவுகள் 3 தருக.
   3) திண்ம திணத்தாக்கங்களின்போது தோன்றும் கரும் பச்சை நிறமான பொருளின் பெயர் யாது?
   4) சீமெந்து தயாரித்தலின்போது உறையும் வீதத்தைக் கட்டுப்படுத்த சேர்க்கப்படும் பதார்த்தம் என்ன?
   5) சீமெந்தின் உபயோகம் 2 தருக.
   6) சீமெந்து தயாரித்தலின்போது சுழலும் சூளையின் வெப்பநிலை யாது?


B. கறியுப்பைப் பெறுவதற்காக இரு முறைகள் கையாளப்படுகின்றன. பாறை உப்பை அகழ்ந்து பெறுவதன் மூலமும், கடல்நீரை ஆவியாக்குவதன் மூலமும் பெறப்படுகின்றது. இலங்கையில் உப்பளங்களில் கடல் நீரை சேகரித்து ஆவியாக்குவதன் மூலம் கறியுப்பு பெறப்படுகின்றது.
   1) இலங்கையில் உப்பளங்கள் அமைந்துள்ள இடங்கள் 3 தருக.
   2) உப்பளங்கள் அமைப்பதற்குத் தேவையான இடத்தைத் தெரிவு செய்யும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் 3 தருக.
   3) உப்பளங்களில் காணப்படும் 3 வகையான பாத்திகளும் எவை?
   4) கடல்நீர் செறிவடையும்போது முதலாவது பாத்தியில் வீழ்படிவாகும் உப்புக்கள் எவை?
   5) மூன்றாவது பாத்தியில் கறியுப்பு வீழ்படிவாகி முடிந்ததும் இறுதியாக உள்ள தாய்திரவம் எவ்வாறு அழைக்கப்படும்?
   6) சாதாரண கறியுப்பில் காணப்படும் மாசுக்கள் 2 தருக.

## பௌதிகவியல்


05. A. புதிய தொழில்நுட்பம் உலகில் தோன்றியதும் பொறிகளை மிகவும் சிறந்த திறனூடாக செயற்படுத்த மனிதன் முயற்சியெடுத்து வருகின்றான்.
   1) பொறியொன்றின் திறன் என்பதால் கருதப்படுவது யாது?
   2) பொறியொன்றின் திறன் குறைவதற்கு பிரதான காரணம் அதில் தோன்றும் சக்தி விரயமாதலாகும்.
      a. பொறியொன்றின் சக்தி விரயமாகும் முறைகள் இரண்டு தருக.
      b. நீர் மேலே (a) பகுதியில் குறிப்பிட்ட சக்தி விரயத்தைக் குறைத்துக்கொள்ளக்கூடிய முறையொன்றைக் குறிப்பிடுக.
   3) கிணறொன்றில் பொருத்தப்பட்டுள்ள கப்பியொன்றின் உதவியால் 6.4kg திணிவுடைய நீர் வாளியொன்று 10m உயரத்திற்கு உயர்த்தும்போது 80N எத்தனமொன்று பிரயோகிக்க வேண்டியதாக இருந்தது. கப்பியின் திறன் நூற்று வீதம் எவ்வளவு ($g = 10ms^{-2}$)
   4) வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ள X, Y பலகை Xஇல் அமைந்துள்ள பிணைச்சலொன்றினால் மேசை மீது தட்டில் பொருத்தப்பட்டுள்ளது. Q எனும் பொருள் ஒன்று XY பலகையில் உண்டு. Y, எனும் இடத்தில் கட்டப்பட்டுள்ள நூல் ஒன்று சுழலத்தக்கவிதத்தில் தொங்கவிடப்பட்டுள்ள P எனும் அமைப்பினூடாகச் செலுத்தி அதன் முனை Lஇல் 15N நிறையொன்று தொங்கவிடப்பட்டுள்ளபோது தொகுதி சமநிலையில் உள்ளது.




   a. இத்தொகுதியிலுள்ள எளிய பொறிகள் இரண்டைப் பெயரிடுக.
   b. Q எனும் பொருளின் மீது புவியீர்ப்பு சக்தி செயற்படும்போது அது XY தளத்தினூடு வழுக்கிச் செல்லாதிருக்கக் காரணம் யாது?
   c. L எனும் பொருள் உபகரணத்தில் இருக்கும்போது அதனை நீர் உள்ள பாத்திரத்தினுள் அமிழ்த்தும்போது XY பலகைக்கும் மேசைக்கும் இடையேயுள்ள கோணம் குறைவடைந்தது. காரணம் தருக.
   d. வரிப்படத்தில் தரப்பட்டுள்ள L சுமையின் மீது படிப்படியாக சுமையைக் கூட்டும்போது XY பரப்பின் ஊடாக பொருள் Q கீழ் நோக்கி இயங்கியது. இவ்வியக்கத்துக்கான பருமட்டான வேக-நேர வரையைத் தருக.





B. வீட்டு மின்சுற்று ஒன்றின் பகுதி படத்தில் காட்டப்பட்டுள்ளது.





   1) இச்சுற்று எதனைக்குறிக்கின்றது?
   2) இச்சுற்றிலுள்ள L, N என்பவை யாது?
   3) படத்தில் தரப்பட்ட சுற்று எம்முறையில் தொடுக்கப்பட்டுள்ளது அநுகூலம் யாது?
   4) தரப்பட்ட மின்சுற்றின் முடிவிடங்கள் வீட்டு மின்சுற்றில் எவ் உபகரணத்துடன் தொடுக்கப்பட்டிருக்கும்?
   5) நவீன வீட்டு மின்சுற்றில் மேலே 04இல் குறிப்பிடப்பட்டுள்ள உபகரணத்தில் உள்ள ஒரு பகுதிக்குப் பதிலாக திறனான உதிரிப்பாகம் ஒன்று பயன்படுத்தப்படும். அதனைப் பெயரிடுக.
   6) மேற்படி சுற்றை அமைப்பதற்கு தேவையான வடம் 1/1.13 என மின்னிணைப்பாளர் கூறுகிறார். இங்கு குறிப்பிடப்படும் இலக்கம் எதனைக் குறிக்கிறது?

06. தற்போதைய இலத்திரனியல் கருவிகளில் பல்வேறு வகையான இலத்திரனியல் சுற்றுகள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றில் பல்வேறு துணைச்சாதனங்கள் உள்ளன. இவை பற்றி அறிந்திருத்தல் தற்காலத்தில் வாழும் மனிதனுக்கு மிகவும் பயனுடையதாகும்.




1) மேற்படி வரிப்படங்களில் காணப்படும் ஒவ்வொரு துணைச்சாதனத்தினதும் பெயரை முறையே எழுதுக.
2) E எனும் சாதனத்தின் ஊடாக மின்னோட்டம் பாயும் திசை யாது?
3) E எனும் உபகரணத்தின் ஒன்றைப் பயன்படுத்தும்போதும், நான்கைப் பயன்படுத்தும்போதும் பெறப்படும் சீராக்கலின் தன்மை யாது?
4) E எனும் உபகரணத்தில் நான்கைப் பயன்படுத்தி அமைக்கப்படும் சீராக்கிப் பாலத்தை வரைந்து காட்டுக.
5) மின்னோட்டத்தின் அலைவடிவத்தை அவதானிக்கப் பயன்படுத்தப்படும் உபகரணம் யாது?
6) எந்தவொரு சுற்றுடனும் வலுப்பொதி எதற்காகத் தொடுக்கப்படுகின்றது?
7) B எனக்குறிப்பிடப்பட்ட துணை உறுப்பில் இரண்டு வகை உண்டு. அவை என்ன?
8) 




படம் A இலுள்ளது போன்ற மின்னோட்டத்தினை B இலுள்ளது போன்று மாற்றத் தேவையான மின்சாதனம் என்ன? அதன் குறியீடு யாது?

-நிறைவுற்றது-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NSB

POSTAL BANKING BRANCH JAFFNA

உங்கள் குடும்ப வங்கி

## தேசிய சேமிப்பு வங்கி அஞ்சல் வங்கிக்கிளை

## யாழ்ப்பாணம்

வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களுக்கு உன்னத சேவையாற்றி ஒரு வருடத்தை இன்றுடன் பூர்த்தி செய்து தமது வெற்றிப் பயணத்தை தொடரும் இவ்வேளையில் அவர்களின் சேவைகள் மென்மேலும் சிறப்புற வாழ்த்தி நிற்கின்றோம்.

**அஞ்சல் வங்கி சேவைகள்**

**கடன் சேவைகள்**

1) தங்க நகை அடகுச் சேவை
2) வீடமைப்புக் கடன்
3) தனி நபர் கடன்
4) ஓய்வூதியக் கடன்
5) வைப்புக்களுக்கு எதிரான- கடன்

**வைப்புக்கள்**

1) நிலையான வைப்புக்கள்
   1) 3 மாதங்கள்
   2) 6 மாதங்கள்
   3) 12 மாதங்கள்
   4) 24 மாதங்கள்
   5) 36 மாதங்கள்
   6) 60 மாதங்கள்




2) அறக்கொடை
3) தேசிய சேமிப்பு சான்றிதழ்
4) பிரார்த்தனா
5) ப்ரண்ட்ஸ்
6) சேமிப்பு வைப்புகள்
   1) சாதாரண சேமிப்பு
   2) இத்துறு மித்துரு
   3) ஸ்திரி
   4) Pension + (பென்சன் +)
   5) Happy Savings (ஹப்பி சேமிப்பு)
   6) Extra XL
   7) சிறுவர் சேமிப்பு - கணக்குகள்
      1) ஹப்பன்
      2) புஞ்சி ஹப்பன்

மற்றும் ஏனைய வங்கிச் சேவைகள்

Standing (L-R) - Mr.V.Tonyjoy, Mr.R.Nagawaran, Mr.A.Kengatharan (Asst.Manager), Mr.K.Mathisoody (Officer), Mr.V.Suthagar (Officer), Mr.K.Kuganendrarajan

Seated - Mr.R.Rajahmahendrasingham (Manager)

வாடிக்கையாளர்கள் சார்பில்....

## NORTH LANKA IIT

Partner Institution of Isles Internationale Universitè EU (Commonwealth)

Head Office: Main Street, Chankanai.

*Your Right Choice For Degree Education*

Jaffna Office: # 113, Laxan Plaza, Navalar Road, Jaffna.

## Vimal Photo & Video

விமல் போட்டோ அன் வீடியோ

Alaveddy South, Alaveddy.

T.P : 0776305183, 0602218042

## ANDRA DIGITAL IMAGE

*Professional Graphics Designers & Printers*

Kasthuriyar Road, Jaffna T.P 021-4590268

STUDY IN UK

## EXPONET

Overseas Consultants

LEADING EDUCATIONAL CONSULTANTS

Tel : 011 7555511,12,13,14 web : www.expogroup.lk

## ASUS CORNER

108, Luxan Plaza, Navalar Road, Jaffna.

Tel : 021 222 1048

## SUNDHARSON

IMPORTERS & DISTRIBUTERS OF ELECTRICAL & PLUMBING ITEMS

Dealers of kevilton and Orange Electrical products

Jaffna Road, Manipay Phone : 021 222 9984, 021 4591569

## சிறி நந்தியா

நகை மாளிகை

டிஜிட்டல் கலர் லாப் வீடியோ & ஸ்ரூடியோ

இல-01 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 108, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## ஜமுனா பர்னிச்சர்

Whole Distributors for Damro and Piyestra Furnitures

No 181, Navalar Road, Jaffna T.P : 021 222 1092

No 03, Main Street, Nelliady. T.P : 021 226 3970

## தங்கத்திருமகள்

தங்க மாளிகை

இல 205/6, ராஜா தியேட்டர் கட்டிடம், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## தில்லையம்பதி மோட்டார்ஸ்

Dealers in : Agriculture, Electric, Water Pumps, Generators, Machines, Spare Parts & Tools Etc.

Head Office: No.: 429, R.R. De Silva Mawatha, Colombo 13, Sri Lanka.

Sales & Showroom: No.: 114, Stanley Road, Jaffna. Tel : +94 21 222 5710 Fax : +94 21 222 4542


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சரத்பொன்சேகாவிற்கு மேற்குலக நாடுகளின் ஆதரவைப் பெற எதிர்க்கட்சிகள் பிரயத்தனம்

கொழும்பு, டிச. 01

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு மேற்குலக நாடுகளின் ஆதரவை பெறுவதற்காக எதிர்க்கட்சிகளின் பொதுக் கூட்டமைப்பு விசேட வேலைத்திட்ட மொன்றை முன்னெடுத்துள்ளது.

சரத் பொன்சேகாவுக்கு சீனாவின் ஆதரவைப் பெற்றுக்கொடுக்கும் பொறுப்பை ஜே.வி.பி. ஏற்றுள்ளது எனஅரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. முன்னாள் இராணுவ அதிகாரியான சரத் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது குறித்து இந்தியா முதலில் இணக் கம் எதனையும் வெளியிடத நிலை யில்,இந்தியாவின் ஆதரவைப் பெறுவ தற்காக எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் விரிவான வேலைத்திட்ட மொன்றை முன் னெடுத்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

முன்னாள் இராணுவத் தலைவர் ஒருவர் அரசியலுக்கு வருவது குறித்து எந்த நாடுகளும் எவ்வித அச்சமும் கொள்ள தேவையில்லை என எதிர்க்கட்சியின் பிரதான பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். நாட்டில் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் ஸ்தாபிப்பதற்கும் கொள்கைகளுடன் சரத் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவார் எனவும் அந்தப் பேச்சாளர் கூறியுள்ளார். அவர் தனது கொள்கையை முன்வைத்த பின்னர் ஏற்பட்டுள்ள சந்தேகங்களுக்கு தீர்வு ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை தனது எதிர்கால நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு இந்திய அரசின் ஆதரவு தமக்குத் தேவையென சரத் பொன்சேக்கா அண்மையில் இந்திய வானொலியொன்றிடம் கருத்து வெளியிட்டிருந்தார். இந்தியா மிக முக்கியமான நாடென தாம் கருகிறார் எனவும் பொன்சேகா கூறியுள்ளார்.

எனினும் இந்திய அதிகாரிகள் இது குறித்து இதுவரை எவ்வித கருத்துக்களையும் வெளியிடவில்லை. (சி)

## மாவை வீரகத்திவிநாயகர் ஆலயத்தில் திருக்கார்த்திகைத் திருவிழா

யாழ்ப்பாணம், டிச.01

மாவை கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தின் திருக்கார்த்திகைத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் நடைபெறும்.

இவ்விழாவில் கலந்துகொள்ள விரும்பும் அடியார்கள் தெல்லிப்பழை தடை முகாமுக்கு இன்று காலை 8 மணிக்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த பதினொரு வருடங்களாக பொய்யாமொழி சோதிட நிலையத்தின் வருமானத்தில் நித்திய பூசைகள் நடைபெற்றன என்றும் தற்போது அப்பூசைகள் சிதம்பரநாதக் குருக்களின் அமரத்துவத்தின் பின் சோதிபீட நிலையம் நடத்த முடியவில்லை எனவும், ஆகவே வழிபடுகின்ற அடியார்கள் மனப்பூர்வமான உதவியை நல்க வேண்டும் என ஆலய அறங்காவலர் ஸ்ரீலஸ்ரீ சு.சிவஷண்முகானந்தக் குருக்கள் தெரிவித்தார். (50-15)

## பொன்சேகாவை வேட்பாளராக நிறுத்தியதால் பதவி துறந்தார் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ

கொழும்பு, டிச. 01

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது பொது வேட்பாளராக ஜெனரல் சரத் பொன்சேகாவை நிறுத்தும் ஐ.தே.கவின் தீர்மானத்தை எதிர்த்த காரணத்தினால் ஐ.தே.காவின் குருநாகல் மாவட்ட எம்.பி. ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அக்கட்சியின் குருநாகல் மாவட்ட அமைப்பின் தலைவர் பதவியிலிருந்து நீக்கியுள்ளதாக ஐ.தே.க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் ஜெனரல் பொன்சேகாவின் வேட்பாளராக நிறுத்தும் ஐ.தே.கவின் தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காக அத்தலைவர் பதவியிலிருந்து சுயமாகவே விலகிக் கொண்டார் என்று தெரிவித் துள்ளார்.

ஐக்கிய தேசிய தலைமைப்பீடம் கடந்த வியாழக்கிழமை கூடி பொன்சேகாவை ஆதரிக்கும் தீர்மானத்தை எடுத்தது.

அங்கு அத்தீர்மானத்தை ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கடுமையாக எதிர்த்ததாலேயே அவரை மேற்படி பதவியிலிருந்து நீக்கியுள்ளதாக ஸ்ரீகொத்தா வட்டாரங்கள் தெரிவித்தன.

கடசியின் தீர்மானத்தை மீறி நடப்பவர்கள் எவராயினும் கட்சியில் அவர்களின் பதவி நிலையை பொருட்படுத் தாது உரிய தண்டனை வழங்கப்படும் என்று ஐ.தே.க. தலைவர் எச்சரிக்கை விடுத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (9)

## இராணுவ சேவை அரசியல் மயமாகிறதா? அடியோடு மறுக்கிறார் உதய நாணயக்கார

கொழும்பு, டிச. 01

இராணுவ சேவை அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது என சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை - என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினர் எந்தவொரு அரசியல் கட்சிக்காகவோ அல்லது அரசியல்வாதிக்காகவோ பிரசாரங்களை மேற்கொள்ளாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



முன்னாள் இராணுவ அதிகாரிகளையும், தற்போதைய சில அதிகாரிகளையும் பயன்படுத்தி அரசு அரசியல் பிரசாரங்களை மேற்கொண்டு வருகிறது என எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்திருந்த கருத்திற்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இதனைக் கூறினார்.பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளது என சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களிலும் உண்மையில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (சி)

## ஐ.தே.கட்சி எம்.பிக்கள் இருவர் ஜனாதிபதி மஹிந்தவுடன் பேச்சு

கொழும்பு, டிச. 01

ஜெனரல் பொன்சேகாவின் விவகாரத்தால் ஐ.தே.கவுடன் முரண்டு பிடித்துக் கொண்டிருக்கும் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, இந்திக்க பண்டார நாயக்க ஆகியோர்களின் அரசியல் எதிர்காலம் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுக்களை நடத்தி யுள்ளனர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக ஜெனரல் பொன்சேகாவை நிறுத்த வேண்டும் என்று ஐ.தே.க. தலைமைப்பீடம் தீர்மானித்துள்ளது. இத்தீர்மானத்தை இரு எம்.பிக்களும் மும்முரமாக எதிர்க்கின்றனர். இந்நிலையில் இருவரும் அவர்களின் எதிர் காலம் குறித்து ஜனாதிபதியுடன் பேசியுள்ளார்கள்.

அப்போது அடுத்த பொதுத் தேர்தல் மூலம் இருவரையும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசிய பட்டியலில் எம்.பிக்கள் ஆக்குவாரென ஜனாதிபதி வாக்குறுதி வழங்யுள்ளார். ஆனால் ஜனாதிபதியின் இந்த வரத்தை அவர்கள் ஏற்க மறுத்து விட்டனர்.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அவரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் குருநாகல் மாவட்ட அமைப்பாளராக நியமிக்க வேண்டும் என்றும் அடுத்த பொதுத் தேர்தலில் போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புச் சார்பாக போட்டியிட வாய்ப்பளிக்க வேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் குரு நாகலை மாவட்ட அமைப்பாளராக அமைச்சர் ஜயரட்ண ஹேரத் உள்ளார்.

இந்நிலையில் பொல்ஹகவெல தேர்தல் தொகுதியின் அமைப்பாளராக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை நியமிக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என்று அலரி மாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதேநேரம் இந்திக்க பண்டாரநாயக்க எம்.பி. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் நிக்கவரட்டிய தேர்தல் தொகுதி அமைப்பாளராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட உள்ளார் என்றும் தெரியவருகிறது. (சி)

## புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவருக்கான பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், டிச.01

மக்கள் வங்கியின் அனுசரணையுடன் வலிகாமம் கல்வி வலயம் நடத்தும் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் தகுதிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.மாதவகுமாரன் தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட வலய மக்கள் வங்கி உதவிப் பொது முகாமையாளர் ரி.கே.ஆனந்தராசாவும், சிறப்பு விருந்தினர்களாக மக்கள் வங்கியின் கன்னாதிட்டிப் பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதனும், மக்கள் வங்கி யின் சுன்னாகக் கிளை முகாமையாளர் எம்.சந்திரகாந்தனும் கலந்துகொள்வர். (201-100)

### போயா தின ஆன்மீக நிகழ்ச்சி

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தில் போயா தின ஆன்மீக நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெற வுள்ளது.

அதிகாலை 4.15 மணிக்கு நகரசங்கீர்த்தனம் இடம்பெற்று காலை 9 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகி ஓம்காரம், வேதபாராயணம், தியானம், சாதனை, பஜனை, சிறப்புச் சொற்பொழிவு, நாராயண சேவை என்பன இடம்பெற்று மதியம் 12.30 மணிக்கு நிகழ்வு நிறைவுபெறும். (50-7)

## இலவசப் பாடநூல்களை பாதுகாக்கும் திட்டத்தை பாடசாலை அதிபர்கள் மேற்கொள்ள வேண்டும்

யாழ்ப்பாணம், டிச. 01

யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற இலவசப் பாடநூல்களை சிறந்த முறையில் பாதுகாப்பது தொடர்பான செயற்றிட்டங்களை பாடசாலை அதிபர்கள் மேற்கொள்ள வேண்டும்.

கல்வியமைச்சின் செயலாளர் எம்.எம்.என்.டீ.பண்டார இது தொடர்பான சுற்றறிக்கையினை பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற இலவசப் பாடப் புத்தகங்களை மாணவர்கள் அசண்டையீனமாகப் பாவிப்பதினால் புத்தகங்கள் குறுகிய காலத்திற்கேற்ப பழுதடைந்து விடுகின்றன.

இத்தகைய நிலையினைக் கருத்திற் கொண்டு இம்முறை மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற இலவசப் பாடநூல்களைப் பேணிப் பாதுகாப்பது தொடர்பான விழிப்புணர்வினைப் பாடசாலை அதிபர்கள், மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும்.

இத்தகைய விழிப்புணர்வினை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்குத் தத்தமது கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோரை பாடசாலைகளுக்கு அழைத்து பாடநூல்களைப் பாதுகாப்பது தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும் என்று அந்த சுற்று நிருபத்தில் அமைச்சின் செயலாளர் எம்.எம்.என்.டீ.பண்டார அறிவித்துள்ளார். (50-9)

## ஜனாதிபதித் தேர்தல்தினம் சரத்பொன்சேகாவுக்கு மிகவும் சாதகமானது என்கின்றனர் சோதிடர்கள்

கொழும்பு, டிச. 01

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற உள்ள தினம் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு மிகவும் சாதகமான நாளாக இருக்கின்றது என்று தென்னிலங்கையிலுள்ள பிரபல சோதிடர்கள் கணித்துள்ளார்கள்.

அவர்கள் இக்கணிப்பில் தெரிவித்துள்ளவை வருமாறு:-

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் அடுத்த ஜனவரி 26 ஆம் திகதி இடம்பெறும் எனத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க அறிவித்துள்ளார். இத் தேர்தல் ஒரு செவ்வாய்க்கிழமை வருகிறது. செவ்வாய்க்கிழமையானது எதிரியை வெற்றிகொள்ளும் கிரகம் ஆகும். எனவே, கடந்த காலம் முழுவதும் யுத்தச் செயற்பாடுகளில் ஈடுபட்டு தற்போது ஜெனரல் என்ற பெயரில் அழைக்கப்படும் பொதுவேட்பாளர் பொன்சேகாவுக்கு செவ்வாய்க்கிரகம் மிகவும் அனுகூலமான பலன்களைக் கொடுக்கும் என்பது நிச்சயம்.

செவ்வாய்க்கிழமை தினத்தை 'குஜ' தின் என்று சோதிடர்கள் அழைக்கின்றனர். அண்மையில் நிகழ்ந்த ராகு - கேது மாற்றம் ஏனைய வேட்பாளர்களுக்கு சாதகமாக இல்லை. (சி)



மாதகல் சென்.தோமஸ் வித்தியாலயம், மாதகல் நுணசை வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்கள் டெங்கு நோய் அபாயம் தொடர்பான விழிப்புணர்வுப் பிரசாரத்தை அண்மையில் மாதகல் பிரதேசத்தில் மேற்கொண்டனர். மாணவர்கள் வீடுவீடாகச் சென்று டெங்குநோய் குறித்த [illegible] படங்களில் காணலாம். (படங்கள்: சரவணன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Special Offer

கிறிஸ்மஸ் புதுவருடத்தை முன்னிட்டு
**வாணி ரெக்ஸின்** 10% விசேட கழிவும்
அன்பளிப்புப் பொருள்களும்

ஒவ்வொரு றெடிமேட் சாறிக்கும்
ஒவ்வொரு றெடிமேட் சாறி பிளவுஸ்
அன்பளிப்பாக வழங்கப்படும்.



மேலும்
5,000/- மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு ஒரு அழகிய குடையும்
10,000/- கொள்வனவு செய்பவர்களுக்கு ஒரு றெயின்கோட்டும் (ஜக்கட்) அன்பளிப்பாக வழங்கப்படும்.

கிறிஸ்மஸ், புதுவருடத்தை முன்னிட்டு விசேடமாக இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட புதிய வகை *(New Selection)* ஆடைத் தெரிவுகளைப் பெற்றிட உடன் நாடுங்கள்

இச்சலுகை 01.12.2009 தொடக்கம் 31.12.2009 வரை மட்டுமே


## வாணிரெக்ஸ்

இல.81, பெரியகடை, யாழ்ப்பாணம்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுக்கு வந்தது 10 . 10 . 1932

விண்ணுக்கு போனது 01 . 12 . 2008



அமரர்

## செல்லையா வேலாயுதபிள்ளை

(ஓய்வுபெற்ற பிராந்திய முகாமையாளர்,
தேசிய உப்புக் கூட்டுத்தாபனம், ஆனையிறவு)

அப்பா! அம்மப்பா!
ஆசையாய் நாங்கள் அழைப்பது கண்டு
ஆண்டவனும் அழைத்தானோ உங்களை தன்னிடத்தில்
எங்களுக்குப் பாச உறவாய்; ஊருக்கு உபகாரியாய்;
பொதுச்சேவையிலே சேவகனாய், நண்பருக்குக்கெல்லாம் அண்ணனாய்!
எத்துயர் வரினும் கலங்காத மனத்தினனாய்
உன்னதமாய் வாழ்ந்த உத்தமரே! அப்பா!......
தம்பியின் பின் அம்மாவை அதன்பின் உங்களை.....
நீங்கள் போன துயர் பெரிதென்று நான் அழுதிருக்க
அதைவிட பெருந்துயரை ஆண்டவனும் தந்துவிட்டான்
அப்பா! வாசலிலே நீங்கள் மாலையிட்டு வரவேற்ற
உங்கள் ஆசை மருமகனும் வந்துவிட்டார் உங்களிடம்
ஆறவில்லை என்மனமும், ஓயவில்லை என் கண்ணீரும்
பிள்ளைகளும் நானும் தனித்திங்கு வாடுகிறோம்
உங்களின் ஆத்மாக்கள் என்றும் எங்களை
காத்து நிற்க...........

உங்களின் நினைவுகளுடன்:
அன்பு மகளும்,
ஆசைப் பேரர்களும்.

"திருவதிகை",
வேளாவை, துளவெட்டி. *(92662)*

### சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.01

டயக்கொனியா நிறுவனத்தின்உதவி யுடன்யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தால் நடத்தப்பட்ட திட்டம் தயாரித்தல் தொடர்பான பயிற்சி நெறியில் பங்குபற்றியவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு இணையத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் இணையப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கரித்தாஸ்-கியூடெக் நிறுவனப் பணிப்பாளர் அருட்பணி சி.ஜி.ஜெயக்குமார் அடிகளார் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு பயிற்சிபெற்றவர்களுக்கான சான்றிதழ்களை வழங்குவார்.

(50-201)

### மாற்று வலுவுள்ளோர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம். டிசெ.01

யாழ். கல்வி வலயத்தின் விசேட கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் உலக மாற்று வலுவுள்ளோர் தினவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் த.இராஜலிங்கம் தலைமையில்நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அவேதநாயகமும், சிறப்பு விருந்தினராக எச்.என்.பி அஷ்ஷூரன்ஸ் நிறுவனத்தின்வடக்கு-கிழக்கு வலய முகாமையாளர் மாணிக்கவாசகர் புவிராயும் கலந்து கொள்வர்.

(50-201)

### பரீட்சை அனுமதி அட்டை வழங்கல்

யாழ்ப்பாணம். டிசெ.01

கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்களின் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு வழங்கப்படவுள்ளதால் மாணவர்கள் சீருடை அணிந்து பெற்றோருடன் சமுகமளிக்குமாறு கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

(201)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



மல்லாகம் காளி கோயிலடியைச் சேர்ந்த

## திருமதி பகீரதன் மஞ்சுளா

கடந்த 12.11.2009 இல் University of East London இல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் Msc International Marketing Management பட்டத்தைப் பெற்றுக் கொண்டதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைவதோடு அவர் மேலும் பல பட்டம் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

ஏழாலை மத்தி,
ஏழாலை.

வாழ்த்துபவர்:
சி.சிவகுமாரன் குடும்பம்
(மாமா)

(92648)

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்
கொத்தணி மானிப்பாய்

# கூறுவிலை கோரல்

எமது கொத்தணியினால் நவாலியில் நடத்தப்படுகின்ற பனம் சாராய வடிசாலையில் வடிசாலைப் பொறித் தொகுதிகள் அதனோடு இணைந்த இயந்திர உபகரணங்கள் என்பனவும் அதனோடு இணைந்த இணைப்புக்களும் திருத்தம் சேவிஸ் செய்வதற்கும், மாற்ற வேண்டிய பொருள்கள் மாற்றுவதற்கும், மாபிள் பெட்டி புனரமைப்பதற்கும் கூறுவிலை கோரப்படுகின்றது.

வடிசாலைப் பொறித்தொகுதி புதிதாக அமைத்தமை அல்லது திருத்தம் சேவிஸ் செய்தமைக்கான உறுதிப்படுத்தல் கடிதம் சமர்ப்பிக்கும் தகுதி வாய்ந்த நிறுவனங்கள் மட்டும் கூறுவிலை சமர்ப்பிக்கலாம். கூறுவிலை சமர்ப்பிக்க விரும்புவோர் இதனைப் பார்வையிட்டு இவ்வேலைக்கான கூறுவிலையையும் வேலை விவரங்களையும் குறிப்பிட்டு எதிர்வரும் 14.12.2009ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு முன்னர் *"தலைவர் வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி மானிப்பாய்"* என்னும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரிலோ ஒப்படைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

*(வேலைக்கான உத்தரவாதம் 1 வருடம் இருத்தல் வேண்டும்)*

பொது முகாமையாளர்
வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக்
(சி/562829) கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி மானிப்பாய்.

# ஈரவிழிகளுடன் ஓராண்டு நினைவோடு....

திருமதி தனலெட்சுமி
பாலசுப்பிரமணியம் (மனோன்)
(நயினாதீவு 5 ஆம் வட்டாரம்)
திதி: (01.12.2009) சதுர்த்தசி



**அன்னை மடியில்: 05.09.1951**
**ஆண்டவன் அடியில்:12.12.2008**

அம்மா!
பத்து மாதம் சுமந்து பாலூட்டி சீராட்டி
கலைகள் பல கற்றுத் தந்து இவ் வையத்துள்-எம்மையும்
ஒரு உயிராக வாழ வைத்தவளே!
எம்மைப் பிரிந்து நீங்கள் சென்று
ஓராண்டு ஆகிவிட்டபோதும்
உங்கள் மீது நாம் கொண்ட பாசம்
நீங்கள் எம்முடன் இருப்பது போலவே உள்ளது
நீங்கள் எம்முடன் உருவமாக இல்லாத போதும்
எம் நினைவில் என்றும் கலந்திருப்பீர்கள்

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் நினைவால்
துயருறும்:
குடும்பத்தினர்.

இல.06, வளாக வீதி,
திருநெல்வேலி.

(92667)

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் வேலாசிப்பிள்ளை



நெடுந்தீவு மேற்கு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பாண்டியன் குளத்தை வசிப்பிடமாகக் கெண்டிருந்தவரும் தற்போது வளசரவாக்கம், சென்னையில் வசித்து வந்தவருமான சுப்பிரமணியம் வேலாசிப்பிள்ளை 28.11.2009 அன்று இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்புப் மனைவியும் பரமேஸ்வரி (இந்தியா), மகேஸ்வரி (பாண்டியன்குளம்), மகாதேவா (நெடுந்தீவு, அனலைதீவு), தில்லைநாயகி (யாழ்ப்பாணம்), சுந்தரலிங்கம் (G.S- பாண்டியன்குளம்), மலர் (பாண்டியன்குளம்), புஷ்பாவதி (இந்தியா), லலிதா (சிவபுரம்) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (30.11.2009) திங்கட்கிழமை இந்தியாவில் நடைபெற்றது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
சு.மகாதேவா (மகன்)
சு.சுந்தரலிங்கம் (மகன்)
தொ.பே: *00914424764008*

No.65, Srinagar
Poonthoddam,
Vavuniya.

(92664)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருடந்தோறும் 10 லட்சம் பேருக்கு மேல் உலகில் எயிட்ஸ் நோயினால் பாதிப்பு

## துணைப்படுத்த மருந்து இல்லாததால் இந்த நிலை

**சர்வதேச எயிட்ஸ் தினம் இன்று டிசெம்பர் முதலாம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. அதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.**

உலக நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இலங்கையில் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டோர் குறைவானவர்களே. இலங்கையில் 1987 ஆம் ஆண்டு பாதிக்கப்பட்ட முதலாவது நோயாளி கண்டுபிடிக்கப்பட்டார்.

அன்றிலிருந்து இன்று வரை ஆயிரத்து 378 பேர் எயிட்ஸ் தொற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என பதிவுகள் காண்பிக்கின்றன. ஐயாயிரத்துக்கு மேற்பட்டோர் இத்தொற்றுநோய்க்கு இலக்காகியுள்ளார்கள். இதுவரை 198 பேர் இதன் காரணமாக இறந்துள்ளார்கள். 250 மேற்பட்டோர் ஆபத்தான நிலையில் உள்ளார்கள்.

இலங்கையில் ஐ.நா. நிறுவனம், சர்வதேச அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், உள்ளூர் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் இதற்கான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றன.

அத்துடன் பாதிக்கப்பட்ட வர்களுக்கு சிகிச்சை முறைகளுடன் பராமரிப்புச் சேவைகளையும் செய்து வருகின்றன.

2005 ஆம் ஆண்டு ஜப்பானில் உள்ள கோபி நகரில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் தற்போது ஆபிரிக்கா கண்டத்தை விட ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் இந்நோய் மிகவும் மோசமாகப் பரவி வருவதாக அறிவிக்கப்பட்டது.

மேலும் இந்நோய் மிகவும் வேகமாக தெற்காசியாவில் சீனாவுக்குப் பரவி மற்றும் பிராந்தியங்களுக்கும் தொடர்ந்து பரவி வருவதினால் 2010 ஆம் ஆண்டளவில் 2 கோடி மக்கள் இந்த நோயினால் பாதிக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலகில் ஒவ்வொரு வருடமும் 50 இலட்சத்துக்கு அதிகமானோர் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். அவர்களில் 30 இலட்சம் பேர் ஒவ்வொரு வருடமும் பலியாகிறார்கள்.

உலகில் ஒவ்வொரு நாளும் 140 பேர் எயிட்ஸ் பாதிப்புக்குள்ளாகிறார்கள். 15 வயதுக்குட்பட்ட 35 இலட்சம் சிறுவர்கள் எயிட்ஸ் நோய் காரணமாக தமது பெற்றோர்களை இழந்துள்ளார்கள். 2 கோடி மக்கள் பலியாகி உள்ளார்கள்.

15 முதல் 24 வயதுக்குட்பட்ட இளைஞர்களில் ஏறக்குறைய 1 கோடி 20 இலட்சம் இளைஞர்கள் எயிட்ஸ் தொற்றுடன் வாழ்கிறார்கள்.

ஒவ்வொரு நாளும் ஏறக்குறைய 6 ஆயிரம் இளைஞர்கள் தொற்றுக்குள்ளாகிறார்கள். ஐ.நா. அறிக்கையின்படி தினமும் 8 ஆயிரம் பேர் எயிட்ஸ் நோயினால் உயிர் இழக்கிறார்கள் எனவும், 15 முதல் 49 வயதுக்குட்பட்ட பெண்களில் 3 கோடி 70 இலட்சம் பேர் இந்த நோயினால் துயருறுகிறார்கள் எனவும் குறிப்பிடப்படுகிறது.

ஆபிரிக்காவை அடுத்து இந்தியா இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. இந்தியாவின் அகதிகளின் வருகையினால் வடக்கு, கிழக்கு மாகாணம் நோய் பாதிப் புக்குள்ளாகி வருவதாகக் கூறப்படுகிறது.

குறிப்பாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் எயிட்ஸ் நோய் பாதிப்பு அதிகரித்துள்ளது. யாழ்ப்பாணத்தில் 30 பேர் எயிட்ஸ் நோயினால் பாதிப்படைந்துள்ளார்கள். எனவே நாம் முன்னேற்பாடுகளுடன் எயிட்ஸ் நோயில் இருந்து எம்மைப் பாதுகாக்கத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வைரஸ் கிருமி தொற்றி 6 தொடக்கம் 12 வாரங்களின் பின்னர் நோயின் அடையாளங்கள் வெளிப்படும்.

எயிட்ஸ் நோய் பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் இலங்கை மக்களுக்குப் பூரண விழ்ப்புணர்வுகள் இல்லை.

இலங்கையில் மேல் மாகாணத்தில் மட்டும் 409 பேர் எயிட்ஸ் நோயினால் பாதிப்படைந்துள்ளார்கள். எயிட்ஸ் நோய் தொடர்பாக தேசிய ரீதியில், பொதுவாக ஓர் உத்தியோகபூர்வமான கொள்கைத் திட்டம் எமது நாட்டில் இன்றுவரையும் அமுல் படுத்தப்படாது இருப்பது ஓர் துரதிஷ்டமாகும்.

1990 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் அரசு இது குறித்து சட்டம் ஒன்றை வரைந்த போதிலும் பலதரப்பட்ட எதிர்ப்புகளுக்கு மத்தியில் அம்முயற்சி கைவிடப்பட்டது.

எயிட்ஸ் பரிசோதகர்களுக்கு முன்னும் பின்னும் மேற்கொள்ளப்படும் வழிகாட்டி ஆறுதல் அளிக்கும் நடவடிக்கைகள் கிரமமாக மேற்கொள்ளப்படுவதில்லை. அத்துடன் இந்நோயின் இரகசியங்கள் பாதுகாக்கப்படுவதாகவும் இல்லை.

எமது நாட்டில் நகர்ப்புற வைத்தியசாலைகளில் பரிசோதனை உபகரணங்கள் காணப்படுகின்றன. 29 பிரதேச வைத்தியசாலைகளில் இதற்கான வசதிகள் இருக்கின்றன.

உலக வங்கியின் அனுசரணையுடன் இலங்கையில் எயிட்ஸ் வைரஸுக்கு எதிரான மருந்து வகைகள் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இருந்து இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நோயினால் பாதிக்கப்பட்டோர் அவமானம், பாகுபாடு இழிச்சொல் ஆகியவற்றிற்குப் பயந்து சிகிச்சைக்கு வர அல்லது மருந்தெடுக்கச் செல்ல பயப்படுகிறார்கள்.

அத்துடன் இம்மருந்துகள் கொழும்பில் மட்டும் கிடைப்பதினால் ஏனைய பிரதேச நோயாளர்கள் மருந்து பெறுவதில் கஷ்டங்களை எதிர்நோக்குகிறார்கள்.

மிகவும் துன்பமான நிகழ்வு என்னவென்றால், எமது சமூகம் எயிட்ஸ் நோயாளர்களை ஏறிட்டுப் பார்ப்பதும் இல்லை. அவர்கள் மீது கருணைகாட்டுவதும் இல்லை. ஆனால், அவமானம் தரும் வார்த்தைப் பிரயோகங்களை நோயாளர் மேல் மேற்கொண்டு வருகிறார்கள்.

இந்த நோயைக் கட்டுப்படுத்த இதுவரையும் எவ்விதமான மருந்துகளோ கண்டுபிடிக்கப்படவில்லை. நாளாவட்டம் விஞ்ஞானிகள் இதற்காகப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நோய் மனிதரில் உள்ள எதிர்ப்புச் சக்தியைக் குறைக்கின்ற ஓர் வைரஸ் நோயாகும்.

இந்த வைரஸுக்கு மனிதரின் உடம்பில் மட்டும்தான் வாழமுடியும். வேறு எங்கும் வாழமுடியாது. பொதுவாக வெளிநாட்டில் இருந்து உள்நாட்டுக்குள் நுழைபவர்களும், பாலியல் தொழிலாளர்களும், தன்னினச் சேர்க்கையாளர்களுமே தொற்று அதிகரிப்பதற்குத் துணை போகின்றனர் என அவர்களை குற்றஞ்சாட்டுகின்றனர்.

நோய் பரவுவதற்கான காரணிகள்:- விந்து, யோனிக்கசிவு, இரத்தம், மாதவிடாய் உட்பட முலைப்பால், உமிழ்நீர், சிறுநீர் ஆகியன வாகும்.

### நோய் தொற்றும் விதம்

நோய் தொற்றுக்குள்ளானவரிலிருந்து மூன்று வழி வகைகளிலேயே இது பரவுகின்றது.

1.பாதுகாப்பற்ற உடலுறவு மூலம் பரவும் யோனி, குதம் வாய்புணர்ச்சி வேளை தொற்று ஏற்படலாம். ஆண்களை விட பெண்களே அதிக அளவில் பாதிக்கப்படுகின்றார்கள். வயது முதிர்ந்த பெண்களை விட இளம் பெண்களே அதிக அளவில் தொற்றுக்குள்ள ாகிறார்கள்.

2.நோய்தொற் றுடையவரின் குருதியை மற்றவருக்கு உபயோகப் படுத்துவதினால் பரவுகிறது. துளை கருவிகளையும், ஊசிகளையும் உபயோகித்து போதை வஸ்து ஏற்றிக் கொள் ளல். அதே ஊசியை இன்னும் ஒருவர் பாவிக்கும்போது நோய் பரவும்.

3.தொற்றுள்ள தாயில் இருந்து பிறக்கும் பிள்ளைக்கு பரவும் கர்ப்பக் காலத்தில் அல் லது பிரசவ வேளை யில் தாயினது இரத்தத்தின் மூலம் அல்லது தாய் பால் அருந்து கையில் தொற்று பரவும்.

உலகில் தொற் றுக்குள்ளானவர் களில் 50 சதவீத மானோர் இளம் வயதினரே. நாட்டிற்கும் வீட்டிற்கும் சேவையாற்ற வேண்டிய காலத்தில் தொற்றுக்குள்ளாவதால் தாமும் அழிந்து அவர்களுடன் தொடர்புள்ளவர்களும் அழிய வேண்டிய நிர்ப்பந்தமும் உண்டு.



### தடுக்கும் முறைகள்:-

பாதுகாப்பான உடலுறவின் மூலம் தவிர்த்துக்கொள்ளலாம். பாதுகாப்பான குருதி மாற்றத்தைக் கடைப்பிடித்தால் பரவாது. தாயின் மூலம் குழந்தைக்கு எயிட்ஸ் பரவாமல் இருக்க தாய் மருத்துவ ஆலோசனையை பெற்றுக்கொள்ள வேண்டும்.

விசேடமாக உடலுறவின்போது ஆணுறை பாவிப்பது நல்லது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற முறையில் வாழ்வது சகலருக்கும் நன்மை பயக்கும்.

### வேலைத்தலங்கள்:-

வேலைத்தலங்களில் வேலைசெய்யும் உத்தியோகஸ்தர்கள் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்படக்கூடும். வேலையாட்களின் சுகநலத்தையும் அவர்களின் வல்லமையையும் உயர்த்துவதற்கு முகாமைத்துவம் துணையாக இருக்க வேண்டும்.

ஒரு ஸ்தாபனத்தின் உற்பத்தி பெருகவேண்டுமாயிருந்தால், அங்கு வேலை செய்யும் மக்களின் உடல்நலமும் உற்பத்திசெய்யும் ஆற்றலும் முக்கிய கவனத்தில் எடுக்கப்படல்வேண்டும். இதன் மூலம் எயிட்ஸ் வராமல் தடைசெய்வதுடன் மேற்கொண்டு பரவுதலையும் தடைசெய்யமுடியும். நோயினால் பாதிக்கப்பட்ட வேலையாளும், பாதிக்கப்படாத மற்ற வேலையாட்களும் வித்தியாசமின்றி ஒன்றாக வேலை செய்வது உற்பத்தியை அதிகரிக்க வழிவகுக்கும்.

### விழிப்புணர்வுக்கான செயற்பாடுகள்:-

★ விழிப்புணர்வு பயிற்சிகள் முதலில் ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு கொடுத்து இவர்கள் மூலமாக பொதுமக்களுக்கு அளித்தல்.

★ அரசியல் தலைவர்களையும் பங்குபற்ற வைத்தல்.

★ எயிட்ஸினால் பாதிக்கப்பட்டவர்களை - விசேடமாக பெண்களை இந்த விழிப்புணர்வு செயற்பாடுகளில் பங்குபற்ற வைத்தல்.

★ ஒவ்வொரு மாவட்ட வைத்தியசாலைகளிலும் செய்திப் பரிமாற்ற அலுவலகம் வைத்தல்.

★ தாதிமாருக்கு விசேட செயலமர்வு கொடுத்து

பீ.ஏ. அந்தோனிமார்க்

பால் சம்பந்தப்பட்ட இனவிருத்தி செயற்பாடுகளுக்கு அறிவுரை வழங்குதல்.

★ எயிட்ஸ் கல்வி சகல பாடசாலைகளிலும் உயர்வகுப்பு மாணவர்களுக்கு விசேடமாக பாலுணர்வு சம்பந்தமான பயிற்சிகள் சகல மாணவ மாணவிகளுக்கு வழங்கப்படல்வேண்டும்.

★ விசேடமாக பால்புணர்ச்சி, கற்பழித்தல், மூர்க்கத்தனமாகத் தாக்குதல், சிறுவர் துஷ்பிரயோகம் போன்றன கற்பிக்கப்படுதல் வேண்டும். பெண்களின் இனப் பெருக்க சுதந்திரம் பாதுகாத்தல் வேண்டும்.

★ ஆலோசனை சேவைகள் பாடசாலைகளிலும், பொது ஸ்தாபனங்களிலும் செயற்படுத்துதல்.

★ பொது இடங்களில் விளங்கக்கூடிய இலகுவான பாஷையில் படங்கள், போட்டோக்கள், காட்டூன்கள் போன்றவற்றை பகிரங்கப்படுத்துதல்.

★ எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்ட வர்களின் விவரங்களைத் திரட்டி அவர்களில் ஓர் குழுவை அமைத்து, அந்தக் குழுவின் ஆலோசனை பெற்று செயற்திட்டங்கள் வடிவமைக்கப்படல்வேண்டும்.

★ சகல வைத்தியசாலைகளிலும் எயிட்ஸ் நோயுடன் வாழ்பவர்களுக்கு விசேட சலுகைகள், முன்னுரிமைகள் வழங்கப்படல்வேண்டும்.

★ சகல வைத்தியசாலைகளிலும் பெண்களைப் பார்வையிடுவதற்காக பெண் வைத்திய அதிகாரிகள் அல்லது நிபுணர்கள் நியமிக்கப்படல்வேண்டும்.

★ சகல மருந்து வகைகளும் இலவசமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

★ சகல மருந்துசாலையில் ஆலோசனை வழங்கும் செயற்பாடுகள் பிரத்தியேகமாக இருக்க வேண்டும்.

★ ஆணுறை பயன்படுத்துவது பற்றிய விழிப்புணர்வு முக்கியமாகும்.

★ ஆணுறையை இலவசமாக வழங்குவது எயிட்ஸ் பரவலை தடைசெய்வதற்கு உதவும்.

★ எயிட்ஸ் சம்பந்தமான பொருட்காட்சிகளை நடத்தலாம்.

★ ஊடகங்கள், பத்திரிகை, தொலைக்காட்சி போன்றவை நோய் சம்பந்தமான விளம்பரங்களையும் வெளிப்படுத்தி ஆலோசனைகளை வழங்கவேண்டும். ★

# 'சோதியாய் எரியும் தீபங்கள் எம் நெஞ்சங்களுக்கு ஆறுதல் தரட்டும்'

**இன்று (01.12.2009) செவ்வாய்க்கிழமை திருக் கார்த்திகை விரத தினமாகும். குமாராலய தீபம் மற்றும் சர்வாலய தீபம் ஆகிய இரண்டும் இம்முறை ஒரே நாளில் அமைகின்றன. திருக்கார்த்திகை விரதத்தையொட்டி இந்த ஆக்கம் இங்கு பிரசுரமாகிறது.**

கற்பனை கடந்த சோதிக்கருணையே வடிவமாகி ஆருயிர் முழுதும் மேவி அனைத்தையும் இயற்றி அருளும் பூரண முதல்வ னான இறைவன் சோதி வடிவானவன் என்பதனைத் தெளிவுபடுத்தும் நாளே திருக் கார்த்திகை நன்னாள்.

பிரபஞ்சமெங்கும் மறைபொருளாக, தோன்றாத் துணையாக, பிரம்மமாய் நின்றதோர் சோதிப் பிழம்பாக, ஆறுமுகமான பொருளாக, வான் மகிழ வந்தவன் குமரன், அழகன் முருகன் எனும் இனிய பெயர் கொண்டவன். கனலில் கருவாகி புனலில் உருவான தெய்வக் குழந்தை அவன். ஆயிரம் இதழ் கொண்ட தாமரை மலர்களில் தவழ்ந்தவன். கார்த்திகைப் பெண்டிர் எடுத்தணைத்த பேறு பெற்றவன்.கார்த்திகை மாதர் திருப்பாலுண்டு கார்த்திகேயனானவன். ஆறு திருவுருவும் அம்மையின் அணைப்பால் ஒன்றாகி கந்தனானவன். சார்ந்தார்க்கரு ளும் சண்முகனாகி, கருணைபொழி கதிரேசனாகி, அருள் சொரியும் ஆறுமுகனாகி, முக்கட்பரமற்கு சுருதியின் முற்பட்டது கற்பித்து திருவருள் செய்து சிவகுருவாகி, வைதாரையும் வாழ வைக்கும் வள்ளலாகி நின்றாளும் ஞானக்குமரனையெண்ணித் தீபங்கள் ஏற்றி வழிபடும் நன்னாளே திருக்கார்த்திகை நாளாம்.

கந்தப் பெருமானுக்குக் கார்த்திகைத் திங்களில் வரும் கார்த்திகை நட்சத்திரமே உகந்தது , உயர்ந்தது. அதனால் கார்த்திகை மாதத்தில் வரும் பூரணைத் திதிக்கு முதல் நாளில் கூடும் கார்த்திகை நட்சத்திரத்துக்கு 'திரு' எனும் அடைமொழி கூட்டித் திருக் கார்த்திகையென்று இந்துக்களால் போற்றப்படுகின்றது.குமரன் உறை கோயில்கள் எங்கும் வெகுசிறப்பான பூசைகள் இடம் பெற்று திருவிழாவாகத் தீபங்களையேற்றியும் சொக்கப்பானையெரித்தும் கொண்டாடி வழிபடுதலால் குமாராலய தீபம் எனும் சிறப்புப் பெயரையும் பெற்றது.

இப் புண்ணிய நாளில் உணவொறுத்து, உபவாசம் இருந்து விரதம் அனுஷ்டிப்பது இன்றும் தொடர்கின்றது. இந்துக்களின் பாரம்பரிய விரத நாள்களில் மேலான நோன்பு நாளாகக் கொண்டாடப்படும் இத்தி னத்தில் முருகன் திருக்கோயில்களில் மாவிளக்கு ஏற்றி வழிபடும் வழக்கம் உள்ளது. தேனும் தினைமாவும் சேர்த்துச் சர்க்கரையும் கூட்டி வாழைப்பழத்தில் பிசைந்து ஒற்றையிலக்க எண் வரிசையில் அகல் விளக்கின் சாயலில் செய்து நெய் யூற்றித் திரியுமிட்டு விளக்கேற்றி விரும்பிய வரம் கேட்டு மெய்யுருகிப் பணிந்தேத்து வது சாலவும் சிறந்தது.

திருக்கார்த்திகைத் தினத்தன்று முருகப் பெருமான் திருவடிக்கு நெல்லியின் இலை கொட்டி வழிபடுவது பெரு நன்மையை ஈட்டித் தரும் என்பர். [illegible] திருக்கார்த்திகைத் தினத்து நெல்லியின் இலை கொடு குகனடிக்கிறைத்துள்ளோரெல்லாஞ் சொலுமிலைக் கொரு மகந்தொடர்பினாற்றிய பலனடைவாரென பருக நான் மறை'' எனத் திருச்செந்தூர்ப் புராண செய்யுள் புகழ்ந்து பேசுகின்றது.

திருக்கார்த்திகைத் தினத்துக்கு மறுநாள் பௌர்ணமித் திதியில் சர்வாலய தீபம் இடம் பெறும். சில காலங்களில் திருக்கார்த்திகை நாளில் போதும் சர்வாலய தீபநாள் வருவதுண்டு. மனைகள் தோறும் கோலங்கள் போட்டு அடுக்கடுக்காக விளக்கேற்றி இந்துக்கள் கொண்டாடுதலை விளக்கீடு என்றும் அழைப்பர். ஊரெல்லாம் எரியும் விளக்கின் ஒளிப்பிரகாசம் சூழ்ந்திருக்கும் இருளையகற்றி மன இருளையகற்றி மயக்கத்தையகற்றி இறையுணர்வை ஊட்டிநிற்கும்.

பூரணைத் தினத்தில் விஷ்ணு ஆலயங்களில் தீபத்திருநாள் இடம்பெறும். இங்கும் விசேட பூசைகள் இடம் பெற்று வெளியில் சொக்கப்பானையும் எரிக்கப்படும். ''முடிச் சோதியாய் உனது முகச்சோதி மலர்ந்ததுவோ அடிச்சோதி நீ நின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ'' என நம்மாழ்வார் ஓதியதற்கு ஒப்ப ஓங்கி உலகளந்தான் பேர்பாடி சொக்கப்பானை சுவாலை விட்டெரியும் காட்சி பரவசமானது.

திருவண்ணாமலையில் திருக்கார்த்திகை நாள் வெகு கோலாகலமாக, சமய நிகழ்வாக, பெரும் சமூக விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. பன்னெடுங்காலமாக மலை வாழ் பூர்வீகக் குடிகளால் இவ்விழா குலவழிபாடாக, தெய்வக் கடமையாக பாரம்பரிய மகிழ்ச்சிக்காகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

ஒருவாரகாலத் துக்கு அணையாது நின் றெரியக் கூடியதாகத் தீபங்களையேற்றி வழிபடும் காட்சி சிறப்பானது. திருவண்ணாமலைத் தீபத் தைத் தரிசிக்க இலட்சோப இலட்ச மக்கள்அலைஅலையாகத் திரண்டுவந்து வணங்குதல் இன்றும்வழக்கில்உண்டு. மலையுச்சியில்தீபம் எரியும்போது மலையடிவாரத்தில் சொக்கப்பானையெரியும் காட்சி பரவசத்தையூட்டும் மெய்சிலிக்க வைக்கும். இத் தீபத்தைத் தரிசிப்பார்க்கு தீராதவினை தீரும், வாழ்வும் வளம்பெறும் என்பது இந்துக்களின் அசையாத நம்பிக்கை. திருக்கார்த்திகையின் சிறப்பை,அதன்பெருமையை சம்பந்த சுவாமிகள் ''தொல் கார்த்திகை நாள் தளத்தேந்தின முலையார் தையலார் கொண்டாடும் விளக்கீடு காணாதே போகுறியோ பூம்பாவாய்'' எனப் பாடியருளியுள்ளார்.



கந்த-தியாகராசா
கோண்டாவில்.

திக்கெல்லாம் ஒளிபரப்பி புறவிருள் போக்கி அகவிருளையும் நீக்கும் விளக்கீடாம் இத்தீப நாளில் இவ்விடமெங்கும் இடர் விலகி இனியன பெருகி இன்பம் மலிந்தோங்க தெய்வத் திருக்குமரன் திவ்வியதாள் பணிந் தேத்துவோம். மனுக்குலம் வாழ, மனித நேயம் வளர இத்திருநாளில் இறைவனைப் பிரார்த்திப்போம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# HERO HONDA

HERO HONDA
**World No. 1**
Two-Wheeler Company

பல சகாப்தங்களின் பின்னர்
***Honda, Hero Honda***
மோட்டார் சைக்கிள்கள்
கொழும்பு விலையில் விற்பனையாகின்றது
என்பதை மகிழ்ச்சியுடன்
தெரியப்படுத்துகின்றோம்.


HONDA





## *Hero Honda Motorcycle Price List*

| Model | Engine Cap.cc | Price per Unit Rs.(EX.Vat) | Vat 12% Rs | BTT 1% | Price With Vat & BTT |
|---|---|---|---|---|---|
| CD Dawn | 100 | 95,916 | 11,510 | 1,074 | 108,500 |
| Splendor Plus | 100 | 102,546 | 12,306 | 1,149 | 116,000 |
| CD Deluxe(Spoke) | 100 | 107,850 | 12,942 | 1,208 | 122,000 |
| Splendor NXG (Kick/Cast) | 100 | 108.839 | 13,061 | 1,219 | 123,119 |
| Splendor NXG (Self/Cast) | 100 | 118,237 | 14,188 | 1,324 | 133,750 |
| Pleasure(Scooter) | 100 | 120,226 | 14,427 | 1,347 | 136,000 |
| Passion Pro(Self/Cast) | 100 | 126,414 | 15,170 | 1,416 | 143,000 |
| Super Splendor | 125 | 136,138 | 16,337 | 1,525 | 154,000 |
| Glamour UG | 125 | 140,559 | 16,867 | 1,574 | 159,000 |
| Glamour F1 | 125 | 154,703 | 18,564 | 1,733 | 175,000 |
| Hunk | 150 | 167,875 | 20,145 | 1,880 | 189,900 |
| CBZX-treme-old | 150 | 162,232 | 19,468 | 1,817 | 183,517 |
| CBZX-treme-New | 150 | 173,709 | 20,845 | 1,946 | 196,500 |
| Karizma | 225 | 215,258 | 25,831 | 2,411 | 243,500 |





## *Honda Motorcycle Price List*

| Model | Engine Cap.cc | Retail Price (Exc.Vat) | Vat 12% Rs | BTT 1% Rs | Total Amount (Inc.VAT) | Colours Avilable |
|---|---|---|---|---|---|---|
| DIO(Scooter) | 100 | 119,342 | 14,321 | 1,336 | 135,000 | Red,Blue,Gray |
| STUNNER | 125 | 154,702 | 18,564 | 1,732 | 175.000 | Red,Black |
| UNICORN Sport | 150 | 163,300 | 19,596 | 1,828 | 184,724 | Red |
| UNICORN Premium | 150 | 172,383 | 20,686 | 1,930 | 195,000 | Black,Silver |
| CBR | 150 | 251,944 | 30,233 | 2,821 | 285,000 | Black,Red |



Stunner





RG
# இரத்தினகோபால்ஸ்
63,65, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6183, 021 222 9231.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





செலான் வங்கியின் நெல்லியடிக் கிளைத் திறப்பு நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மாலை அணிவித்து அழைத்து வரப்பட்டு, ஆரத்தி எடுத்து வரவேற்கப்படுவதை மேல் வரிசையின் முதல் இரண்டு படங்களிலும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் நாடாவை வெட்டிப் புதிய கிளையைத் திறந்து வைப்பதை மூன்றாவது படத்திலும், மதகுருமார் ஆசியுரை வழங்குவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். நடுவரிசையின் முதலாவது படத்தில் இறைவணக்கம் நடைபெறுவதையும் அடுத்துள்ள படங்களில் முறையே , செலான் வங்கியின் தலைவர் ஈஸ்ட்மன் நாரங்கொட, ஜனாதிபதியின் நிதி ஆலோசகர் கலாநிதி ராணி ஜெயமகா, செலான் வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆர்.நடராஜா ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதைக் காணலாம். பயனாளி ஒருவருக்கு செலான் வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆர்.நடராஜா கடன் வழங்கும் அத்தாட்சிக் கடிதத்தைக் கையளிப்பதையும், மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், செல்ல முத்தூஸ் புடைவையக உரிமையாளர் எஸ்.பிரேம்குமாரிடம் பணத்தைப் பெற்று முதலாவது வைப்பை ஆரம்பித்து வைப்பதையும் மூன்றாவது வரிசையில் உள்ள இரண்டு படங்களிலும் காணலாம்.

*(படங்கள் - ஒளண்யன்)*

# வடக்கில் நீதி, நிர்வாகத்தை சீரமைக்க உயர்நீதிமன்ற நீதியரசர் ஸ்ரீபவன் தலைமையில் குழு

கொழும்பு, டிசெ. 01

வடமாகாணத்தில் நீதி, நிர்வாகத்தைச் சீர் செய்வதற்காக உயர்நீதிமன்ற நீதியரசர் கே.ஸ்ரீபவன் தலைமையிலான உயர்மட்டக்குழு ஒன்று நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொடவால் நியமிக்கப்பட்டுள்ளது.

இதன் ஏனைய உறுப்பினர்களாக நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் சுகத் கம்லத், அரசமைப்பு விவகார அமைச்சு செயலாளர் மல்காந்தி விக்கிரமசிங்க, நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் (சட்டம்) கமலினி டீ. சில்வா நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் (நிர்வாகம்) எஸ்.ரஹுவட்ட, யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், நீதிச்சேவை ஆணைக்குழுவின் உதவிச் செயலாளர் எம்.பி.டீ.சில்வா, பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் ஏ.ஞானதாஸன், நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிர்வாகம்) டபிள்யூ. ஏ.செனரட்ண, சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் வி.ஆர்.டி. சில்வா, யாழ். மாவட்ட அரச அதிபர் கே. கணேஷ், சமுதாய சீர்திருத்த ஆணையாளர் நாயகம் லலித் அன்றாஹனடி, நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் பிரதம கணக்காளர் (விநியோகங்கள்)திலந்தி பெர்னாண்டோ ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 30 வருட கால யுத்தத்தால் வடமாகாணத்தில் பெரிதும் நிலை குலைந்து போயிருக்கும் நீதி நிர்வாகத்தை மீளக் கட்டியமைத்துச் சீர் செய்வதே இந்த உயர்மட்டக்குழு நியமிக்கப்பட்டிருப்பதன் நோக்கம் என்று கூறப்பட்டது.

வடமாகாணத்தில் நீதி நிர்வாகத்தை சீர் செய்வதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய பூர்வாங்க நடவடிக்கைகள் எவையென்று இக்குழு ஆராய்ந்து அது தொடர்பாக நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சுக்கு ஆலோசனைகள், வழிகாட்டல்கள், சிபாரிசுகள், அறிவுறுத்தல்கள், யோசனைகள் ஆகியவற்றை ஓழங்கும்.

# சுவரொட்டி ஒட்டியவர்கள் தாக்கப்பட்டனர்

கொழும்பு, டிசெ. 01

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக நேற்று மாலை ஜே.வி.பியினர் நடத்திய ஆர்ப்பாட்டம் தொடர்பான சுவரொட்டிகளை அத்துருகிரிய பகுதியில் நேற்றுக்காலை ஒட்டிக்கொண்டிருந்த ஜே.வி.பி. உறுப்பினர்கள், லொறி ஒன்றில் வந்த ஆளும் தரப்பு ஆதரவாளர்கள் எனக் கருதப்படும் சிலரால் கடுமையாகத் தாக்கப்பட்டனர் என்று கூறப்படுகின்றது. தாக்குதல்களுக்கு இலக்கானவர்களில் ஒருவர் உயிருக்கு ஆபத்தான் நிலையில் அத்துருகிரிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல் குறித்து அத்துருகிரிய பொலிஸில் முறைப்பாடு செய்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என ஜே.வி.பியினர் குறை கூறினர். (அ-சி)

# பொதுநலவாய அமைப்பின் உச்சிமாநாட்டை 2013 இல் நடத்த இலங்கைக்கு வாய்ப்பு

கொழும்பு, டிசெ.1

பொதுநலவாய அமைப்பின் அடுத்த உச்சிமாநாட்டை - 2011 இல் நடத்தும் - வாய்ப்பை இலங்கை எதிர்பார்த்தபோதிலும் அது கிட்டவில்லை. அந்த வாய்ப்பு ஆஸ்திரேலியாவுக்கு வழங்கப்பட்டது.

எனினும், ஆறுதல் பரிசாக 2013 உச்சிமாநாட்டை நடத்தும் வாய்ப்பு இலங்கைக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

2011 இல் நடைபெறவிருக்கும் அடுத்த மாநாட்டை நடத்தும் கௌரவம் தனக்குத் தரப்படவேண்டும் என இலங்கை கோரியிருந்தது.

ஆனால், இலங்கையில் தற்போது மனித உரிமைகள் பேணப்படுவது தொடர் பான விவகாரம் சர்வதேச எதிர்ப்பு அலைகளை கிளப்பியுள்ள பின்னணியில்; இந்த கௌரவத்தை இலங்கைக்கு உடனடியாக வழங்குவதற்கு பொதுநலவாய அமைப்பின் கூட்டத்திலும் பலத்த எதிர்ப்பு அங்கத்துவ நாடுகளில் காட்டப்பட்டது.

இதனால் அடுத்த உச்சிமாநாட்டை நடத்தும் கௌரவம் ஆஸ்திரேலியாவுக்கு வழங்கப்பட்டது.

இருப்பினும், 2013 இல் இம்மாநாட்டை நடத்தும் கௌரவத்தை இலங்கைக்கும் , 2015 இல் இம்மாநாட்டை நடத்தும் கௌரவத்தை மொறிஸியஸுக்கும் வழங்க அண்மையில் இடம்பெற்று முடிந்த பொதுநலவாய அமைப்பின் உச்சிமாநாட்டில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

பிரித்தானியப் பிரதமர் கோர்டன் பிறவுண் இது தொடர்பான திட்டத்தை மாநாட்டில் முன்மொழிந்தார். ஏனைய அங்கத்துவ நாடுகள் அதனை ஏற்றுக்கொண்டு தீர்மானத்தை நிறைவேற்றின. (சி)

# ஜே.வி.பியின் ஆர்ப்பாட்டத்துக்கு தடை விதிக்க நீதிமன்றம் மறுப்பு

கொழும்பு, டிசெ.1

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக ஜே.வி.பி. முன்னெடுத்த ஆர்ப்பாட்டத்தைத் தடுத்து உத்தரவு வழங்குவதற்கு நுகேகொட நீதிவான் நீதிமன்றம் நேற்று மறுத்துவிட்டது. அந்த ஆர்ப்பாட்டத்துக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

''நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை, குடும்ப அரசியல் முறைமை, பதவி வெறி ஆகியவற்றுக்கு எதிராக மக்களின் பலத்தைக் கட்டியெழுப்புவோம்'' என்ற தொனிப்பொருளில் நுகேகொட ஆனந்த சமரக்கோன் மைதானத்தில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த ஜே.வி.பி. ஏற்பாடு செய்திருந்தது.

ஆனால் இவ்வார்ப்பாட்டத்தை நடத்த முடியாது என்று மிரிஹான பொலிஸார் அதற்குத் தடை விதித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்துகின்றமைக்கு எதிராக ஜே.வி.பியினர் நுகேகொட நீதிவான் நீதி மன்றத்தில் வழக்கு ஒன்றும் தாக்கல் செய்தனர். மேற்படி ஆர்ப்பாட்டத்தின் போது ஒலிபெருக்கிகள் பயன்படுத்தப்படுகின்றமையால் மக்களுக்கு அசௌகரியம் ஏற்படும் என்று பொலிஸார் நீதிமன்றில் குறிப்பிட்டனர்.

இந்த ஆர்பாட்டத்தின் ஏற்பாட்டாளராக கோட்டை ஸ்ரீ ஜயவர்த்தனபுர நகரசபையின் ஜே.வி.பி. உறுப்பினர் கசுன் தனுஷ்ட பெரேரா என்பவரின் பெயரைப் பொலிஸார் குறிப்பிட்டிருந்தனர்.

இவ்வழக்கு நேற்று அழைக்கப்பட்ட போது வழக்கோடு சம்பந்தப்பட்ட தரப்பினரின் வாதப் பிரதிவாதங்களை செவிமடுத்த நீதிமன்றம் ஆர்ப்பாட்டத்தை நடத்தலாமென்று ஜே.வி.பியினருக்கு அனுமதி வழங்கியது.

இதையடுத்து ஜே.வி.பியினரின் ஆர்ப்பாட்டம் திட்டமிட்டபடி நேற்றுமாலை இடம்பெற்றது. (சி)

# 'பார்ப்பம்' இன்று வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,டிசெ.1

'பார்ப்பம்' ஆஞ்சறிவு திங்கள் மலர் வெளியீட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இணுவில் இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம் பெறும்.

ஆசிரியை திருமதி ந.சண்முகநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரமதவிருந்தினராக வலிகாமம் வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் கலந்து கொண்டு நூலை வெளியிட்டு வைப்பார்.

திருமதி பா.ஜீவசங்கர் வெளியீட்டுரை நிகழ்த்துவார். முதற்பிரதியை தொழிலதிபர் து.சிவராசா பெற்றுக்கொள்வார். (ஒ)

# வேம்படியில் 'மதர் ஸ்ரீலங்கா' செயலமர்வு

யாழ்ப்பாணம்,டிசெ.01

இலங்கை ஜனாதிபதி செயலகத்தின் அனுசரணையுடன் 'மதர் ஸ்ரீலங்கா' செயற்றிட்ட அறி வுரைப்பு செயலமர்வு ஒன்று இடம்பெற வுள்ளது என யாழ்.வலயக் கல்விப் பணிப் பாளர் திருமதி அ.வேதநாயகம் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-


இந்த நிகழ்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியின் தம்பையா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இச்செயலமர்வை 'மதர் [illegible] தலைவரும், [illegible] பாளரும்,மாகாணக்கல்விப் பணிப்பாளரும், இணைந்த அலுவலர்களும் நடத்த உள்ளனர்.

மேற்படி செயலமர்வில் யாழ்.வலய அனைத்து 1ஏபி,1சி,தரம்இரண்டு, பாடசாலை அதிபர்களும், பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள்,கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்,உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்களும் அவசியம் பங்குபற்ற வேண்டும்.

இந்நிகழ்வில் வடமராட்சி, தீவகம், தென்மராட்சி வலயங்களின் அலுவலர்களும், அதிபர்களும் கலந்துகொள்ள உள்ளனர். ஆகவே இந்நிகழ்விற்கு சம்பந்தப்பட்டவர்களை [illegible]வாறு அவர் மேலும் தெரி[illegible]. (ஒ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபரான் அறிக்கை மீது இன்று விவாதம் மோதலுக்குத் தயாராகின்றன காங். - பா.ஜ.க.



புதுடிலலி,டிெச.1

லிபரான் குழுவின் அறிக்கை மீது இன்றும், நாளையும் நாடாளுமன்றத்தில் விவாதம் நடைபெறுகிறது. அனல் பறக்கும் விவாதத்துக்கு காங்கிரஸ், பா.ஜ.க. தயாராகி வருகின்றன. இதனால், அவையில் அனல் பறக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாபர் மசூதி இடிப்பு தொடர்பாக விசாரணை நடத்திய நீதிபதி லிபரான் குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் தாக்கல் செய்யப்பட்டது. இதில், முன்னாள் பிரதமர் வாஜ்பாய், அத்வானி, முரளி மனோகர் ஜோஷி மற்றும் சங் பரிவார் அமைப்புகளைச் சேர்ந்த 68 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதற்கு பா.ஜ.க. கடும் எதிர்ப்புத் தெரிவித்தது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி மார்க்சிஸ்ட் உட்பட சில கட்சிகள் கோரிக்கை விடுத்தன. அறிக்கையை குப்பையில்தான் போட வேண்டும் என்று பா.ஜ.க. கூறியது. லிபரான் குழுவின் அறிக்கை மீது விவாதம் நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று டிசெம்பர் முதலாம், இரண்டாம் திகதிகளில் மக்களவையில் விவாதம் நடக்கும் என்று அரசு அறிவித்தது.

அதன்படி, மக்களவையில் இன்று விவாதம் தொடங்குகிறது. விவாதத்தை பா.ஜ.க. தலைவர் ராஜ்நாத் சிங் தொடக்கி வைக்கிறார். அத்வானி உட்பட பா.ஜ.க. தலைவர்கள் பேச உள்ளனர். அரசுக்கு தங்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவிக்கவும் காங்கிரஸ் மீது குற்றம் சாட்டவும் பா.ஜ.கவினர் முடிவ செய்துள்ளனர். இதற்குக் காங்கிரஸ் பதிலடி கொடுக்கத் திட்டமிட்டுள்ளது. வாஜ்பாய், அத்வானி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ம்யூனிஸ்ட் கட்சிகள் குரல் கொடுக்கும் னவே, மக்களவையில் விவாதம் சூடு பற க்கும் என்று தெரிகிறது.

பா.ஜ.கவுக்கு பதிலடியாக, பாபர் மசூதி இடிப்பு தொடர்பாக, சங்பரிவார் மற்றும் பா.ஜ.க. மீது கண்டனக் கணை தொடுக்க காங்கிரஸும் தயாராகி வருகிறது. ஆனால், தங்கள் தரப்பில் யார் யாரை பேச வைப்பது என்று காங்கிரஸ் இன்னும் முடிவுசெய்யவில்லை. விவாதத்தில் காங்கிரஸ் தரப்புக்கு ராகுல் காந்தி தலைமை தாங்குவாரா என்று தெரியவில்லை.இதுபற்றி ஒரு காங்கிரஸ் மூத்த தலைவரிடம் கேட்டபோது, ராகுல் காந்தியை களம் இறக்குவது பற்றியோ, யார் யார் பேசுவது என்பது பற்றியோ இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை என்று கூறினார்.

லிபரான் குழுவின் அறிக்கை மீது மாநிலங்களவையில் டிசெம்பர் 7ஆம் திகதி விவாதம் நடக்க உள்ளது.

# காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்க முத்தரப்புப் பேச்சு நடத்தலாம்

## காஷ்மீர் முதல்வர் தெரிவிப்பு

டில்லி, டிச. 01

காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வுகாண இந்தியா , பாகிஸ்தான் மற்றும் பிரிவினைவாத அமைப்புகள் சேர்ந்து முத்தரப்பு பேச்சு நடத்தலாம் - என்று காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

காஷ்மீர் பிரச்சினையில் தொலைநோக்கு பார்வையுடன் செயற்பட வேண்டும். பாகிஸ்தான் எல்லையில் காஷ்மீர் உள்ளதால் அந்த நாட்டுடன் எனக்கு நெருக்கம் உள்ளது. இந்திய அரசுக்கும் நெருக்கமாக இருக்கிறேன்.

காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண இந்தியா, பாகிஸ்தான், பிரிவினைவாத அமைப்புகள் சேர்ந்து முத்தரப்பு பேச்சு நடத்த வேண்டும்.



பிரிவினைவாதிகளுடன் பேச்சு நடத்துவதில் எந்தத் தவறும் இல்லை. அப்போது தான் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும். பிரிவினைவாதிகளையும் சேர்த்துக் கொண்டால் தான் பேச்சு நம்பகமானதாகவும் அர்த்தமுள்ளதாகவும் இருக்கும். ஹரியத் மாநாடு போன்ற பிரிவினைவாத அமைப்புகள் மட்டுமின்றி ஹிஸ்புல் முஜாகிதீன் போன்ற தீவிரவாத அமைப்புகளும் வன்முறைப் பாதையைக் கைவிட்டு பேச்சுக்கு முன்வர வேண்டும் - என்றார்.

# விடுதலைப் புலிகளை ஆதரிப்போர் மீது தேசவிரோதச் சட்டம் பாயவேண்டும்!

## மத்திய இணையமைச்சர் நாராயணசாமி

சென்னை, டிெச.1

விடுதலைப் புலிகளை ஆதரிப்போர் மீது தமிழக, புதுச்சேரி அரசுகள் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று மத்திய திட்டத்துறை இணையமைச்சர் வி.நாராயணசாமி வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து புதுச்சேரியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்தியாவில் தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரித்து தமிழகத்திலும்,புதுச்சேரியிலும் ஒரு சில அரசியல்வாதிகளும் ஒரு சில அமைப்பினரும் பேசி வருகின்றனர்.

பலமுறை கைது செய்யப்பட்டு நடவடிக்கை எடுத்தப் பின்னரும் தொடர்ந்து வைகோ விடுதலைப் புலிகளை ஆதரித்து வருகிறார். தடைசெய்யப்பட்ட இயக்கத்துக்கு ஆதரவாக யார் செயற்பட்டாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

அவர்கள் தேசவிரோதிகள். எனவே, அவர்கள் மீது தமிழக, புதுச்சேரி அரசுகள் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழகத்தில் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான இளங்கோவன் வீடு மீது ஒரு கும்பல் தாக்குதல் நடத்தியுள்ளது. இதுதொடர்பாக தமிழக முதல்வர் நடவடிக்கை எடுத்து, அவர்களைக் கைதுசெய்துள்ளார்.

அதை நாங்கள் வரவேற்கிறோம். அதே நேரத்தில் தடை செய்யப்பட்ட இயக்கங்களை ஆதரிப்போர் மீது தேச விரோத சட்டம் பாய வேண்டும் என்று தெரிவித்தார்.



கார்த்திகைத் தீபத் திருநாள் இன்று கொண்டாடப்படுகிறது இதையொட்டி சென்னையில் விதம்விதமான அகல்விளக்குகள் விற்கப்படுகின்றன. விளக்குகளை ஆர்வமுடன் வாங்குகின்றனர் பெண்கள்.

# இலங்கை - இந்திய மீனவரின் பாதுகாப்பு: மீன்பிடித்தொழில் புரிந்துணர்வு ஒப்பந்தம்

## அகில இந்திய மீனவர் சங்கம் கோரிக்கை

சென்னை, டிச. 01

தமிழ்நாடு மற்றும் இலங்கை மீனவர்கள் பாதுகாப்பாக மீன்பிடிப்பதற்கு இருநாட்டு மீனவப் பிரதிநிதிகளும், அரசு அதிகாரிகளும் கொண்ட ஒரு குழுவை அமைத்து அவர்களின் ஆலோசனைப்படி மீன்பிடித் தொழிலில் இருநாட்டு கூட்டு உடன்படிக்கை பாதுகாப்புச் சட்டத்தை உருவாக்கவேண்டும் - என்று அகில இந்திய மீனவர் சங்கப் பொதுச் செயலாளர் ராஜா கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

வரும் காலத்தில் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் துப்பாக்கிச் சூடு, தாக்குதல், படகுகளை சேதமடைய செய்தல் போன்ற சம்பவங்களில் இருந்து முழுமையாக பாதுகாக்கப்பட வேண்டும் என்றால், தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்பகுதியில் மீன்பிடிக்கவும், அதேபோல இலங்கை மீனவர்கள் இந்தியக் கடல் எல்லையில் மீன்பிடிக்கவும் இரண்டு நாடுகளும் ஒரு புரிதல் மீன்பிடி தொழில் ஒப்பந்தம் செய்ய வேண்டும்.

இதன் அடிப்படையில் தமிழ்நாடு மற்றும் இலங்கை மீனவர்கள் பாதுகாப்பாக மீன் பிடிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேலும் இருநாட்டு மீனவப் பிரதிநிதிகளும், அரசு அதிகாரிகளும் கொண்ட ஒரு குழுவை அமைத்து அவர்களின் ஆலோசனைப்படி மீன்பிடித் தொழிலில் இருநாட்டு கூட்டு உடன்படிக்கை பாதுகாப்புச் சட்டத்தை உருவாக்கவேண்டும் - என்றுள்ளது.

# ராஜிநாமா செய்வாரா கருணாநிதி?

## கேள்வி எழுப்புகிறார் ஜெயலலிதா

சென்னை, டிச. 01

பால் விசாரணை ஆணைய அறிக்கையை வெளியிட்டார் என தானே தன் குற்றத்தை ஒப்புக் கொண்ட முதல்வர் கருணாநிதி, தவறுக்குப் பரிகாரம் தேடும் விதத்தில் தனது பதவியை ராஜிநாமா செய்வாரா - என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து நேற்றுமுன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையின் விவரம் வருமாறு -

லிபரான் விசாரணை ஆணைய அறிக்கை கசிந்ததற்கு பொறுப்பேற்று மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் ராஜிநாமா செய்ய வேண்டும் என்று நான் வலியுறுத்தினால், என் மீது சீறிப் பாய்கிறார் முதல்வர் கருணாநிதி.

சிவகங்கையில் போட்டியிட்ட சிதம்பரம் வெற்றி பெற்றார் என அறிவிப்பதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் கருணாநிதி செய்தார். அவருக்கு ஆதரவாக, விசுவாசமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார் சிதம்பரம்.

தனக்கு ஆதரவாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஒரே அமைச்சரான சிதம்பரமும் மத்திய அமைச்சரவையில் இருந்து வெளியேற்றப்பட்டு விட்டால், தனது நிலைமை இன்னமும் மோசமாகி விடும் என்பதால்தான் சிதம்பரத்துக்கு ஆதரவாக அறிக்கை கருணாநிதி விடுகிறார்.

ஒரு சம்பவத்துக்காக விசாரணை ஆணையம் நியமிக்கப்படுவதும், அந்த ஆணையம் அதற்கான அறிக்கையை அரசுக்குத் தாக்கல் செய்வதும் பொதுவான நடைமுறைதான்.

அப்படி வெளியிடப்படுவதற்கு முன்பு அந்த அறிக்கைகள் எதிர்க்கட்சியினரால் வெளியிடப்படுவது உண்டு என்றும், அந்த வகையில் பால் விசாரணை ஆணைய அறிக்கையை தாம் முன்பாகவே வெளியிட்டார் எனக் கூறி அதற்காக தார்மிகப் பொறுப்பேற்று அப்போதைய முதல்வரோ, அமைச்சரோ பதவி விலகினார்களா என்று கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.



ஆளும் கட்சியில் மத்திய அமைச்சராக இருந்து கொண்டு சிதம்பரத்தால் விசாரணை ஆணைய அறிக்கையின் சில பகுதிகளைத்தான் கசிய விட முடிந்தது. ஆனால், எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும்போதே முழு அறிக்கையை தன்னால் வெளியிட முடிந்தது என கருணாநிதி பெருமை அடித்துக் கொள்கிறார்.

அப்படியென்றால், அதற்கு பொறுப்பேற்று எதிர்க்கட்சித் தலைவர் பதவியை கருணாநிதி ராஜிநாமா செய்திருக்க வேண்டும். ஆனால், அதை அவர் செய்யவில்லை.

அதற்குப் பரிகாரமாக இப்போது வகித்து வரும் முதல்வர் பதவியை கருணாநிதி ராஜிநாமா செய்தால், அது தமிழக மக்களுக்கு நன்மை பயப்பதாக இருக்கும் - என்றுள்ளது.

**இந்தியச் செய்திகள்**

# ஜெயலலிதாவின் வீட்டுக்கு முன்னால் அ.தி.மு.க. பிரமுகர் தீக்குளிக்க முயற்சி

சென்னை, டிச. 01

சென்னையில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதாவின் வீட்டின் முன்னால் அவரது கட்சியைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் தீக்குளிக்க முயன்றார்.

உட்கட்சித் தேர்தல் தொடர்பான பிரச்சினையில் அவர் இந்த முயற்சியில் ஈடுபட்டு இருக்கக் கூடும் என கட்சி வட்டாரத்தில் தெரிவிக்கப்படுகிறது. அவரிடம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சென்னையில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதாவின் வீடு, போயஸ் தோட்டத்தில் அமைந்துள்ளது. பாதுகாப்புக்காக அவரது வீட்டின் முன்பு பொலிஸார் நிறுத்தப்பட்டிருப்பது வழக்கம்.

இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை காலை குழுவொன்று போயஸ் கார்டன் வந்தது. அதிலிருந்த ஒருவர் உடலில் மண் எண்ணெய் ஊற்றி தீ வைக்க முயன்றார்.

அப்போது பொலிஸார் பாய்ந்து சென்று தடுத்தனர். அவரிடம், தேனாம்பேட்டை பொலிஸார் விசாரணை நடத்தினர். அதில், அவரது பெயர் குமாரவேல் என்பதும், அவர் அ.தி.மு.க. செயலாளர் என்பதும் தெரிய வந்தது.

தென் சென்னை மாவட்ட உட்கட்சித் தேர்தல் தொடர்பான பிரச்சினையால் குமாரவேல் இதுபோன்ற நடவடிக்கையில் ஈடுபட்டார் என கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# இலங்கையின் தாக்குதலிலிருந்து மீனவரை நிரந்தரமாகக் காக்க நடவடிக்கை எடுக்குக!

## மண்டபம் வந்தடைந்த புதுகை மீனவர் கோரிக்கை

இலங்கைக் கடற்படையின் தாக்குதல், சிறைப்பிடித்தல் சம்பவங்களிலிருந்து நிரந்தரமாக மீனவர்களைப் பாதுகாக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று இலங்கைச் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டு மண்டபம் வந்தடைந்த தமிழக மீனர் கோரிக்கை விடுத்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம், ஜெகதாபட்டினத்தைச் சேர்ந்த மீனவர்கள் ஏராளமானோர் கடந்த 2ஆம் திகதி காங்கேசன் துறை முகத்தில் இருந்து 23 கடல்மைல் தூரத்திற்கு அப்பால் 5 விசைப்படகுகளில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு ரோந்து வந்த இலங்கைக் கடற்படையினர் 18 பேரை பிடித்துச் சென்றனர். நவம்பர் 3ஆம் திகதி மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்படுத்தி 15 நாள் சிறையில் அடைத்தனர். 15 நாள்களுக்கு பின்னர் நீதி மன்றில் தமிழக மீனவர்கள் ஆஜர்படுத்தப்பட்டனர். இவர்களை விடுதலை செய்ய நீதிபதி மறுத்தார். இதனால் 18 மீனவர்களும் சிறையில் உண்ணாவிரதம் இருந்தனர்.

இதையடுத்து கடந்த 24 ஆம் திகதி இவர்களை இலங்கை அரசு விடுவித்தது. இலங்கைக் கடற்படையினர் மீனவர்களை கடந்த வெள்ளியன்று இந்தியக் கடலோரக் காவல் படையிடம் ஒப்படைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவிருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆசி வேண்டி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் பிரமுகர்கள் நேற்று நல்லூர் கந்தசுவாமி கோயில்,நயினாதீவு நாகவிகாரை ஆகிய தலங்களில் வழிபாடுகளை மேற்கொண்ட போது எடுக்கப்பட்ட படங்கள்.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் விசேட வழிபாட்டில் கட்சியின் பிரமுகர்கள் ஈடுபட்ட பின்னரும், நயினாதீவு நாகவிகாரையில் வழிபாட்டின் பின்னர் விகாராதிபதியுடன் கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள் - லக்ஸ்மன்)*

# புதிய சவால்களை எதிர்கொண்டு மக்களுக்குரிய பணிகளைச் செய்தால் வெற்றி இலக்கை எட்டலாம்

## செலான் வங்கி நெல்லியடி கிளைத் திறப்பு விழாவில் மத்திய வங்கி ஆளுநர்

வடமராட்சி, டிசெ.1

நாடு இன்று புதிய சவால்களை மட்டுமல்லாது புதிய வாய்ப்புகளையும் எதிர்கொண்டுள்ளது. இவற்றினைச் சரியான வகையில் கையாண்டு மக்களுக்குரிய பணிகளைச் செய்தால் வெற்றியிலக்கை வங்கிகள் எட்ட முடியும். இலங்கை புதிய பொருளாதாரத்தை நோக்கிப் பயணம் செய்கிறது.புதிய அபிவிருத்திகளும் இடம் பெறுகின்றன. இதுவரை காலமும் செலான் வங்கியின் முதலீடு இரண்டாயிரம் கோடி டொலராக இருந்து வந்தது. அடுத்து வரும் வருடங்களில் இது நான்கு கோடி டொலராக அதிகரிக்கும். புதிய முதலீடுகள், புதிய திட்டங்களில் மக்களுக்கு மிகுந்த ஆர்வம் உண்டு.

இவ்வாறு இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் நெல்லியடியில் செலான் வங்கிக் கிளையை நேற்றுத் திறந்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

நிகழ்வின் ஆரம்பத்தில் மத்திய வங்கியின் ஆளுநர், செலான் வங்கியின் தலைவர் ஈஸ்ட்மன் நாரங்கொட, ஜனாதிபதியின் நிதி ஆலோசகர் கலாநிதி திருமதி ராணி ஜெயமகா, செலான் வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆர்.நடராசா,பொது முகாமையாளர் அஜித பஸ்கேல் மற்றும் செலான் வங்கிப் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் ஆகியோர் நெல்லயடிச்சந்தியிலிருந்து மங்கள வாத்தியத்துடன் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர்.

மத்திய வங்கி ஆளுநரால் செலான் வங்கிக்கிளை திறக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ்.நாகவிகாராதிபதி ஸ்ரீவிமல் தேரர், நெல்லியடி முருகமூர்த்தி ஆலய பிரதம குரு சிவஸ்ரீ அ.செல்வராசா, கரவெட்டிப் பங்குத் தந்தை அருட்திரு.எமில்போல், யாழ்.ஜும்மாப்பள்ளிவாசல் மௌலவி சலீம் நௌஷாத் ஆகியோர் ஆசியுரைகளை வழங்கினார்கள்.

**முதலீடு செய்யப்படும் பணம் அபிவிருத்திக்கே**

இந்நிகழ்வில் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

யாழ்.குடாநாட்டு செலான் வங்கிக் கிளைகளில் முதலீடு செய்யப்படும் பணம் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட மாட்டாது. அப்பணம் இப்பிரதேச அபிவிருத்திகளுக்கே பயன்படுத்தப்படும். இவ்வங்கிக் கிளைக்கென மூன்று மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளோம்.

1987 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட செலான் வங்கி 2008 ஆம் ஆண்டு வரை சிறப்பாக செயற்பட்டது. இடையில் பாதை மாறினாலும் தற்போது உறுதியான நிலையில் உள்ளது. உலகத்தில் அமெரிக்காவில் 100 வங்கிகளும், பிரித்தானியாவில் 48 வங்கிகளும் மூடப்பட்டுள்ளன. ஆனால், இலங்கையின் பொருளாதாரம் சிறப்பாக உள்ளது. இது உலகுக்கே ஓர் எடுத்துக்காட்டாகும்.

கடந்த பல வருடங்களாக இப்பகுதி மக்கள் மிகுந்த கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார்கள். செலான் வங்கி வருகையால் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இப்போது மிக முக்கியமான தருணம் ஒன்றில் நாடு இருக்கிறது. புதிய சவால்கள் மட்டுமல்லாது புதிய சந்தர்ப்பங்களும் எமக்கு வாய்த்துள்ளன. சவால்களை சரிவர எதிர்கொண்டு சந்தர்ப்பங்களை நாம் தக்கவாறு பயன்படுத்த வேண்டும்.

நான் இப்போது யாழ்ப்பாணத்துக்கு இரண்டாவது தடவையாக வந்துள்ளேன் . எனது முதல் வருகையின் போது நான் யாழ்ப்பாணத்தில் பார்த்ததைவிடவும் நிறைய மாற்றங்களை இப்போது பார்க்க முடிகின்றது.

**புதிய முதலீடுகளில் மக்கள் ஆர்வம்**

போர் முடிவடைந்து, வன்முறைகள் இல்லாது போயுள்ள இச் சூழலில் மக்கள் புதிய முதலீடுகளில் ஆர்வம் காட்டத் தொடங்கி உள்ளனர். இந்த மக்களுக்குச் சரியான நேரத்தில் துணை செய்யவேண்டியது வங்கிகளின் பொறுப்பாகும். இதனைச் செலான் வங்கி நிச்சயமாகச் செய்யும் என்று நம்புகிறேன் - என்றார்.

இந்த நிகழ்வில் செலான் வங்கியின் தலைவர் ஈஸ்ட்மன் நாராகொட பேசுகையில் கூறியதாவது:-

வடக்கின் வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதற்கு குறிக்கோள் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. மக்களின் மீள் குடியேற்றம், புனர்வாழ்வு, அபிவிருத்தி போன்றவை அதிரடியாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது மட்டுமல்ல, வடக்கில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை நிலை நிறுத்துவதும் அவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதும் கூட இதில் அடங்கும்.

ஒரு காலத்தில் போரில் மூழ்கிக் கிடந்த இந்தப் பிரதேசத்தை மீண்டும் கட்டியெழுப்புவதில் அரசாங்கம் முன்னிலையில் இருந்து செயற்பட்டு வரும் அதேவேளையில் ஒரு காலத்தில் பொருளாதார உறுதிப்பாட்டுடன் விளங்கிய இப்பிரதேசம் மீண்டும் உற்பத்தித் துறையில் எழுச்சி பெற்றுச் செயற்படுவதற்கு செலான் வங்கியும் உறுதுணையாக நிற்கும் என்பதை உறுதி செய்ய விரும்புகின்றோம்.

விவசாயம், நீர்ப்பாசன சபை, மீன்பிடித்துறை , விலங்கு வேளாண்மை, உல்லாசப் பயணத்துறை போன்றவை வளர்ச்சியடைய வேண்டிய நிலையில் இருக்கும் அதேவேளை, செலான் வங்கி ஆனாது நீடித்த வளர்ச்சியை எட்டுவதற்கு இத்துறையில் பங்கு பணியாற்றும் என்பதுடன் வடக்கில் இத்துறை சார்ந்தவர்களுடன் சேர்ந்து உழைக்கவும் தயாராக இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். மின்சாரம், வீதிகள், துறைமுகங்கள், தண்ணீர் விநியோகம் போன்றவற்றுக்கான உள்கட்டுமானப் பணிகளிலும் உறுதியுடன் பங்களிப்புகளை வழங்க நாம் உறுதியாக இருக்கின்றோம். கல்வி, சுகாதாரம், கலாசாரம், இளைஞர் விவகாரங்கள் போன்றவற்றிலும் பங்களிப்புக்களை நாம் வழங்குவோம்.

நகர்ப்புறக் குடியேற்றம், வீட்டு வசதிகள் போன்ற துறைகளுக்கும் உள்கட்டுமானப் பணிகள் அவசிப்படுகின்றன.

எமது வங்கி உறுதியாக நீடித்து செயற்படும் நிறுவனம் ஆகும். எமது நிர்வாகத்தின் உபாயங்களும் நோக்கங்களும் உறுதியானவை. அவை செயற்படுத்தப்பட்டுள்ளன. எமது குழுவினர் புதிய மனித வள கொள்கைகளைச் செயற்படுத்த ஆயத்தமாக இருக்கின்றனர். உறுதிப்பாட்டுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படுவதற்கு நாம் தயாராக இருக்கிறோம்.- என்று கூறினார். (ஒ-ப-4-236)

## "கொவிசெத" சீட்டிழுப்பு முடிவுகள்

தேசிய லொத்தர் சபையின் 'கொவிசெத' 731 ஆம் இலக்க நேற்றைய சீட்டிழுப்பில் 'E' என்ற ஆங்கில எழுத்தும் 06,09,15,22 ஆகிய இலக்கங்களும் வெற்றி இலக்கங்களாக தேர்ந்து எடுக்கப் பட்டுள்ளன.

ஆங்கில எழுத்தையும் நான்கு இலக்கங்களையும் சரியாகக் குறிப்பிட்ட ஒருவருக்கு இரண்டு மில்லியன் ரூபா முதல் பரிசாக வழங்கப்படும்.

ஆங்கில எழுத்தையும் மூன்று இலக்கங்களையும் சரியாகக் குறிப்பிட்ட 12 பேருக்கு 20,000 ரூபா வீதம் இரண்டாவது பரிசாக வழங்கப்படும்.

மூன்று இலக்கங்களை மட்டும் சரியாகக் குறிப்பிட்ட 317 பேருக்கு 2,000 ரூபா வீதம் பரிசாக வழங்கப்படும்.

ஆங்கில எழுத்தையும் இரண்டு இலக்கங்களையும் சரியாக குறிப்பிட்ட 653 பேருக்கு 1,000 ரூபா வீதம் பரிசாக வழங்கப்படும்.

இரண்டு இலக்கங்களை மட்டும் சரியாகக் குறிப்பிட்ட 15,778 பேருக்கு 50 ரூபா வீதம் பரிசாக வழங்கப்படும்.

ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கத்தை சரியாகக் குறிப்பிட்ட 9,109 பேருக்கு 40 ரூபா வீதம் பரிசாக வழங்கப்படும்.

ஒரு இலக்கத்தை மட்டும் உறுதியாக குறிப்பிட்ட 2,24577 பேருக்கு 20 ரூபா வீதம் பரிசாக வழங்கப்படும்.

ஆங்கில எழுத்தை மட்டும் சரியாகக் குறிப்பிட்ட 35,316 பேருக்கு 20 ரூபா வீதம் வழங்கப்படும்.

# பதின்மூன்றாவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமது தீர்மானத்தை நேற்று முன்தினம் பகிரங்கமாக அறிவித்த ஜெனரல் பொன்சேகா, நேற்று கண்டிக்கு விஜயம் செய்து தலதா மாளிகைக்குச் சென்று வழிபட்டார்.

பின்னர் மல்வத்தைப் பீடாதிபதி வண. திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர், அஸ்கிரிய பீடாதிபதி வண. உடுகம ஸ்ரீ புத்திரசித்த தேரர் ஆகியோரைச் சந்தித்து ஆசி பெற்றார்.

அதன் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசியபோதே அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதற்கு ஜே.வி.பியின் ஒத்துழைப்பு கிடைத்திருப்பதான தகவலை அவர் வெளியிட்டார்.

அவர் அங்கு கூறியவை வருமாறு:-

எனக்கு இன்னும் படைத்துறைப் பதவியில் ஒன்றரை ஆண்டு காலம் பணியாற்ற வாய்ப்பு இருந்தது. ஆனால் அந்தப் பதவிக்கு எந்த அதிகாரங்களும் இருக்கவில்லை. உரிய பணிப்புரைகளும் கிடைக்கவில்லை. அதனால்தான் அப்பதவியில் இருந்து விலகக் கருதினேன்.

வடக்கு, கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். அதற்குப் பல்வேறு ஆலோசனைகள் கூறப்படுகின்றன. அதற்காகவே அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் முன்னர் கொண்டுவரப்பட்டது. ஆனால் அன்றிருந்த நிலைமை வேறு. இன்றிருக்கும் நிலைமை வேறு.

யுத்தம் முடிவடைந்து மக்கள் அமைதியாக வாழ்ந்து வரும் வேளை இது. வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைக்குத் தேவைப்பட்டால் 13 ஆவது திருத்தத்துக்கு அப்பாலும் செல்லலாம். ஆனால் அனைத்து மக்களும் புரிந்துணர்வுடனும் ஒற்றுமையாகவும் வாழ்வதற்கான இந்தச் சூழ்நிலை நாடாளுமன்றத்தின் அதிகாரம், அங்கீகாரத்துடன் நடைமுறைப்படுத்தப்படுவதே சாலப் பொருத்தமானது. அதன் மூலமே சிறுபான்மையினரின் உரிமைகள் முழு அளவில் உறுதிப்படுத்தப்படும்.

ஆரம்பத்தில் ஜே.வி.பியினரும் 13 ஆவது திருத்தத்தை எதிர்த்தனர். இன்று நாட்டின் நலன் கருதியும், யுத்த பீதி நீங்கி விட்டமையாலும் அவர்களும் இதன் பொருட்டு ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளனர்.

நாம் இரு பகுதியினரும் இவ்விடயத்தில் புரிந்துணர்வுடனேயே இயங்கி வருகின்றோம். இவ்விடயம் தொடர்பான பேச்சுகள் தொடர்ந்து இடம்பெறுகின்றன.

நாட்டின் பொருளாதாரம் குறித்துப் பல்வேறு முறைப்பாடுகள் கிளம்பியுள்ளன. நாட்டில் ஊழலும் லஞ்சக் குற்றங்களும் பெருமளவில் [illegible]

என்னை [illegible] சேறு அள்ளி வீசுகின்றனர். நான் அவற்றைப் பொருட்படுத்தப் போவதில்லை.

நாட்டில் வாழும் சகல மக்கள் மத்தியிலும் ஐக்கியத்தை உருவாக்கிப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதே எனது தலையாய பணியாகும்.

எதிர்காலத்தில் கட்சிபேதமின்றி நாட்டை முன்னெடுக்கவேண்டியுள்ளது. இதன் பொருட்டு ஆளும் தரப்பைச் சேர்ந்த அமைச்சர்கள், எம்.பிக்கள் முதலானோர் எனக்கு உதவ முன்வந்துள்ளனர்.

இதேவேளை, அகதி முகாம்களில் உள்ளவர்களின் மீள்குடியேற்றத்தில் இன்னும் தாமதமே நிலவுகின்றது. இவர்கள் எல்லோரும் தாம் வாழ்ந்த சொந்த இடங்களில் மீளக் குடியமர்வதற்கான வாய்ப்புகள் வழங்கப்படவேண்டும்.

இன்று பாதாள உலகக் கோஷ்டியினரும் போதைப்பொருளாளர்களுமே அரசின் அடிவருடிகளாக இருந்து வருகின்றார்கள். இவ்வாறானவர்களை நாம் ஒரு போதுமே ஆதரிக்க மாட்டோம். - என்றார் அவர்.

இந்த நிகழ்வுகளில் கண்டி மாவட்ட எம்.பிக்களான லக்ஷ்மன் கிரியெல்ல, திஸ்ஸ அத்தநாயக்க, ஏ.ஆர்.எம்.ஏ. காதர், எம்.எச்.ஏ.ஹலீம் மற்றும் டாக்டர் ஜயலத் ஜயவர்தன, முன்னாள் எம்.பிக்களான திருமதி ரேணுகா ஹேரத், எஸ்.இராஜரட்ணம், மாகாணசபை உறுப்பினர்களான லாபீர் ஜெயினுலாப்தீன், எம்.ஆர்.எம். அம்ஜாட், திருமதி ஷாந்தினி கொங்கஹகே உட்பட [illegible] கலந்து கொண்டனர்.

(அ-சி)

# ஜனாதிபதியைச் சந்திக்க விரும்புகிறது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி

## ஊடகப் பேச்சாளர் தகவல்

கொழும்பு, டிசெ.1

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பிரதிநிதிகள் குழு ஒன்று இந்த வாரத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திக்கவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக கட்சியின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்திருப்பவை வருமாறு:-

''நடைறெவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் எவரை ஆதரிப்பது என்பது தொடர்பாக ஆராய்ந்துள்ள அதேவேளை, இத்தேர்தலில் தமிழ் மக்களின் நிலைப்பாடு, கிழக்கு மாகாணத்தைப் பலப்படுத்தும் சில முக்கிய அடிப்படைத் தவல்கள் பற்றி ஜனாதிபதியுடன் கலந்துரையாடவுள்ளோம்.

இது தொடர்பாகக் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கட்சியின் கூட்டத்தின்போது கட்சியின் தலைவர் தலைமையில் ஏழு பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவினர் ஜனாதிபதியையும் மேலும் ஏனைய அரசின் உயர்மட்டப் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசவுள்ளனர். இதன்போது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளையும், கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான நடைமுறைகள் குறித்தும் கிழக்கு மாகாண மக்கள் பற்றியும் மேலும் சில முக்கியமானவர்களின் நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடுவர்.

இந்தக் கலந்துரையாடல்களின் பின்னர் ஒரு சுமூகமான நிலையுடன் அரசுடன் இணைந்து பணியாற்ற முடியும் என்று நாங்கள் உறுதியாக நம்புகின்றோம்'' - என்றார். (சி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பிரான்ஸிலிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்பட்டுள்ளது என்றும் - எதிர்வரும் மூன்று மாதங்களுக்குப் பிரான்ஸிலிருந்து கோழி களை இறக்குமதி செய்யப்போவதில்லை என்றும் விலங்குகள் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் திணைக் களத்தின் அதிகாரி வைத்திய கலாநிதி சுவர்ண ஹேரத் தெரிவித்தார் (அ-சி)

## இடம்பெயர்ந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று கூறப் பட்டது.

வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத் தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் மீள் குடியேற்றப்பட்ட வாக்காளர்களினதும் தகவல்களைச் சேகரிக்கும் பணிகள் இடம்பெறுகின்றன என்று தேர்தல்கள் செயலகம் மேலும் தெரிவித் துள்ளது.

அவர்களுக்குத் தேவையான அடையாள அட் டைகள், கிராமசேவையாளர் அத்தாட்சிப் பத்திரம் ஆகியவற்றை இந்தக் குழுவினர் ஊடாகப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறப்பட்டது.

தற்போது நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழும் வடக்கு, கிழக்கு வாக்காளர்கள் பற்றியும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் எனத் தேர்தல்கள் செயலகம் குறிப்பிடுகின்றது. (சி)

## வன்னி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆஸி. வெளிவிவகார அமைச்சர் ஸ்ரீபன் ஸ்மித் இந்த உறுதிமொழியை வழங்கி உள்ளார்.

இடம்பெற்று முடிந்த பொதுநலவாய அமைப் பின் உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட அவரை அங்கு இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ரோஹித் போகொல்லாகம சந்தித்து உரையா டினார்.

அப்போதே சமீபத்தைய மீள்குடியேற்ற நடவ டிக்கைகள் திருப்பதி தருகின் றன என்றும் முகாம் அகதிகளின் மீள்குடி யேற்றம் மற்றும் புனர் வாழ்வு நடவடிக் கைகளுக்கு ஆஸி தொடர்ந்தும் உதவி செய்யும் என்றும் அவர் தெரிவித்தார்.

## யாழ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுக்கு எதிரான செய்திகளை வெளியிட வேண்டாம் என இனந்தெரியாத நபர்கள் அந்த ஊடகங்களுக்கு எதிராக அழுத்தங்களைப் பிர யோகித்து வருகின்றனர் என அவர் சுட்டிக்காட் டியுள்ளார்.

யுத்தத்தின் பின்னரான தற்போதைய இலங் கையில் ஜனநாயகப் பொறிமுறை உரிய வகை யில் பேணப்படவேண்டும் என அவர் தெரிவித் துள்ளார். மாற்றுக்கொள்கைகளை உடைய ஊடகங்கள் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப் பட்டு வருகின் றன என அவர் சுட் டிக் காட்டியுள் ளார். ஊடக அடக்கு முறையைக் கட்ட விழ்த்து விடுவோ ருக்கு எதிராக அரசு கடுமையான நட வடிக்கைகளை எடுக் கவேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-சி)

## ஜனாதிபதி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்தியதாகத் என்று தகவல் இல்லை.

அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் கட்சியின் வேட் பாளர் எனின் ஐம்பதாயிரம் ரூபாவும், சுயேச்சை வேட்பாளர் எனின் எழுபத்தியையாயிரம் ரூபா வும் கட்டுப்பணம் செலுத்தவேண்டும்.

வேட்பு மனுக்கள் டிசெம்பர் 17 ஆம் திகதி காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை ஏற்றுக் கொள் ளப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை இத்தேர்தலில் போட்டியிட ஐவர் முன்வந்திருக்கின்றனர். (அ-சி)

## வேட்புமனு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றியபோதே அவர் இத்தகவல் களைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசு எவ்வாறான கொள்கைப் பிரகடனத்தை முன்வைக்கப்போகின்றது என்பதனை இப்போது அனைவரும் எதிர்பார்த்திருக்கின்றனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது அரசு முன்வைத்த மஹிந்த சிந்தனைத் திட்டம் பல் வேறு சிறப்புகளைத் தந்தமையின் காரணமாகவே மக்களினது எதிர்பார்ப்பு புதிய தேர்தல் தொடர் பில் அதிகரித்துள்ளது - என்றார்

இதேவேளை, எதிர்க்கட்சியின் பொதுவேட்பாள ராகப் போட்டியிடும் ஜெனரல் சரத்பொன்சேகா நேற்று தலதாமாளிகைக்குச் சென்று வழிபட்ட துடன் மல்வத்த மற்றும் அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களையும் சந்தித்தார்.

## பன்றிக்காய்ச்சல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வைரஸ் தொற்றுக்குள்ளாகி இரத்தின புரிப் பகுதியைச் சேர்ந்த யுவதி ஒரு வர் நேற்று முன்தினம் உயிரிழந்தார் என வைத்தியசாலை வட் டாரங்கள் தெரிவித்தன.

இதேநேரம் 400இற்கும் மேற்பட்டவர் கள் இந் தக் காய்ச்சல் தொற்றுக்கு உள்ளா கியுள்ளனர் என்று சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

மத்திய மாகாணத்தில் இந்நோய் வேகமாகப் பரவி வருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-சி)

## புலிஉறுப்பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவுக்குள் நுழைந்து அங்கிருந்து வெளி நாடுகளுக்குச் சட்டவிரோதமாகச் செல்வோரின் எண்ணிக்கை புலிகள் இயக்கத்தின் அழிவுடன் அதிகரித்திருப் பதாகக் கூறப்படுகின்றது.

கடவுச்சீட்டு மற்றும் விஸாவைப் பெற் றுக் கொண்டு இந்தியாவுக்குள் நுழையும் இலங்கைத் தமிழர்கள்இந்தியாவிலிருந்து சட்டவிரோதமான முறையில் வெளிநாடுகளுக்குத் தப்ப முயற்சிக் கின்றனராம்.

இப்படி வெளிநாடுகளுக்குத் தப்ப முயற்சிப் பவர்களில் அநேகர் புலிகள் அல்லது புலி ஆதர வாளர்கள் என்றும் இந்திய புலனாய்வாளர்கள் நம்புகின்றனர்.

அவ்வாறு இந்தியாவை வந்தடைந்து பின் மேற்குலக நாடுகளுக்குச் செல்ல முயன்ற இலங்கைத் தமிழர்கள் சுமார் 40 பேர்வரை இந்திய விமான நிலையங்களில் வைத்து அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் இந்தியப் புலனாய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (அ-சி)


இன்று ஆரம்பம்
NEW SCIENCE ACADEMY
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்
தரம் - 9, 10, 11
புதிய கல்வியாண்டு 2010
ஆரம்பம் 01.12.2009 Tu.2.30 p.m.
தொடர்பு:
NEW SCIENCE ACADEMY
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்

யாழ்.முன்னணி ஆசிரியர் சேவையில்
DAY CLASS
கலை,வர்த்தகம்
ஆரம்பம் 02.12.2009 புதன் 7 a.m
பாடம் மாறிப்படிக்கும் மாணவர்களுக்கு விசேட,மேலதிக வகுப்புக்கள்
யூனிவேர்சல்
(யாழ்/இந்துமகளிர் கல்லூரி அருகே)

இன்று ஆரம்பம்
SUBRA -14
சித்தன்கேணி
வட்டுக்கோட்டை
A/L Day Class (8மணிam)
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவு
எமது வழமையான ஆசிரியர்குழு
தரம் 1 முதல் O/L வரை புதிய பிரிவுகள் ஆரம்பம்.

20 ஆம் ஆண்டினில்
ஏசியன் அக்கடமி
கேணியடி
கொக்குவில் மேற்கு,
கல்வியாண்டு 2010
ஆரம்பம் :
02.12.2009
புதன் மாலை 4.30
எமது வழமையான ஆசிரியர் குழு

DAY CLASS
CHEMISTRY
(INORGANIC)
MON,WED- 4.00-6.00 (p.m)
(ORGANIC)
Sat,Sun2.00-4.00 p.m
By : VAKEESAN
ஆரம்பம்
02.12.2009
NEW EDUCATION WORLD
ஆனைப்பந்தி
(குருகுலம் அருகில்)

நாளை ஆரம்பம்
விக்னா
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்.
A/L DAY CLASS
கலை பிரிவு
Tam.- திரு.குழந்தை
Eco.- திரு.கஜீந்திரன்
H/C.- திரு. N.T.தான்
Log.-திரு. S.S.சந்திரன்
Geo.- திரு.சுரேன்
P/Sc.-திரு. ஸ்ரீரங்கநாத்
Hist.-திரு. S.S.தாஸ்
Chri.- திரு. யூட்
Drama- திரு. மயூரன்
03.12.2009 8 மணி
புதன்

பல சகாப்தங்களின் பின்னர்
Honda, Hero Honda
மோட்டார் சைக்கிள்கள்
கொழும்பு விலையில்
விற்பனையாகின்றது
என்பதை
மகிழ்ச்சியுடன்
தெரியப்படுத்துகின்றோம்.
HERO HONDA


16 ஆம் பக்கம் பார்க்கவும்
RG இரத்தினகோபால்ஸ்
63,65,கன்னாதிட்டி றோட்,யாழ்ப்பாணம்.

கொழும்பு இறையியல் கல்லூரி
யாழ்ப்பாணம் கல்வி நிலையம்
யாழில். இறையியல் கல்வியில் பூக்கின்ற ஓர் அரிய வாய்ப்பு
யாழ். மண்ணில் கொழும்பு இறையியற் கல்லூரி யாழ். கல்வி நிலையம் ஆசிய இறையியற் சங்கத்தின் (ATA) அங்கீகாரத்துடன் தனது இறையியலில் இளமாணி (B.Th.), இறையியலில் டிப்ளோமா (Dip.Th.) ஆகிய கற்கை நெறிகளை 2010 ஜனவரி மாதம் ஆரம்பிக்கின்கிறது.
இறையியலில் டிப்ளோமா, இளமாணிக் கல்வியினை கற்க விரும்புவோர் இதற்கான விண்ணப்பப்படிவத்தினை கொழும்பு இறையியற் கல்லூரி யாழ். கல்வி நிலையத்தில் பெற்று பூர்த்தியாக்கி கல்விக்கான பதிவனை மேற்கொள்ள முடியும்.
விண்ணப்ப முடிவுத் திகதி 10 டிசெம்பர் 2009 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனையும் தங்களிற்கு மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.
மேலதிக விவரங்களை பெற எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளிற்கு :- கொழும்பு இறையியற் கல்லூரி -யாழ் கல்வி நிலையம்.
32/1, விதானையார் வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 8513, 0779177211
மின்னஞ்சல் :- ctsjsffna@sltnet.lk
(C/562764)

D.M.I -
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
A/L Day Class
புவியியல் N. பாபு
பிரிவு I - திங்,புதன்,வெள்ளி-7 am
பிரிவு II - சனி, ஞாயிறு - 8am
ஆரம்பம் - 02.12.2009
(புதன் - 7 am)

நாளை ஆரம்பம்
காலை 6.15
A/L Day Class
பொருளியல்
ஓ. பிரதீபன்
New Science Hall
கன்னாதிட்டி, யாழ்நகர்.

சலுகை கட்டண வசதியுடன்
அட்சயா
பியூட்டி பாலர் அன் அக்கடமி
மீள் அழகைப் பெற
(அரவிந் ஸ்ருடியோவிற்கு அருகில்)
புருவ வடிவமைப்பு, கருமை நிறம் நீக்கும் பேசியல், பருக்கள் இல்லாமல் செய்யும் பேசியல், தலைமுடி அயன் பண்ணுதல், தலைமுடி சுருட்டுதல், கழுத்து கறுப்பு நீக்குதல் என்பனவற்றுக்கு அட்சயாவை நாடுங்கள்.
பேசியல், மேக்கப், கெயாஸ்டைல், ஐசிங், தலைமுடி சுருட்டுதல், தலைமுடி அயன் பண்ணுதல், சாறிவேக் (5), பிளவுஸ் கட்டிங் (6) மேற்படி பயிற்சி நெறிகள் நடைபெறுகின்றன. உடன் பதிவினை மேற்கொள்ளவும்.
றிச் கேக் - 30, ஐசிங் கேக் - 45,ஐசிங் வெடிங் கேக் - 7000 ஓடருக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.
அட்சயா,
461, நாவலர் றோட்,
அத்தியடிச் சந்தி,
யாழ்ப்பாணம்.

நாளை
(வர்த்தகப் பிரிவு ஆரம்பம்)
காலை 9
Day Class
D.M.I
Jaffna
05.12.2009
(கலைப் பிரிவு)
காலை 8 மணி

யாழ்நகரில் புதியதோர் உதயம் .....
டேவிற் பீரிஸ் மோட்டார் கொம்பனி பிறைவேட் லிமிடெட் இன் அங்கிகரிக்கப்பட்ட விற்பனை முகவர்

S.J. மோட்டோர்ஸ்

02.12.2009 (புதன்கிழமை) 09.30 – 11.30 மணிவரை உள்ள சுபவேளையில் திறந்து வைக்கப்படுகிறது என்பதனை மகிச்சியுடன் எமது வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றோம்.
Bajaj
அன்று (2.11.2009) கொள்வனவு செய்யும் பஜாஜ் மோட்டார் சைக்கிள் ஒவ்வொன்றுக்கும் மேலதிகமாக 1500/= பெறுமதியான ஹெல்மட் இலவசமாக வழங்கப்படும்
TP : 021 2224554, 0777 238373 இல : 73, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.12.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.